Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் – 28 | விலை – 30 ரூபா | செய்தி : 021 493 0000 | விளம்ப... 021 4...

சுடர் :35 கதிர் :42 மார்கழி 22 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 07 ஜனவரி 202... வள்ளு...



# ‘13’ கொடுக்க முடியாது!

## ஐரோப்பிய தூதுக் குழுவிடமும் கோத்தாபய திட்டவட்டம்

கொழும்பு, ஜனவரி7

13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் உள்ள சில ஏற்பாடுகள் நடைமுறைச் சாத்தியமில்லை. அவற்றுக்குப் பதிலாக அரசியல்வாதிகள் மாற்றுத் தீர்வு தொடர்பாகச் சிந்திக்க வேண்டும்.இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார். 23

## ரயிலுடன் மோதி ஒருவர் உயிரிழப்பு

வவுனியா, ஜன.7

வவுனியா தேக்கவத்தைப் பகுதியில் ரயிலுடன் மோதி ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார். 23

## முச்சந்தி முரளி



"13 ராசியில்லாத நம்பர் என்டு சொல்லுறதை நம்பத்தான் வேணும் போல!"

## புரிந்துணர்வே தீர்வு | இது டியூவின் ஆலோசனை

கொழும்பு, ஜன.7

சிங்கள - தமிழ் மக்களுக்கிடையில் புரிந்துணர்வு ஏற்படுவதன் மூலம் இல்குவில் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளலாம்.

இவ்வாறு தெரிவித்தார் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான டியூ குணசேகர. 23

## விசா இல்லாததால் வில்லங்கம்

கொழும்பு, ஜன.7


செல்லுபடியான விசா இன்றி நாட்டில் தங்கியிருந்த 136 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பதில் பொலி 23

## பதவியை பறித்தது வெடிகுண்டு

கொழும்பு, ஜன.7

உயிர்த்த ஞாயிறு தொடர் தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் இடம்பெறும் விசாரணைகளுக்கு அமைய, மூத்த பொலிஸ் அத்தியட்சரான சஞ்ஜீவ பண்டாரவைத் 23




## கொட்டத்தை அடக்குங்கள்


### சஜித் சீற்றம்

கொழும்பு, ஜன.7

வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள். அவர்களைக் கூண்டோடு கைதுசெய்து சிறையில் அடைக்க வேண்டும் என்று கூறுவதற்கு நவ சிங்கள ராவய அமைப்புக்கு எந்தத் தகுதியும் இல்லை. இனவாதக் கருத்துக்களைப் பரப்பி மீண் 23

## 100 அடி பள்ளத்தில் பாய்ந்தது பஸ்

### 12 பேர் உயிரிழப்பு பலர் படுகாயம்



கொழும்பு, ஜன.7

பதுளை, பசறையில் இலங்கை போக்குவரத்துச் சபையின் பயணிகள் பஸ் 100 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது. அதில் 12 பேர் உயிரிழந்தனர். 50க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்த 07

## பணிப்பாளருக்கு எதிராக வலிகாமத்தில் போர்க்கொடி

யாழ்ப்பாணம், ஜன. 7

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைத்துள்ள இலங்கை ஆசிரியர் சங்கம், அவருக்கு எதிராக நாளை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாணக் 06

## எவராலும் முடியாது

### யாப்பா 'தெனாவட்டு'

கொழும்பு, ஜன.7

ஜனாதிபதியின் அக்கிராசன உரையை எவரும் கேள்விக்கு உட்படுத்த முடியாது. பெரும்பான்மைச் சமூகத்தின் ஆதரவுடன் அரசு ஒன்றை அமைக்க முடியும் என்பதை உறுதிப்படுத்தி 23

## மசிந்தார் மைத்திரி

கொழும்பு, ஜன.7

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் வாக்குமூலம் வழங்குவதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இணக்கம் தெரிவித்துள்ளார். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பான வழக்கு நேற்றுக் காலை 06

## அபிவிருத்திக்கு ‘ஆப்பு’

கொழும்பு, ஜன.7

பெரும் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள புதிய அரசு நாடாளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் மிகப் பெரிய அபிவிருத்தித் திட்டங்களை இடைநிறுத்துவதற்கு ஆலோசித்து வருகின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

திறைசேரியில் நிலவும் பெரும் நிதிப் பற்றாக்குறையின் காரணமாகவே அரசு இந்த முடிவை 23

## சடலத்தைப் பெற இழுபறி

### அதிகாரியின் அசமந்தமே என உறவினர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன.7

திடீர் இறப்பு விசாரணை அதிகாரியின் அசமந்தத்தால் மாரடைப்பால் உயிரிழந்தவரின் சடலத்தைத் தாம் பெறுவதில் பெரும் இழுபறியைச் சந்தித்ததாக உயிரிழந்தவரின் உறவினர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை மாரடைப்பால் சாவகச்சேரி வைத்திய சாலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார். அவரது சடலத்தை விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்குமாறு சாவகச்சேரி மாவட்ட நிதிமன்ற நீதிபதியால் அன்று பிற்பகலே பணிக்கப்பட்டது.

ஆயினும் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நீண்ட நேர தாமதத்தின் பின்னரே அங்கு வந்துள்ளார். அதன் பின்னரும் அவர் விசாரணை நடத்தாமல் நேரத்தை இழுத்தடித்துள்ளார். பின்னர் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி அங்கிருந்து அகன்றுள்ளார். எனினும் மீண்டும் அவருக்கு விசாரணையின் பின்னர் உடலைக் கையளிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது. ஒரு கட்டத்தில் இறந்தவரின் உறவினர்கள் வாகனம் ஒன்றைக் கொண்டு சென்று திடீர் இறப்பு அதிகாரியை அழைத்து வந்தனர். பின்னரே உடல் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டதாக உறவினர்கள் தெரிவித்தனர். இதே வேளை குறித்த அதிகாரி மதுபோதையில் இருந்ததாலேயே இவ்வாறு நடந்து கொண்டார் என உறவினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது குறித்துச் சம்பந்தப்பட்ட திடீர் இறப்பு விசாரணை அதிகாரியிடம் வினவியபோது " நான் சட்டத்தின் படியே நடந்து கொண்டேன். எந்தவொரு மரணம் நிகழ்ந்தாலும் உடல் கூற்றுப் பரிசோதனையின் பின்னரே ஒப்படைக்க வேண்டும் என்பது சட்டம். அத்தோடு நான் மதுபோதையில் இருக்கவில்லை" என்றும் கூறினார். (த)

# எதுவும் நடக்கவில்லை

## மகிந்த தேசப்பிரிய கவலை

கொழும்பு, ஜன.7

**கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நடந்தன என்று முறைப்பாடு செய்யப்பட்ட முறைகேடுகள் தொடர்பாக இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த நிலைமையால் எதிர்வரும் தேர்தல்களின்போது பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.**

இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சில கட்சிகளின் செயற்பாடுகள் தொடர்பாகவும், அரச வளங்கள் பயன்படுத்தப்பட்டமை தொடர்பாகவும் பல முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

அவை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது நிர்வாக அமைச்சுக்கும், அரச சேவை ஆணைக்குழுவுக்கும் அழுத்தம் கொடுக்கப்பட்டபோதும், இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

அரச ஊடகங்கள் தேர்தல் விதிமுறைகளை மீறிப் பக்கச் சார்பாகச் செயற்பட்டமை தொடர்பான முறைப்பாடுகளைப் பொலிஸாருக்கும், அரச சேவை ஆணைக்குழுவுக்கும் தெரியப்படுத்தப்பட்டபோதும் இதுவரையில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை.



முக்கியமாகச் சில இலத்திரனியல் ஊடகங்கள் தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களைக் கருத்திக் கொள்ளத் தவறியிருந்தன. என்றார். (எ)



# வேலைக்காக 'வெயிலில்'

கொழும்பு, ஜன.7

கடந்த ஆண்டு தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் வழங்கப்பட்ட நியமனங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளமையைக் கண்டித்துக் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

புதிய அரசு பதவியேற்ற பின்னர் இந்த நியமனங்கள் தொடர்பாக மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அதைக் கண்டித்தே அகில இலங்கை திட்ட உதவியாளர்களுக்கான பயிற்சி நியமனதாரிகளின் சங்கத்தால் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

கொழும்பு, காலி முகத்திடலில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் முடிவில் தங்களது கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றை ஆர்ப்பாட்டம் மேற்கொண்டோர் ஜனாதிபதி செயலகத்தில் கையளித்தனர். (எ)

## ஒவ்வொரு மாவட்டத்திலும் மும்மொழி பாடசாலைகள்

### மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜன.7

நாடு முழுவதிலும் ஆயிரம் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும். அத்துடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் மும்மொழிகளைக் கற்பிக்கும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும்.

இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

கண்டி பளிபாண ஸ்ரீ சந்திரானந்த பௌத்த மகளிர் வித்தியாலயத்தைப் பிரதமர் நேற்றுத் திறந்தார். அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய மக்கள்மய கொள்கையின் ஊடாக புதிய அரசு நாட்டை சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது. இதன்மூலமாகக்கல்வியில் பயனுள்ள மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அழிந்துபோன தேசிய பௌத்த கல்வி முறையை மேம்படுத்துவதற்கு மகா விகாரையுடன் தொடர்புபட்ட பௌத்த பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுவது மிக முக்கியமானதாகும் என்றார். (எ-22)

# காக்கைதீவுப் பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன.07.

காக்கை தீவு பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்புத் தொகுதி 10 மில்லியன் ரூபா செலவில் யாழ். மாநகர சபையால் புத்தாண்டு தினத்தன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் எல்லைப் பரப்புக்குள் உள்ள விடுதிகள், உணவகங்களில் இருந்து அகற்றப்படும் கழிவு நீரைச் சுத்திகரிப்பதில் நீண்டகால மாக எதிர்நோக்கி வந்த பிரச்சினைக்குத் தீர்வாக, மாநகர சபையின் எல்லைப் பரப்புக்குள்ளேயேகாக்கை தீவில் கழிவு நீர் சுத்திகரிப்பு பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது

இதன் மூலம் நாள் ஒன்றுக்கு 80 மெற்றிக் தொன் கழிவுநீரைச் சுத்திகரிக்கும் வகையிலான, சுத்திகரிப்பு இயந்திரப் பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் நீண்ட காலமாக யாழ். மாநகர சபை மற்றும் வலி.தெற்கு பிரதேச சபைகளுக்கிடையே காணப்பட்ட முக்கிய முரண்பாடுக்கு தீர்வு எட்டப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ந-105)



# போதையை ஒழிக்க நடவடிக்கை

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜன.7

மாணவர்களின் எதிர்காலத்துக்குச் சவால் விடுக்கும் போதைப்பொருளை இல்லாதொழிக்க முப்படையினரும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றார்கள். நாட்டின் பாதுகாப்பு இராணுவத்துடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளது.

இவ்வாறு பதில் பாதுகாப்பு பிரதானியும் இராணுவத் தளபதியுமான லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இராணுவத்தில் சேவையாற்றுபவர்களின் பிள்ளைகளின் கல்விக்கான 2019 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசல் வழங்கும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது. அந்த நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்துக் கொண்டு கருத்துரைத்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

2018 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சை, சாதாரண தர பரீட்சை, உயர்தர பரீட்சை என்பவற்றில் சித்தியடைந்த மாணவர்களின் கல்வி செயற்பாடுகளுக்கான நிதியுதவி இராணுவ தளபதியால் வழங்கப்பட்டன. (எ)

# சஜித்தே பிரதமர்!

## அசைக்க முடியாது என்கிறார் விஜயமுனி



கொழும்பு, ஜன. 7

பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பிரதமராவதை யாராலும் தடுக்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்தார். அத்தோடு சஜித்துக்காகவும் ஐக்கிய தேசியக் கட்சிக்காகவும் வீதியில் இறங்கி போராடுவதற்கும் தயாராகவுள்ளேன் என்றும் அவர் மேலும் கூறினார்.

கட்டானபிரதேசத்தில்நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு மேலும் தெரிவித்ததாவது: 'அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்படவில்லை என்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க கைது செய்யப்பட்டார். அவர் கைது செய்யப்பட்டதன் பின்னர் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இருக்கும் பலரும் துப்பாக்கிகளை கையளித்து வருகின்றனர் எனத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

காரணம் அவர்களும் அனுமதிப் பத்திரத்தைப் புதுப்பிக்கவில்லை. அவ்வாறெனில் அவர்களும் கைது செய்யப்பட வேண்டும். இவ்வாறு கைது செய்வதற்காக மக்கள் ஆணை வழங்கவில்லை. மோசடிக்காரர்களுக்கு தண்டனை வழங்குவதற்காகவே மக்கள் கோத்தாபயவுக்கு வாக்களித்தனர்' என மேலும் தெரிவித்தார். (ம)

# பெண் ஊழியருக்கு பளார் தலைமை அலுவலர் கைது



கொழும்பு, ஜன. 7

பெண் ஊழியரொருவரை அறைந்த தலைமை அலுவலர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார் என்று சம்மாந்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நிந்தவூர் கமநல கேந்திர மத்திய நிலையத்தில் பணியாற்றும் நிலைய முகாமைத்துவப் பெண் உதவியாளரை, அந்த நிலையத்தின் தலைமை கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எல்.ஏ.கார்லிக், கடந்த முதலாம் திகதியன்று கன்னத்தில் ஓங்கி அறைந்தார்எனப்பொலிஸில்முறையிடப்பட்டுள்ளது. தாக்கிய மேற்படி உத்தியோகத்தரைக் கைது செய்யவேண்டுமென அரசியல்வாதிகளும் பெண்ணுரிமை பேணும் அமைப்புகளும் போர்க்கொடி தூக்கியிருந்தன. தலைமறைவாகியிருந்த அவரை சம்மாந்துறைப் பொலிஸார், நேற்றுக் கைது செய்தனர்.

நிந்தவூர் கமநல கேந்திர மத்திய நிலையத் தலைமை கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரைக் கைதுசெய்ய வலியுறுத்தி, பெண்ணுரிமை அமைப்புகள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட ஏற்பாடுகள் செய்திருந்தன.

ஆனால், அந்த உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டமையை அடுத்து நடைபெறவிருந்த ஆர்ப்பாட்டங்கள் கைவிடப்பட்டன. (ம)



# சம்பிக்கவின் சாரதிக்கும் பிணை

கொழும்பு, ஜன. 7

விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப் பட்டுள்ள முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் சாரதிக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளது.

துஷித குமார என்ற இந்தச் சந்தேகநபர், நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில், அவர் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்னிலைப் படுத்தப்பட்டபோது, பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளார்.

2016ஆம் ஆண்டு ராஜகிரிய பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்து சம்பவம் தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)



# கசிப்பு வியாபாரம் வேண்டாம்

கிளிநொச்சி,ஜன.7

கசிப்பு உற்பத்தி மற்றும் வியாபாரத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து கிளிநொச்சி கோணாவில் கிழக்குப் பகுதியில் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கோணாவில் கிழக்கு பொது நோக்கு மண்டபத்தில் ஆரம்பமான ஊர்வலம் ஊற்றுப்புலம் சந்திவரை முன்னெடுக் கப்பட்டது.

கசிப்பு உற்பத்தி மற்றும் வியாபாரம் காரணமாக பல்வேறு பிரச்சினைகள் சமூகத்தில் எழுந்துள்ளன. அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்தனர். போராட்டம் இடம்பெற்ற பகுதிக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் வருகை தந்தார். அவரிடம் பிரதேச மக்களால் மனு கையளிக்கப்பட்டது. (க-35,6)

# முல்லை. மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்



முல்லைத்தீவைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

மாந்தை கிழக்கு,துணுக்காய்,ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு,உடையார்கட்டு,முள்ளியவளை போன் பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்துக்குப் பயணம் மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான றிசாத்பதியூதீன் தனது சொந்த நிதியில் இருந்து இந்த உதவியை வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-ரி3)

# தடை நீடிப்பு

கொழும்பு, ஜன. 7

'பெர்பச்சுவல் ட்ரசரீஸ்' நிறுவனம் மீதான தடையை இலங்கை மத்திய வங்கி மேலும் ஆறு மாத காலத்துக்கு நீடித்துள்ளது.

மத்திய வங்கியால் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளுக்கமைவாக, நேற்றுமுன்தினம் பிற்பகல் 4.30 மணிமுதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஆறு மாதங்கள் இந்தத் தடை நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# சாதனையாளர் கௌரவிப்பு

அச்சுவேலி.ஜன.7


அச்சுவேலி தெற்கு மாவடி கிராம 'ஸ்ரார்' வெளிநாட்டு ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சாதனையாளர் கௌரவிப்பும், கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் அண்மையில் கழக மைதானத்தில் இடம் பெற்றன.

கிராமத்தில் கல்வியில் சாதனை படைத்த மாணவர்கள் மற்றும் , அரசவேலைவாய்ப்பை பெற்றவர்கள் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் நிகழ்வில் 50 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ஐ)



# முள்



மன்னன் சங்கவரதன், துர்வபுரி என்ற நாட்டை ஆண்டு வந்தான். கொடூர மனம் படைத்தவன். சின்னச் சின்னத் தவறுகளுக்கும், மிகப்பெரிய தண்டனை கொடுப்பான்.
ஓய்வு நேரங்களில், தோட்டத்தில் உலாவுவான். ஒரு நாள் தோட்டத்தில் உலாவிய போது, காலில் முள் குத்தி விட்டது. 'ஆ...' என்று அலறித் துடித்தான். மருத்துவர் சிகிச்சையளித்தார்; காயத்தில், மருந்து வைத்துக் கட்டப்பட்டது.
மிகுந்த கோபம் அடைந்த மன்னன், தோட்டப் பணியாளர்கள், அத்தனை பேருக்கும், தண்டனை கொடுத்தான்.
ஒருவாரத்திற்குப் பின்னர், மீண்டும் தோட்டத்திற்குச் சென்றவன், "என் காலில் முள் குத்தினால், உடனே தூக்கிலிடப்படுவீர்..." என, பணியாளர்களை எச்சரித்தான்.
அதனால், பணியாளர்கள், நடுக்கத்துடன் தோட்டப் பாதைகளைச் சீர் செய்தனர்; ஆனாலும், மன்னன் காலில், முள் குத்தவே செய்தது.
அன்று, தோட்டப்பகுதியில் துப்புரவுப் பணியில் ஈடுபட்ட பணியாளர்கள் அனைவரையும், மன்னன் கட்டளைப் படி தூக்கிலிட்டனர். இது, தொடர் கதையானது. தோட்டத்தில் துப்புரவுப் பணி செய்ய யாரும் முன் வரவில்லை.
சிலரைக் கட்டாயமாக பணியில் ஈடுபட வைத்தனர். அவர்களும் தண்டனை பெற்றமையால், அதிருப்தி அதிகமானது.
இதற்கு முடிவு கட்ட, மதிமந்திரியை சந்தித்து, மக்கள் முறையிட்டனர். முறையான முடிவு எடுப்பது பற்றிச் சிந்தித்தார்.மந்திரி.
அன்று, தோட்டத்திற்கு மன்னன் உலாவப் போனான்.
உடன் சென்ற மந்திரி, "அரசரே போர்க்களம் செல்லும் போது, மார்புக்கும், உடலின் ஏனைய பாகங்களுக்கும் கவசம் அணிந்து கொள்கிறோம் இல்லையா அதுபோல, கால்களுக்கும் கவசம் அணிந்து கொண்டால், முள்குத்தாது அல்லவா" என்றார்.
மன்னன் யோசித்து, "ஆம் அமைச்சரே இதுபற்றி சிந்திக்கவேயில்லையே" என்றவன், உடனே தோலில் செருப்புச் செய்ய உத்தரவிட்டான்.
சில நாள்களிலேயே, மன்னனுக்கு செருப்பு தயாராகி விட்டது. மதி மந்திரியால் உயிர் பிழைத்த பணியாளர்கள் நன்றி கூறினர்.

# பொன்மொழிகள்

- நல்லபண்புகளைப்பெறுவதிலும்பிறருக்குப் புகட்டுவதிலும் ஆர்வம் காட்டுவோர் எண்ணிக்கை பெருக வேண்டும்.
- நல்லவர்களுக்கு சட்டங்கள் தேவையில்லை. ஏனெனில் அவர்கள் பொறுப்புடன் வாழ்வார்கள். கெட்டவர்கள் தங்களுக்கே உரிய சட்டத்தை உருவாக்கிக் கொள்கிறார்கள்.
- மனிதனிடம் வீரமில்லாத ஒழுக்கமோ, ஒழுக்கமில்லாத வீரமோ இருந்தால் அவன் கோழையாகவோ, முரடனாகவோ ஆகிவிடுவான்.
- சோர்வும், கவலையும்தான் வெற்றிக்குத் தடைபோடும் கற்கள்.
- மனிதனின் அறிவு உறங்கிவிட்டால் அவனது மனதில் கீழான ஆசைகள் தோன்றி வாழ்க்கையைச் சீர்குலைத்து விடும். அனைத்துத் தீமைகளும் போதிய நல்லறிவு இல்லாததால்தான் ஏற்படுகின்றன.
- அளவுக்கு மீறிய செல்வமோ, அளவுக்கு மீறிய வறுமையோ மனிதர்களை ஒழுக்கம் கெட்டவர்களாகவும், திறமையற்றவர்களாகவும் செய்து விடுகின்றன.
- கற்காமல் இருப்பதை விடப் பிறக்காமல் இருப்பதே மேல்.
- அநீதி இழைப்பவன் அநீதிக்கு ஆளானவர்களை விட அதிகமாகத் துயரமடைவான்.
- சிறந்த முறையில் முயற்சி செய்தால் அறிவைப் பெறமுடியும்.

# பாண்டா கரடி



பாண்டா கரடிகள் மத்திய சீனாவின் சிச்சுஆன் மலைப்பகுதிகளிலும் அதனைச் சுற்றியுள்ள கான்சு மற்றும் சான்க்சி மலைப் பகுதிகளிலும் வாழ்கின்றன.

பாண்டாக்கள் பாதுகாக்கப்பட வேண்டிய உயிரினங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.


சீனாவின் தேசியச்சின்னமாக டிராகன் விளங்குவதைப் போலவே பாண்டாவின் உருவமும் சீனாவின் சர்வதேச அடையாளங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

'பாண்டா' என்ற சொல் பிரெஞ்சு மொழியில் இருந்து ஆங்கிலத்துக்குப் பெறப்பட்டதாகும். பிரெஞ்சு மொழியின் மூலச் சொல்லின் சரியான விளக்கம் பெறப்படவில்லை.

# சூதும் வாதும் வேதனை செய்யும்



பண்புகளில் தலைசிறந்தது அன்பு பாராட்டுதல். ஒருவர் செய்த நன்மையையோ, அவரது நற்குணத்தையோ புகழ்ந்து பேசுவது தான் அன்பு பாராட்டுதலாகும்.
சமூகத்தில் இது போன்ற நற்பண்பு குறைந்து கொண்டே வருகிறது. ஒருவர் செய்த தீமைகளையோ, கெட்ட பழக்கங்களையோ கண்டு பிடித்து குறை சொல்லவே பலரும் விரும்புகின்றனர். நற்குணத்தின் சிறப்புப் பற்றி பேசுவதேயில்லை.
குறைகள் கண்ணுக்கு தெரியும் அளவு, நிறைகள் புலப்படுவதில்லை. இன்று உறவினர், நண்பர்களுக்குள் வரும் சண்டைக்குக் காரணமே, அன்பு பாராட்டுதலை மறந்தது தான்.
ஒருவர் தீமையே செய்பவராகக் கூட இருக்கலாம். ஆனால், என்றோ அவரை அறியாமலேயே ஒரு நற்செயலை செய்திருப்பார். போற்றும் படியான நற்குணம் ஒன்று நிச்சயம் இருக்கும். அதைக் கண்டுபிடித்து பாராட்டுவதன் மூலம், நன்மைகள் விளையும். அதுவரை, தீமை மட்டுமே செய்துவந்தவரின் மனம், நன்மையின் பக்கம் திரும்பும்.
நன்மை செய்ய ஒருவரைத் தூண்டுவதே நம் செயல்கள் தான். அன்பு பாராட்டல் என்ற பண்பின் மூலம், முட்களைப் பூக்களாக மாற்றலாம்; கல்லையும் கரைக்கலாம்.



# விண்மீன்கள்

வானம் ஒரு பந்தல் - புது
வைர மணிப் பந்தல்
கூனல் நிலா இரவில் - பல
கோடி பொத்தல் தெரியும்!

அம்மா வைத்த கோலம் - தெரு
அழகு கொண்ட கோலம்
எம்மாம் புள்ளிக் கோலம் - அங்கு
எப்படி வைத்தார் மேலே?


சூரியன் ஒரு கடுக்கன் - அது
சுடச்சுட ஒளி கொடுக்கும்
ஆறிப்போன அப்பம் - குளிர்
அழகு நிலா தெப்பம்!

கார்த்திகை போல் தீபம் - வானம்
காட்டும் விண்மீன் கூட்டம்
பார்த்திடுவாய் இரவில் - எண்ணிப்
பார்த்தவர் யார் உலகில்?


# வர்ணம் தீட்டுவோம்



## சரியானவற்றை கண்டுபிடிப்போம்




## இணைப்போம்



## யா/ மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை

### தரம் 8இற்கான மகாஜனன் கணித, விஞ்ஞான திறண்காண் போட்டிப் பரீட்சை - 2020

மகாஜனக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியையும் தனது தாயாருமான திருமதி சௌபாக்கியவதி இராஜரட்ணம் ஞாபகார்த்தமாக சட்டத்தரணி இ.செல்வஸ்கந்தன் அவர்களால் வருடாவருடம் நடத்தப்படும் கணித, விஞ்ஞான அறிவுத்திறன்காண் போட்டிப் பரீட்சைகள் எதிர்வரும் மார்ச் மாதம் 1ஆம் திகதி நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

இவருடன் இணைந்து கணிதப் போட்டிப் பரீட்சைக்கான வினாத்தாளை கனடா பழைய மாணவர் சங்கம் தயாரித்து வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### பரீட்சை நிலையங்கள்

1. வவுனியா :- வவு/ தமிழ் ம.ம.வி
2. மன்னார் :- மன்/ சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி
3. முல்லைத்தீவு :- மு/ வித்தியானந்தா கல்லூரி
4. கிளிநொச்சி :- கிளி/ மத்திய கல்லூரி
5. யாழ்ப்பாணம் :- யா/ இந்துக் கல்லூரி
6. தென்மராட்சி :- யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி
7. வடமராட்சி :- யா/ ஹாட்லிக் கல்லூரி
8. வலிகாமம் :-யா/ மகாஜனக் கல்லூரி


### பரிசில் விபரம்

| கணிதம் | | விஞ்ஞானம் | |
|---|---|---|---|
| 1ஆம் இடம் | - 30 000 /= | 1ஆம் இடம் | - 30 000 /= |
| 2ஆம் இடம் | - 20 000 /= | 2ஆம் இடம் | - 20 000 /= |
| 3ஆம் இடம் | - 15 000 /= | 3ஆம் இடம் | - 15 000 /= |
| 4ம், 5ம், 6ம் இடங்கள் | - 8000 /= | 4ம், 5ம், 6ம் இடங்கள் | - 8000 /= |
| 7ம், 8ம், 9ம், 10ம் இடங்கள் | - 5000 /= | 7ம், 8ம், 9ம், 10ம் இடங்கள் | - 5000 /= |

விண்ணப்பங்கள் யாவும் அதிபர், யா/ மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை என்ற முகவரிக்கு ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அதிபர்


# மரண அறிவித்தல்கள்



## தேவசகாயம்பிள்ளை தொம்மையப்பு

(ஓய்வுநிலை அதிபர்)

மாத்தலனை பிறப்பிடமாகவும் இரணைப்பாலையை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுநிலை அதிபர் திருவாளர் தேவசகாயம்பிள்ளை தொம்மையப்பு அவர்கள் 05.01.2020 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கோணார் தேவசகாயம் பிள்ளை ஞானப்பு ஆகியோரின் அன்பு மகனும், திருமதி ஞானம்மாவின் (நேசம்) அன்புக் கணவரும், அன்ரனிற் டெய்சி (மாம்பழம்-பிரான்சு), அருள்தந்தை தொ. யேசுதாசன் (சந்திரன்-புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்), ஜெராட்(வனஜா-கண்டி), றெஜீனாசகாயரதி (பிரான்சு), காலஞ்சென்ற வில்பிரட் மரியதாசன், யூட் சூசைதாசன் (நெல்சன்-பிரான்சு) ஆகியோரின் அன்புத் தந்தையும், டக்லஸ் (பிரான்சு), காலஞ்சென்ற ஜெயராஜா (கண்டி), மரியதாஸ் (தங்கத்துரை-பிரான்சு), ரூபா (பிரான்சு) ஆகியோரின் மாமனாரும், டிலுஸா, பெனானன்சன், ஸ்ரெபான், ஸ்ரெபி, மிஸல், சுவிற்றி, ஜிம்ஸ்ரைன், ஷாலன், ஷனா ஆகியோரின் பேரனும், அன்னம்மா ஜெனறின் பூட்டனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இரணைப்பாலையில் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் எதிர்வரும் (09.01.2020) வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு மாத்தலன் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

0776913181 அருள்தந்தை தொ. யேசுதாசன் (சந்திரன்)

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 13.08.1955

உதிர்வு 11.12.2019

திதி:- 10.01.2020

## திருமதி சிவரஞ்சினி மகேஸ்வரன்

(வ/வெளிக்குளம் ம.வி.பிரதி அதிபர்)

யாழ்.உடுவிலைப் பிறப்பிடமாகவும், வவுனியா சின்னப் புதுக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவரஞ்சினி மகேஸ்வரன் கடந்த 11.12.2019 புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (08.01.2020) புதன்கிழமை கீரிமலையிலும் வீட்டுக் கிரியைகள் 10.01.2020 வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்)

குடும்பத்தினர்.

இல.24, சின்னப்புதுக்குளம், வவுனியா,

024 222 4427

# மரண அறிவித்தல்

## திருமதி கேதீஸ்வரி சிவானந்தன்



பிறப்பு 21.11.1948 இறப்பு 06.01.2020

இடைக்காடு அச்சுவேலியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கேதீஸ்வரி சிவானந்தன் நேற்று **(06.01.2020)** திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தலைமை ஆசிரியர் சின்னையா சிவகாமியம்மை தம்பதிகளின் அருமை மகளும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை பொன்னம்மா தம்பதிகளின் அருமை மருமகளும் சிவானந்தன் (ஓய்வு பெற்ற மருந்தாளர்) இன் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சரவணபவான், நாகேஸ்வரிதேவி மற்றும் சத்தியபாமா (Canada) ஆகியோரின் அருமைச் சகோதரியும் மீரா (ஆசிரியை- கதிரிப்பாய் சுப்பிரமணியம் வித்தியாசாலை), அசோகன் (Australia), வாகீசன் (மலேசியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயசீலன் (போதனாசிரியர்- தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்), டிசானி (Australia) ஆகியோரின் அருமை மாமியும் அபிசேக், அபிதன், தருணிகன் ஆகியோரின் அருமை பேர்த்தியும் காலஞ்சென்ற கனகசபை மற்றும் இராசலிங்கம் (Canada) ஆகியோரின் மைத்துனியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **(08.01.2020)** புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று காலை **9.30** மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக இடைக்காடு சாபித்திடல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சன்னதி வீதி, தம்பக்கடவை
இடைக்காடு, அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு: 077 634 9693, 021 205 8341

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமக



தோற்றம் 07.07.1942

மறைவு 06.01.2020

## சுந்தரம் சின்னராஜா

வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் சின்னராஜா நேற்று **(06.01.2020)** திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் தங்கராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்வராசாவின் அன்பு சகோதரனும் நகுலேஸ்வரன், நகுலேஸ்வரி, கலைவாணி (சுவிடன்), காலஞ்சென்ற குமரேஸ்வரன் (ராசன்) மற்றும் ஜெயப்பிரியா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரபாவதி, மயில்வாகனம், சந்திரமோகன், நிஷாந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற கீர்த்திகா மற்றும் கார்திகன், தனுசன், அபிதா, நிதுர்ஷா, மோசஸ், நிவியன், கோஜிகன், நிகிலா, மெர்ஷி, நிதுஷா, நிதுஷன், அபிராமி, ரசிக்கா ஆகியோரின் ஆசைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **(08.01.2020)** புதன்கிழமை முற்பகல் **11.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகமூர்த்தி வீதி,
இல.40/45, வயல்கரை வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

நகுலன்- 077 083 6751, 077 567 0041

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் கணக்காளராக பணிபுரியும் சுகன்யாவின் தகப்பனாரான

### மாணிக்கம் செல்லத்துரை

மலர்வு - 01.11.1943 உதிர்வு- 06.01.2020

அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆறுதல்களைக் கூறுவதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல காரைநகர் ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி !சாந்தி!**

**றூபா பன்முக வர்த்தகம்**
**ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்**

---

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## யாழ் மாவட்ட நகைத் தொழிலாளர் சங்கம் பொதுக்கூட்டம்

10.01.2020 (வெள்ளிக்கிழமை) பி.ப 3.00 மணிக்கு யாழ்ப்பாணம், கன்னாதிட்டி விஸ்வேஸ்வரி மணி மண்டபத்தில் பொதுக்கூட்டம் இடம் பெற உள்ளது. விஸ்வகுல நகைத் தொழிலாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும் படி கேட்டுக் கொள்கின்றோம்.

**213/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
(J 10942)(14.17)
**ஆலோசனைக்குழு**
**077 236 7494**

---

## கால நீடிப்பு
### படவரைஞர்களைப் பதிவு செய்தல், மாநகர எல்லைக்குள் குழாய்க்கிணறு நிர்மாணித்தல் - 2020

யாழ்.மாநகரசபையில் படவரைஞர்களைப் பதிவு செய்பவர்கள், குழாய்க்கிணறு நிர்மாணித்தலைப் பதிவு செய்பவர்கள் எதிர்வரும் 17.01.2020 வரை தங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்பதனை அறியத்தருகின்றேன்.

**குறிப்பு :- மேற்குறிப்பிட்ட திகதிக்குள் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறும் படவரைஞர்களது பதிவுகள் இரத்துச் செய்யப்படும்.**

**முதல்வர்,**
**யாழ்.மாநகரசபை.**

---


## உங்கள் கனவு நனவாகுகின்றது

நாளைய உலகில் நீங்கள் ஓர் கணனிப்பட்டதாரியாகும் வாய்ப்பை 25 வருட கல்விச்சேவை அனுபவம்மிக்க தமிழர் நாயகத்தில் இயங்கும் ஒரே ஒரு தனியார் உயர்கல்வி வளாகமாக விளங்கும் **IIS** உங்களுக்கு வழங்குகின்றது.

Pearson BTEC **HND COMPUTING**



பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் பயனடைந்த இவ் வெற்றிப்பாதையில் உங்கள் காலடியையும் பதித்துக் கொள்ளுங்கள்

More Details | Hot Line : 077 757 0038 | Web : www.iis.edu.lk

**NEW INTAKE JANUARY 2020**

**IIS CITY CAMPUS**
441, CLOCK TOWER ROAD, JAFFNA
TEL : 021 222 8060


---

## மரண அறிவித்தல்

# திருமதி செல்வநாயகி நாகரத்தினம்
### (ஓய்வுநிலை ஆசிரியை)



தோற்றம் 28.06.1929 மறைவு 05.01.2020

கோப்பாய் வடக்கு கண்ணகை அம்மன் ஆலய வீதியை பிறப்பிடமாகவும், குமரபுரம், பரந்தன், பரவிப் பாஞ்சான், கிளிநொச்சி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்வநாயகி நாகரத்தினம் கடந்த **(05.01.2020)** ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம், வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், அன்னமுத்து தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வல்லிபுரம் நாகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கமலாவதி, மனோரஞ்சிதம், பேராயிரஉடையார், தனலட்சுமி, சிவலோகநாதன் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்லையா, சுப்பையா, பூபாலசிங்கம், நாகம்மா மற்றும் கமலராஜமணி பேராயிரஉடையார், நாகராஜா ஆகியோரின் மைத்துனியும், விஸ்வநாயகி (லலி), ஜெகன்மோகன் (பொறியியலாளர்- கனடா), அன்பழகன் (கனடா), கானபவானி (ஆசிரியர், கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி), கௌசலா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற அம்பிகைதாசன் (ஓய்வுநிலை தபாலதிபர், பரந்தன்), அனுஷியா (கனடா), சாந்தினி (கனடா), அமிர்தலிங்கம் (ஓய்வுநிலை கோட்டக் கல்விப்பணிப்பாளர், கரைச்சி), சத்தியநாதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும், அரவிந்தன் (பொறியியலாளர்- கனடா), அகிலா (மக்கள்வங்கி, கிளிநொச்சி), ஆரூரன் (பொறியியலாளர், அமெரிக்கா), அஸ்வினி (வைத்தியர், கனடா), வினோத் (பொறியியலாளர், கனடா), தீபிகா (பல்கலைக்கழக மாணவி, கனடா), கேசிகா (பல்கலைக்கழக மாணவி, கனடா), அனுருத்தன் (வைத்தியர், யாழ் போதனா வைத்தியசாலை), சாரங்கி (உணவு உற்பத்தி தொழில்நுட்ப முகாமைத்துவ பட்டதாரி), ஆருத்திரன் (பொறியியலாளர்), கணனன் (கணக்காளர், கனடா), மாதங்கி (கணக்காளர், கனடா) ஆகியோரின் பாசமிகு பாட்டியும், ஈஷா (கனடா), மகாமூர்த்தி (முகாமைத்துவ அலுவலர்- புளியங்குளம்), ஜினோஷா (அமெரிக்கா), கோபிநாத் (பொறியியலாளர், கனடா), மகிந்தன் (பொறியியலாளர்) ஆகியோரின் இணைப் பேரர்களின் பாட்டியும், ஆக்ஷனா, அக்ஷரா, ரேனா, ஆதீஷ், ஷீலா, ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **(08.01.2020)** புதன்கிழமை காலை **10:00** மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிளிநொச்சி திருநகர் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கானபவானி 077 921 0249** **தகவல்:- குடும்பத்தினர்**

---

### பணிப்பாளர்..

கல்வி அமைச்சு மற்றும் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் ஆகிய அலுவலகங்களுக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளதாகவும் அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது. குறித்த வலயக் கல்விப் பணிப்பாளர் அடாவடிகளில் ஈடுபடுகின்றார் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளதோடு, அதற்கு முற்றுப்புள்ளி வைப்போம் என்றும் தனது செய்திக் குறிப்பில் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவத்திடம் கேட்டபோது, "குற்றச்சாட்டுக்கள் குறித்து மாகாணக் கல்வித் திணைக்களம் விசாரணைக் குழு அமைத்து விசாரித்தால் தக்க பதில் வழங்கத் தயாராகவே உள்ளேன். சங்கங்கள் கூறும் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய்.நான் அடாவடிப் பேர்வழியல்ல" என்றும் தெரிவித்தார்.

(அ,த,104)

### மசிந்தார்...

கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் நடைபெற்றது. அதன்போது பிரதித் சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் இந்தத் தகவலை நீதிமன்றில் தெரிவித்தார்.

முன்னாள் ஆளுநர்கள் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா மற்றும் அசாத் சாலி ஆகியோரிடமும் விசாரணை நடத்த எதிர்பார்த்திருப்பதாகப் பிரதித் சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் தெரிவித்துள்ளார். அதேவேளை குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீனிடமும், முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவிடமும் அண்மையில் விசாரணை நடத்தியிருந்தனர்.

(எ)

---

**தேவை** பில்கிளார்க், பொதியிடல், உதவியாளர், சமையல் என்பவற்றுக்கு பெண் வேலையாள்கள் தேவை.

179, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
Tele- 0771746101 / தொடர்பு: **பிருந்தா மில்ஸ்**

---

**விற்பனையாளர் தேவை**

யாழ்ப்பாணம் ரவுணில் உள்ள புத்தகசாலைக்கு ஆண்/பெண் விற்பனையாளர்கள் உடன்தேவை.

**072 287 5625/ 011 576 5331**

---

**கார் விற்பனைக்கு**

வைத்தியரின் பாவனையிலுள்ள Alto Sport 2015 Model கார் உடனடி விற்பனைக்கு உண்டு.

**077 317 9771**
(CS 30457)(04.17)

---

**விற்பனைக்கு**

கோண்டாவிலில் சணல், யமுனாபாரி ஆடு விற்பனைக்கு உண்டு.

**077 110 9408**
(J 10943)(14.17)

---

**பணிப்பெண் தேவை**

கொழும்பில் உள்ள வீடொன்றுக்கு தங்கி நின்று பணிபுரியக் கூடிய பணிப்பெண் தேவை.

தொடர்பு: **077 3633 233**

---

**பணியாளர் தேவை**

யாழ்.நகரில் பிரபலமிக்க கையடக்கத் தொலைபேசி நிலையத்துக்கு

- **கணினி திருத்துநர்**
- **விற்பனையாளர்**
- **தொலைபேசி (கையடக்க தொ.பேசி) திருத்துநர் தேவை.**

**077 254 0528** (CS/30452)(11.17)

## விபத்தில் ராணுவச் சிப்பாய் பலி!!

ஓமந்தை ஜன.7

வவுனியா ஓமந்தை பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில் ராணுவச் சிப்பாய் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

விபத்து தொடர்பாக தெரியவருகையில் நேற்று இரவு குறித்த ராணுவச்சிப்பாய் ஓமந்தை பகுதியில் இருந்து வவுனியா நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது மாடு குறுக்கிட்டதால் தூக்கி வீசப்பட்டுள்ளார். விபத்தில் படுகாயமடைந்த அவர் அவசர அம்புலன்ஸ் வண்டி மூலம் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு அனுமதிக்கப்பட்டபோதும் அவர் முன்னமே சாவடைந்திருந்ததாக மருத்துவர்கள் குறிப்பிட்டனர். இந்த விபத்தில் வவுனியா முகாமில் பணியாற்றிய அனுராதபுரத்தைச் சேர்ந்த சமன்குமார மதுரசிங்க (வயது - 41) என்ற ராணுவச்சிப்பாயே சாவடைந்தவராவர். விபத்து தொடர்பாக ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ந - 110 222)

## வழிகாட்டல் செயமலர்வு

யாழ்ப்பாணம் ஜன.7

உயர்தர வகுப்புகளுக்கான வழிகாட்டல் செயலமர்வு நாளை புதன் கிழமை கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. 2019 இல் கா.பொ. த.சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான இந்த வழிகாட்டல் கருத்தரங்கு காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். கருத்தரங்கில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் பாடசாலைச் சீருடையு டனேயே வரவேண்டும் என அதிபர் அவர்கள் கூறியுள்ளார்.

(ந)

## மணல் கடத்தலைத் தடுக்க சென்ற பொலிஸ் மீது கல்வீச்சு

யாழ்ப்பாணம், ஜன.7

வடமராட்சி, குடத்தனைப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்கச் சென்ற பொலிஸார் மீது கல் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இனந்தெரியாதோர் வீதிகளில் தடைகளையும் ஏற்படுத்தியிருந்தனர். இந்தச் சம்பவம் நேற்று இரவு 10.30 மணியளவில் நடந்துள்ளது.

குடத்தனைப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு நடைபெறுகின்றது என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. அதையடுத்து வாகனம் ஒன்றில் பொலிஸார் அங்கு சென்றுள்ளனர். வல்லிபுரத்துக்கும், குடத்தனை க்கும் இடையே உள்ள பற்றைகள் சூழ்ந்த வீதியில் சென்றபோதே பொலிஸார் மீது கற்கள் வீசப்பட்டுள்ளது. வீதியில் கற்கள் மற்றும் மரங்களைப் குறுக்காக இட்டுச் சில இடங்களில் தடைகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. கற்கள் வீசப்பட்டதை அடுத்து அந்தப் பகுதிக்கு மேலதிக பொலிஸாரும், காங்கேசன்துறைப் பொலிஸாரின் சிறப்புப் பிரிவும் சென்றது. அவர்கள் மீதும் கற்கள் வீசப்பட்டுள்ளன. அதன்பின்னர் அந்தப் பகுதியில் பொலிஸார் தேடுதல் நடத்தியபோது கற்களை வீசியவர்கள் தப்பியோடியுள்ளனர். சந்தேகத்துக்கிடமாகத் தரித்து நின்ற 3 மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. மோட்டார் சைக்கிள்கள் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(எ-26)


### காவலாளி தேவை

கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்திற்கு இரவுக்காவலாளி தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை, கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப கட்டடத் தொகுதி 2ஆம் மாடி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 20.01.2020 ஆம் திகதிக்கு முன்னதாக சுயமாக விண்ணப்பத்தை தயாரித்து விண்ணப்பிக்கவும்.

செயலாளர்
யா.மா.கூ.சபை

**021 222 2324**


100அடி...

னர். காயமடைந்தவர்கள் பசறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அங்கிருந்து 20 பேர் மேலதிக சிகிச்சைக்காக பதுளை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இந்த விபத்து நேற்று மாலை பசறை மடுல்சீமை வீதியில் 06ஆம் கட்டைப் பகுதியில் நடந்துள்ளது. அந்தப் பகுதியில் கடும் மழை பெய்ததால் வீதியில் ஏற்பட்ட வழுக்கல் நிலை காரணமாக இந்த விபத்து ஏற்பட்டுள்ளது எனவிசாரணைகளை மேற்கொண்டு வரும் மடுல்சீமை பொலிஸார் தெரிவித்தனர். செங்குத்தான பள்ளத்தில் விழுந்து ஏற்பட்ட இந்த விபத்தால் குறித்த பஸ் இரண்டாக உடைந்துள்ளது. விபத்தில் பலர் படுகாயமடைந்துள்ளதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகின்றது.

(எ-22)


### மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் செல்வராசா



நாவற்குழி தச்சன்தோப்பை பிறப்பிடமாகவும், சங்கத்தானை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் செல்வராசா நேற்று **(06.01.2020)** திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் இராஜேஸ்வரி தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற இராசதுரை அன்னபூரணம் தம்பதிகளின் மருமகனும் செல்வராணியின் அன்புக் கணவரும் ஜெயரட்ணம் (மட்டக்களப்பு), காலஞ்சென்ற ஆனந்தராசா, விஜயரட்ணம் மற்றும் ஜெயராணி ஆகியோரின் மைத்துனரும் சிவராசா, ஆனந்தநடராசா (லண்டன்), காலஞ்சென்ற புஸ்பவதி மற்றும் சண்முகராசா, காலஞ்சென்ற தேவராசா மற்றும் லீலாவதி, குணவதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கேதீஸ்வரனின் சகலனும் சிவகாமசுந்தரி, காலஞ்சென்ற இந்திராணி ஆகியோரின் உடன்பிறவாத சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பொற்தொழிலாளர் வீதி, சங்கத்தானையிலுள்ள அவரின் இல்லத்தில் இன்று **(07.01.2020)** செவ்வாய்க்கிழமை முற்பகல் **11.00** மணியளவில் நடைபெற்று கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்தொழிலாளர் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

தகவல்:
மனைவி - செல்வராணி



### 49 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 20-11-2019 புதன்கிழமை சிவபதமடைந்த

அமரர்

### கந்தையா சிவலிங்கம்

(சின்னத்துரை)

அவர்களின் வீட்டுக் கிரியைகள் இன்று (07.01.2020) செவ்வாய்க் கிழமை பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்

குடும்பத்தினர்



## கண்ணீர் அஞ்சலி



அன்னையின் சேவகனாக
40 வருடங்களுக்கு மேலாக
அளப்பெரும் பணி செய்த
**மணி அண்ணை** என்று
எல்லோராலும் அன்பாக
அழைக்கப்பட்ட

### செல்லத்துரை சிவசுப்பிரமணியம்

அவர்கள் நேற்று இறைபதடைந்து
விட்டார். அன்னாரின் ஆத்மா
அன்னையின் பாதங்களை
சரணடையட்டும்.

மணி ஐயா எங்கிருந்தோ வந்தாயையா
மனங்களில் எல்லாம் நின்றாயையா
கூடலூர் உன்னை தேடுதையா
கணம் மறவாமல் சேவகம் செய்தாயையா
போய் வாருமையா போய் வாரும்
அன்னை உள்ளவரை உன் நினைவுகள்
- வாழுமையா.....

உங்கள் நினைவுகளுடன்

**அறங்காவலர்**
**மற்றும் செருத்தனைப்பதி**
**ஸ்ரீ இராஜமகாமாரி அம்மன் திருக்கோவில்**
**சமூகம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்
ஒன்றியம் பெருமையுடன் வழங்கும்
மாபெரும் தமிழ்விழா - ௨019



# தமிழமுதம்

**“மொழிதனைக் கடையும் இளையவர் பயணம்”**

08.01.2020

மு.ப 08.05

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான வளாகம்

**அனைவரும் வாரீர்!**



# நாட்டுக்கு நல்லதல்ல

சேரலாதன்

“ ஜனநாயகத்தை மதிக்கின்ற தமிழ்த் தலைவர்களின் ஆலோசனையைக் கேட்டுநடந்துகொள்ளவேண்டும். சிறுபான்மையின மக்கள் எத்தனையோ இடர்களை எதிர்கொண்டு விட்டனர். அவர்களிடம் இழக்கக் கூடியன எவையுமே இல்லை. போர் ஓய்ந்ததன் பின்னர் நல்லாட்சி அரசின் ஆட்சிக் காலத்தில் ஓரளவு மன நிம்மதியுடன் அவர்களால் வாழ முடிந்தது. புதிய ஆட்சியாளர்க்ள அதை இல்லாமல் செய்து மீண்டும் அச்சத்தையும் பதட்டத்தையும் அந்த மக்களிடம் தோற்றுவிக்க முயற்சி செய்வது நாட்டின் ஒட்டுமொத்த நலன்களுக்கும் நல்லதாகத் தெரியவில்லை.

புதிய அரசின் சமகால நடவடிக்கைகள் தமிழ் மக்கள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. சுதந்திரதின நிகழ்வின் போது தமிழில் தேசிய கீதத்தை இசைக்கக் கூடாது என்ற அறிவிப்பு, வடக்கில் அமைந்துள்ள ஆலயங்களில் ஆய்வுகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள், வடக்கிலுள்ள பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றுகின்ற தமிழ்ப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட அதிரடி இடமாற்றம், வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முன்னெடுத்து வரும் போராட்டத்தின் போது முக்கியஸ்தர் ஒருவர் அரசுடன் சார்ந்து செயற்படும் கட்சியொன்றின் உறுப்பினர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டமை போன்றன இனிமேல் என்ன நடக்கப் போகின்தோ? என்ற அச்சத்தைத் தமிழர்களிடையே ஏற்படுத்தி விட்டதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமேயில்லை.

### மறக்க முடியாது

இறுதிப் போரின்போது நடந்தவற்றைத் தமிழர்கள் இன்னமும் மறந்து விடவில்லை. தற்போது ஆட்சியில் இருப்பவர்களே இறுதிப்போரை முன்னின்று நடத்தினர். இதில் அப்பாவித் தமிழ் மக்கள் வகை தொகையின்றிக் கொல்லப்பட்டனர்.

ஏராளமானவர்கள் தமது அங்கங்களை இழக்கும் அளவுக்குப் படுகாயங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். தமிழர்களுக்கு ஏற்பட்ட சொத்து அழிவுகள் மதிப்பிட முடியாதவை. போர் காரணமாக இடம்பெயர்ந்த தமிழர்களில் ஒரு தொகையினர் இன்றளவும் தமது சொந்த இடங்களில் மீள் குடியமர முடியாத நிலையில் தவித்து வருகின்றனர். அவர்களுக்குச் சொந்தமான காணிகளைப் படையினர் அடாத்தாகப் பிடித்து வைத்திருக்கின்றனர். இந்தக் காணிகளை விடுவித்து அவற்றின் சொந்தக்காரர்களை அங்கே குடியமர்த்துவதில் ஆட்சியாளர்கள் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. படையினர் நடந்துகொள்வதே சரியென்ற வகையில் அவர்கள் செயற்படுகின்றனர். இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வாறு நீதி கிடைக்கும்?

### எதிர்பார்ப்பு

ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபய வேட்பாளராக நிறுத்தப்பட்டபோது இரண்டு வெவ்வேறு விதமான உணர்வலைகள் இந்த நாட்டில் நிலவின. சிங்கள மக்கள் கோத்தாவின் வருகையைப் பெரிதும் வரவேற்றுக் கொண்டாடினர். அதற்கு ஏற்றாற் போன்று அவரும் சிங்கள மக்களின் பாதுகாப்பைத் தாம் பதவிக்கு வந்தால் உறுதிசெய்வார் என வாக்களித்தார். அதுமட்டுமல்ல தமிழர்களுக்கு எதிரான இனவாதக் கருத்துக்களும் சிங்கள மக்களிடையே பரப்பி விடப்பட்டன. சஜித் பிரேமதாச தமிழர்களுக்கு சமஷ்டியை மட்டுமல்லாது தனிநாட்டையே பிரித்து வழங்கப் போகினறார் என்றவாறாக இனவாத அடிப்படையிலான கருத்துக்கள் கூறப்பட்டன. சிங்கள மக்களும் அதை நம்பி விட்டனர்.

### இனவாதம்

இதன் விளைவாக சஜித் தமது இனத்தவரின் வாக்குகளைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டார். கோத்தாபயவினால் தமிழர் மற்றும் முஸ்லிம்களின் வாக்குகளைப் பெறாத நிலையிலும் சிங்கள மக்களின் வாக்குகளால் சஜித்தை எளிதாகத் தோற்கடிக்க முடிந்தது. அவரது வெற்றிக்கு இனவாதம் பிரதான இடத்தை வகித்தது. தாம் சிங்களவர்களின் வாக்குகளால் வெற்றி பெற்றதை கோத்தாபயவே ஒப்புக்கொண்டு விட்டார். இதனால் சிங்கள மக்களின் உணர்வுகளுக்கும் விருப்பங்களுக்கும் இசைவாக நடந்துகொள்ள வேண்டிய கட்டாய நிலைக்குள் அவர் தள்ளப்பட்டுவிட்டார். இதனால் சிறுபான்மை இனத்தவர்களே பாதிக்கப்படப் போகின்றனர். அது இப்போது மெல்ல மெல்லத் தெரிய ஆரம்பித்துவிட்டது.

கடந்த காலங்களில் அரசுடன் சேர்ந்து இயங்கிய ஒட்டுக் குழுக்களின் அட்டகாசங்கள் எல்லை மீறிக் காணப்பட்டன. ஆள்கள் கடத்தப்படுவதும், தாக்கப்பட்டுக் கொலை செய்யப்படுவதும் சாதாரணமாகவே இடம்பெற்றன. இவை தொடர்பாக அரசு எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.



### உறவுகளின் துயர்

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஆண்டுக் கணக்கில் தமது உறவுகளை மீட்டுத் தருமாறு கோரிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். வேதனையில் மூழ்கிக் கிடக்கும் அவர்கள் அவ்வப்போது தமிழ் அரசியல்வாதிகளை நிந்திப்பதற்கும் தவறுவதில்லை. கூட்டமைப்பை இவர்கள் வசைபாடுவது வழக்கமான நிகழ்வாகிவிட்டது. கூட்டமைப்பின் தலைவர் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் பயணித்த வாகனத்தின் மீது செருப்புக்களை வீசித் தமது வெறுப்பையும் காட்டியுள்ளனார். இது தொடர்பாக கூட்டமைப்பினர் எவ்வித எதிர்ப்பு நடவடிக்கையிலும் ஈடுபடவில்ல. தமது உறவினர்களை இழந்து வாடி நிற்கும் அவர்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்துவது இயல்பானதேயென கூட்டமைப்பின் சார்பில் விளக்கம் கூறப்பட்டமை நோக்கத்தக்கது. இதே வேளை அரசுடன் இணைந்து செயலாற்றும் தமிழ்க் கட்சியொன்றின் தலைவரை அண்மையில் அதே உறவுகள் அவமரியாதை செய்ததை அண்மையில் காண முடிந்தது. இதற்குப் பதிலடியாகப் போராட்டத்தை ஒழுங்குபடுத்தி நடத்திவரும் முக்கியஸ்தர் ஒருவர் குறித்த கட்சியைச் சேர்ந்த சிலரால் கடுமையாகத் தாக்கப்பட்டுப் படுகாயங்களுக்கு உள்ளாக்கப்பட்டார்.

### நினைவூட்டல்

இந்தச் சம்பவம் கடந்த மோசமான காலத்தை நினைவூட்டியது. அரசு இத்தகைய நடவடிக்கைகளைத் தடுத்துவிடாமல் ஊக்குவிக்குமானால் அதன் எதிர்விளைவுகள் மோசமானதாகவே அமைந்துவிடப் போகின்றன. தற்போதுள்ள நிலையில் சகல இன மக்களையும் அரவணைத்துச் செல்ல வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு ஜனாதிபதியின் வசமே உள்ளது. அவர் தமது நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டுமென்றல் தம்முடன் ஒட்டிக் கொண்டிருப்பவர்களை முதலில் கட்டுப்படுத்தி வைக்க வேண்டும். ஜனநாயகத்தை மதிக்கின்ற தமிழ்த் தலைவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடந்து கொள்ள வேண்டும். சிறுபான்மையின மக்கள் எத்தனையோ இடர்களை எதிர்கொண்டு விட்டனர். அவர்களிடம் இழக்கக் கூடிய ன எவையுமே இல்லை. போர் ஓய்ந்ததன் பின்னர் நல்லாட்சி அரசின் ஆட்சிக் காலத்தில் ஓரளவு மன நிம்மதியுடன் அவர்களால் வாழ முடிந்தது. புதிய ஆட்சியாளர்கள் அதை இல்லாமல் செய்து மீண்டும் அச்சத்தையும் பதற்றத்தையும் அந்த மக்களிடம் தோற்றுவிக்க முயற்சி செய்கின்றமை நாட்டின் ஒட்டுமொத்த நலன்களுக்கும் நல்லதாகத் தெரியவில்லை.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அளவுக்கு மிஞ்சினால்.....

செம்மனச் செல்வியின் கதை எல்லோருக்கும் தெரிந்திருக்கும். உறவுகள் யாருமற்றவள் அந்தக் கிழவி. ஆறு பெருகும் போது , அரசனின் ஆணைப்படி அணை கட்ட 'எனக்கு உதவிட யாருமில்லையே 'என இறைவனிடம் வேண்டினாள்.இறைவனும் கூலியாளாக வந்து, செம்மனச் செல்வியிடம் கூலியாகப் பிட்டை மாத்திரம் பெற்று, அணை கட்டப் புறப்பட்டார். ஆனால் அவர் அணைகட்டியதை விடவும், ஆடியதும், பாடியது, பிட்டை உண்டதும், கடைசியில் அரசன் வரும் சமயத்தில் உறங்கிப் போனதும் தான் நடந்தது. தான் வரும்போது, அணை கட்டாமல் ஒருவன் படுத்திருப்பதைக் கண்ட அரசனுக்கு கோபம் பொத்துக் கொண்டு வர , கையில் இருந்த பிரம்பால் ஓங்கி அடித்தான். ஒருவனை மாத்திரமே தண்டிப்பதற்காக அரசன் அடித்த அந்த அடி எல்லோர் முதுகிலும் அரசனின் முதுகிலும் கூட விழுந்தது.

இப்படி ஒரு சிலரைத் தண்டிப்பதாக நினைத்து எடுக்கப்படும் அவசரத்தனமான முடிவுகள், எல்லோரையும் பாதிப்பதாக அமைந்துவிடுகின்றது. குறிப்பாக பணிப்புறக்கணிப்புப் போராட்டங்கள் , எந்த நபருக்கு அல்லது அமைப்புக்கு எதிராகச் செய்யப்படுகின்றதோ அந்தக் குறிப்பிட்ட தரப்பைப் பாதிப்பதை விடவும்,சம்பத மேயில்லாத அப்பாவிகளையே அதிகம் அலைக்கழிக்கின்றன. நேற்று முன் தினம் யாழ். பஸ் நிலையத்தில் நடைபெற்ற ஒரு உள்ளக முரண்பாட்டால், இ.போ.ச அலுவலர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். தென்னிலங்கையில் இருந்து வந்த பஸ்ஸின் சாரதி , தான் பெரும்பான்மை இனத்தவன் என்ற ஆணவத்தோடு நடந்து கொண்டமையே இந்த முரண்பாட்டுக்கு அடிப்படை. கூடவே தன்னுடன் முரண்படுபவர்களை தன் செல்போனில் புகைப்படம் எடுத்ததோடு, பொலிஸில் தனக்குள்ள 'செல்வாக்கைப்' பயன்படுத்தி , தன்னுடன் முரண்பட்ட அலுவரை கைது செய்ய வைக்குமளவுக்கு தனியாளாக ஆட்டம் போட்டிருக்கிறார். இந்தளவுவரை குறித்த தென்னிலங்கைச் சாரதியின் பக்கமே அத்தனை தவறும் இருந்தது. ஆனால் அதன்பின்னர் நடந்தவை அனைத்துமே பாதிக்கப்பட்ட இ.போ.சவின் யாழ்ப்பாணப் பணியாளர்கள் பக்கம் இருந்த மக்களின் பரிவை அடியோடு இல்லாமலாக்கி விட்டது.

குறித்த பிரச்சனையை முரண்பாட்டோடு தொடர்புடைய ( தென்னிலங்கையில் இருந்து வந்த ) மற்றைய பஸ்ஸின் சாரதியிடம் சமரசம் பேசியோ,மேலதிகாரிகளுக்கு நடந்ததைத் தெளிவுபடுத்தியோ , முறைப்பாட்டை வாபஸ் வாங்க வைத்து தங்கள் அலுவலரை விடுவிக்க ஒரு வழியை இ.போ.ச பணியாளர்கள் கண்டுபிடித்திருக்கலாம். ஆனால் தங்கள் அலுவலர் ஒருவர் கைது செய்யப்பட்டதை அறிந்தவுடன், ஏன் , எதற்கு என்று கிஞ்சித்தும் யோசிக்காமல்," நிப்பாட்டு பஸ்ஸை!" என்று பணிப்புறக்கணிப்பில் இறங்கியிருக்கிறார்கள். அதன் விளைவாக இ.போ.ச பஸ்ஸையே நம்பியிருக்கும் பலர் அதிலும் பெரும்பான்மையானோர் பெண்கள் சொல்லாமல் கொள்ளாமல் பஸ்கள் ஓட மறுத்ததால் எப்படி வீட்டுக்குச் செல்வது என்று அங்கலாய்த்து,அலைந்து திரிந்தனர். 'பஸ் ஓடுமா? இல்லையா?' என்று ஏக்கத்தோடு கேட்ட பொதுமக்கள் மீது, 'வள்'ளென்று இ.போ.ச பணியாளர்கள் பாய்ந்து, வசைமாரியும் பொழிந்தனர்.இரவாகியும் வீடு செல்ல வழி தெரியாமல், எப்போது பஸ்ஓடத்தொடங்குமென்றும் தெரியாமல் நூற்றுக்கணக்கான பயணிகள் பஸ்ஸில் பட்ட அந்தரிப்பைச் சொல்ல வார்த்தைகளில்லைத்தான். தாங்கள் அலைக்கழிக்கப்படுவதற்கு மூல காரணமான சிங்கள சாரதியை விடவும், இப்படி திடீரென 'நடுறோட்டில்' கைவிட்ட யாழ்.பஸ் நிலையப் பணியாளர்கள் மீதே மக்களின் கோபம் திரும்பியது.

கைது செய்யப்பட்டசக அலுவலர் விடயத்தில் என்னதான் அநீதி இழைக்கப்பட்டிருந்தாலும், அதன் விளைவை அப்பாவி மக்களின் மீது பிரயோகிக்க முயல்வது அபத்தமான செயல். அத்துடன் தனக்கு எங்கு கல்லடி பட்டாலும் நாய் காலை மட்டுமே தூக்குவதைப் போல, தமக்கு எதிராக என்ன விடயம் நடந்தாலும் உடனேயே முன்பின் யோசிக்காமல் பணிப்புறக்கணிப்பில் இறங்குவது இ.போ.சவினருக்கு மட்டுமல்ல, சகல திணைக்களத்தினருக்கும் கை வந்த கலையாகிவிட்டது. பணிப்புறக்கணிப்புகளும் அதிகாரத்தைத் தட்டிக் கேட்கும் ஒரு வகையான எதிர்ப்பாயுதம் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. ஆனால் அவற்றை நாகாஸ்திரம் போல , இதைவிட்டால் வேறு வழியில்லை என்கிற 'அரிதான' நிலை வரும் போது மட்டும் உரிய முன்னறிவித்தலோடு பயன்படுத்தினால், மக்கள் ஆதரவும் கிட்டும். அதைவிடுத்து , இயற்கைக்கடனைக் கழிப்பது போல, தொட்டதற்கெல்லாம் அடிக்கடி பணிப்புறக்கணிப்பை மேற்கொள்வதால், பணிப்புறக்கணிப்பு என்கிற வார்த்தையின் மரியாதையும் குறைந்து, மக்கள் ஆதரவையும் இல்லாதாக்கி விடும் என்பதே யதார்த்தம்.அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு தானே.

# பொருளாதாரம் போர் போன்றது

### ஜனாதிபதி, பிரதமருக்கு ஆலோசனை



**கொழும்பு, ஜன. 7**

**போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக அன்று ஒன்றாக இணைந்து வியூகம் வகுத்துச் செயற்பட்டதுபோல் சர்வதேச அழுத்தங்களை சமாளித்து, பொருளாதாரப் போரையும் முடிவுக்குக் கொண்டுவரும் பொறுப்பு ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு இருக்கின்றது - என்று பேராசிரியர் மெதகொட அபேதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.**

நாட்டுக்கும், மக்களுக்கும் ஆசிவேண்டி பௌத்த தேரர்களின் பங்குபற்றலுடன் ஜனாதிபதி மாளிகையில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற விசேட ஆராதனை நிகழ்வில் கலந்துகொண்டு அனுசாசன உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'நாட்டில் நிலவிய போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக அன்று ஒன்றாக இணைந்து கையாண்ட அணுகுமுறையை இன்று சர்வதேச அழுத்தங்களை முறியடித்து பொருளாதாரப்போரை வெற்றிக்கொள்வதற்காகப் பயன்படுத்த வேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இருக்கின்றது.

நாட்டு மக்களும், மகாநாயக்க தேரர்களும் மிகப் பெரிய நம்பிக்கையின் அடிப்படையிலேயே புதிய ஆட்சிக்கு உயிர்கொடுத்தனர். எனவே, நண்பர்களாக வந்து இணைந்து அரசின் பயணத்தைத் திசைதிருப்புவதற்கும், குழப்புவதற்கு பல சக்திகள் முயற்சிக்கலாம். எனவே, எல்லா விதத்திலும், எல்லாப் பக்கங்களிலும் விழிப்பாக இருப்போம் என் ஆலோசனை வழங்குகிறேன். அமைச்சர்கள், அமைச்சின் செயலாளர்கள், அரசைச் சூழவுள்ளவர்கள் அனைவருக்கும் இந்த ஆலோசனை பொருந்தும்.' என்றும் தேரர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்கள் உட்பட உயர்மட்ட பிரமுகர்கள் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். (ம-44)

# 'நானும் ரவுடிதான்'



கொழும்பு, ஜன. 7

அரசால் கைது செய்யப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால், என்னையும் கைது செய்ய வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: வேட்டையாடும் நடவடிக்கையை கைவிட்டு மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை அரசு நிறைவேற்ற வேண்டும்.

மேலும், மத்திய வங்கி பிணைமுறி தொடர்பாக விசாரணை செய்யுமிடத்தில் கூட்டு அரசில் இருந்த அழுக்கைவிட அதற்கு முன்னைய அரசில் இருந்த பெருமளவான அழுக்குகளும் வெளிவரும்.

ஜனாதிபதித் தேர்தலில் வழக்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைய தோட்டத் தொழிலாளர்களுக்கு வழக்கப்படுகிறது என்று தெரிவித்த ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)



இலங்கை இராணுவத்தின் 57 ஆம் பிரிவு மற்றும் 573 ஆம் படைப்பிரிவு ஆகியவற்றின் ஏற்பாட்டில் தெரிவு செய்யப்பட்ட 10 மாணவர்களுக்கு சைக்கிள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. கிளிநொச்சி பரந்தன் முரசுமோட்டையில் உள்ள நவஜீவனம் தேவாலயத்தில் வைத்து கடந்த வாரம் சைக்கிள்கள் கையளிக்கப்பட்டன. (க-222)



# வங்காலைப் படுகொலை 35ஆவது வருட நினைவு

*மன்னார்,ஜன.7*

**வங்காலையில் 1985 ஆம் ஆண்டு இராணுவத்தினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவு நாள் நேற்றுத் திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.**



வங்காலை புனித ஆனாள் தேவாலயத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள மேரி பஸ்ரியன் அடிகளாரின் சிலைக்கு முன்பாக நிகழ்வு இடம்பெற்றது.

1985 ஆண்டு ஜனவரி மாதம் 6 ஆம் திகதி வங்காலை தூய ஆனாள் பங்குப் பணி செயலாளராகச் சேவையாற்றிய அருட்பணி மேரி பஸ்டியன் அடிகளார் மற்றும் அவருடன் தங்கியிருந்த அப்பாவிச் சிறுவர்கள் உட்பட பொது மக்கள் 10 பேர் இராணுவத்தினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

அவர்களது 35 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு மற்றும் பொதுப் பிரார்த்தனை நேற்று இடம் பெற்றது. அருட்பணி பஸ்ரியன் அடிகளாரின் சிலைக்கு முன்பாக பொதுச் சுடர் ஏற்றி நினைவேந்தல் நிகழ்வு ஆரம்பமானது.

தொடர்ந்து அவருடன் கொல்லப்பட்டவர்களுக்கான பொது வழிபாடு இடம்பெற்றது. அவர்களுடைய நினைவாக மரக்கன்றுகளும் நடப்பட்டன. மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, மன்னார் மறை மாவட்ட குருமுதல்வர் அன்ரனி விக்டர் சோசை அடிகளார் உட்பட அருட்தந்தையர்கள், பொதுமக்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர். (க-56)

## திருவாசக நிகழ்வு

*யாழ்ப்பாணம்.ஜன.7*

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாந்த திருவாசக நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும், சிறப்புரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் தி செல்வமனோகரனும் நிகழ்த்தினர். ஆலய வழிபாடுகளுடன் திருவாசக ஏடுகள் அடங்கிய திருப்பேழை, மங்கல வாத்திய சகிதம் சந்நிதியான் ஆச்சிரமத்துக்கு ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகி நடைபெற்றன. (ஐ)



முல்லைத்தீவு நெடுங்கேணி மாமடுச்சந்தி வெள்ளைப்பிள்ளையார் ஆலயத்தில் லண்டன் வோல்தம்ஸ்ரோ ஸ்ரீ கற்பகபதி கற்பக விநாயகர் ஆலயத்தின் நிதியுதவியுடன் இயங்கி வரும் "கற்பகா அறநெறி பாடசாலைக்கு, தாயக மக்களுக்கான தொண்டு நிறுவன இயக்குநர் மகேஸ்வரன் வருகை தந்து கருத்துரை வழங்கினார். (க-222)



## மர நடுகை

*யாழ்ப்பாணம்.ஜன.7*

யாழ்ப்பாணம் பண்ணை கடற்கரைப் பகுதியில் சிறப்பு மரநடுகை நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இம் மரநடுகை நிகழ்வில் யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் , மாநகர ஆணையாளர், பொறியியலாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மர நடுகையில் ஈடுபட்டனர். (ஐ)



## இலேசான மழை!

*கொழும்பு, ஜன. 7*

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் சில தடவைகள் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றுக் காலை வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது: சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சில இடங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேல், மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாகப் பலத்த காற்றும் வீசக்கூடும்.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

அதேவேளை காலியிலிருந்து ஹம்பாந்தோட்டை மற்றும் பொத்துவில் ஊடாக மட்டக்களப்பு வரையான கடற்பரப்புகளில் சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

கொழும்பிலிருந்து காலி வரையான கடற்பரப்புகளில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் பிரதானமாக சீரான வானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது வட கிழக்குத் திசையிலிருந்து வீசக்கூடும் என்பதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30 தொடக்கம் 40 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

மன்னாரிலிருந்து புத்தளம் மற்றும் கொழும்பு ஊடாக பலப்பிட்டி வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும்.

புத்தளத்திலிருந்து கொழும்பு ஊடாக பலப்பிட்டி வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும் - என்றுள்ளது. (ம)

## பொங்கல் விழா

இளவாலை,ஜன.7
இளவாலை வருத்தப்பபாத வாலிபர் சங்கத்தின் வருடாந்தப் பொங்கல் விழா இம்முறை எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.
யாழ்ப்பாண மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 16 அணிகளிடையான தாச்சிப் போட்டி 10 ஆம் திகதி ஆரம்பமாகி மின்னொளியில் நடைபெறவுள்ளது. அத்துடன் கபடிப் போட்டியும் நடைபெறவுள்ளது.
எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 7 மணிக்கு பண்டத்தரிப்புச் சந்தியில் இருந்து வடமாகாண ரீதியிலான சைக்கிளோட்டப் போட்டி இடம்பெறவுள்ளது. 12 ஆம் திகதி காலை6.30மணிக்குசித்திரமேழிச் சந்தியில் இருந்து மாபெரும் மரதன் ஓட்டப் போட்டி இடம்பெறும். பொங்கல்தினத்தன்று காலை 8.30 மணிமுதல் காங்கேசன்துறை வெளிச்சவீட்டருகே பட்டம் விடும் போட்டி இடம்பெறும்.
பிற்பகல் 2 மணிமுதல் இளவாலை வாலிபத்திடலில் சறுக்கு மரம் ஏறுதல், தலையணைச் சண்டை, கயிறு இழுத்தல், முட்டி உடைத்தல், முதலான பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளும், இரவு 7 மணி முதல் கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. (ஜ-222)

## தையல் பயிற்சி

மூளாய்,ஜன.7
வலி. மேற்குப் பிரதேசத்தில் தொழில் வாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் பெண்களுக்கான தையல் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
ஆறு மாதங்களைக் கொண்ட இந்தப் பயிற்சியில் ஆர்வமுடையவர்கள் இணைந்து கொள்ளலாம்.
பயிற்சியில் முடிவில் சுயமாகத் தையல் தொழில் முயற்சி ஒன்றை ஆரம்பிக்கக் கூடிய தொழில் தகைமையைப் பெற்றுக் கொள்ள முடியும்.
சங்கரத்தை மாதர்சங்க மண்டபத்தில் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும்.
வலி. மேற்குப் பிரதேச செயலகத்தில் உள்ள கிராம அபிவிருத்தி பிரிவு தையல் பயிற்சியை ஏற்பாடு செய்துள்ளது.
(க-121)

# கருணாவின் துரோகத்தை மறவோம்!

## என்கிறார் கோடீஸ்வரன்



கொழும்பு, ஜன. 7
விடுதலைப்புலிகளின் போராட்டத்தை சீரழித்து கொத்துக்கொத்தாக எங்களது தமிழ் மக்களைக் கொன்று குவித்தவர் கருணா என்பதை மறந்துவிடக்கூடாது. இவ்வாறு தெரிவித்தார் அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் .

மல்வத்தை கணபதிபுரம் விக்னேஸ்வரா வித்தியாலயம் மற்றும் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணம், கல்முனை மாநகர சபைக்குட்பட்ட தமிழ்க் கிராமங்களுக்கு வீதி விளக்குகள் வழங்கும் இருவேறு நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.
நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தை தரம் உயர்த்தும் விடயத்தில் கடந்த ஐக்கிய தேசியக்கட்சியின் அரசானது முஸ்லிம் காங்கிரஸின் சொல்லுக்கு அடிபணிந்து செயற்பட்டுள்ளது.
இதற்கு எதிராக நாங்கள் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சி காலத்திலே பலதரப்பட்ட போராட்டங்களையும் உண்ணாவிரத போராட்டங்களையும் மேற்கொண்டிருந்தோம்.
இருப்பினும் ஐக்கிய தேசிய கட்சி அரசால் கடைசியாக எங்களது தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டார்கள்.
இப்போது ஆட்சிப்பீடம் ஏறிய பொதுமக்கள் முன்னணியும் எமது மக்களை ஏமாற்றி வருகின்றது. இன்று அம்பாறை மாவட்டத்திற்கு வந்து நீலிக் கண்ணீர் வடிக்கும் கருணா, பிரதி அமைச்சராக இருந்த காலத்தில் அம்பாறை மாவட்டத்திற்கு என்ன செய்திருக்கிறார்.
கல்முனை வடக்கு பிரதேச செயலகம் பற்றி ஒரு வார்த்தை கூட பேசியிருக்கிறாரா? ஒரு நாளாவது கல்முனை பிரதேச செயலகம் தரமுயர்த்திக் கொடுக்க வேண்டியது குறித்து பேசியிருக்கிறாரா? அந்த நேரம் வாய்மூடி மௌனியாக இருந்தவர் தற்போது அம்பாறை மாவட்டத்தில் மக்களை சிதைத்து சின்னாபின்னமாக்க முற்படுகின்றார்.
விடுதலைப்புலிகளின் போராட்டத்தைச் சீரழித்து கொத்துக் கொத்தாக எங்களது தமிழ் மக்களைக் கொன்று குவித்தவர்.
அவ்வாறான கருணா எங்களுக்கு வந்து அபிவிருத்தி செய்வதா? கருணா அமைச்சராக இருக்கும் போதும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு எதுவும் செய்யவில்லை. உன்னிச்சை குளத்தில் இருந்து ரவூப் ஹக்கீமோடு இணைந்து முஸ்லிம்களுக்கு குடிதண்ணீரை வழங்கினார்.
அதாவுல்லாஹ்வோடுஇணைந்து காத்தான்குடிக்கு தண்ணீரை பெற்றுக் கொடுத்தார். அந்த நேரம் உன்னிச்சையில் இருக்கும் 17 தமிழ் கிராமங்களுக்கு குடிதண்ணீர் கொடுக்கப்படவில்லை. அப்போது முஸ்லிம்களுக்கு 'ஜால்ரா'போட்டுக் கொண்டு இருந்தவர்தான் இந்த கருணா என்பதனை மறந்து விடக்கூடாது - என்றார்.
(ம)

# நாளை மின்தடை

யாழ்ப்பாணம்,ஜன.7
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்வி நியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் நாளை புதன்கிழமை மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.
காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்ப்பாண மாவட்டத்தில் தொம்பை வீதி, உடுவில் மேலதிக அரசாங்க அதிபர் அலுவலக வீதி, அம்பலவாணர் வீதி, உடுப்பிட்டிநாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, கம்பர்மலை பாரதிதாசன் வீதி, பழைய பொலிஸ் நிலையம், வல்வெட்டித்துறையின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும், வவுனியா மாவட்டத்தில் கூமாங்குளம் கிராமம், பகல அளுத்வத்த கிராமம், சாளம்பைக்குளம், கந்தசாமிநகர், நித்திக்குளம், சண்முகபுரம்,கங்கன்குளம், செட்டிகுளம், புளியங்குளம், காந்திநகர், அரசடிக்குளம், தந்திரிமலை, சின்ன சிப்பிக்குளம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.
(ஐ)

## சிறுத்தை வேட்டை மூவர் சிக்கினர்

கொழும்பு, ஜன. 7
தேசிய பூங்காவில் பெண் சிறுத்தை ஒன்று சுட்டுக்கொல்லப்பட்டது தெரியவந்தது. இந்த சிறுத்தையைக் கொன்றனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
அந்தப் பெண் சிறுத்தையின் பல பற்கள் பிடுங்கப்பட்டும் சில உடல் அவயவங்கள் வெட்டப்பட்டும் காணப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட செவனகல பொலிஸார், சந்தேகத்தின் பேரில், மூன்று சந்தேக நபர்களை நேற்றுக் கைது செய்தனர்.
(ம)

# உபகரணங்கள் வழங்கல்

ஏழாலை, ஜன.7
மாகாண, தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் சாதனை படைத்த தெல்லிப்பழைப் பிரதேச விளையாட்டு வீரர்களுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.
புதுவருட தினத்தன்று தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற வேலை ஆரம்ப நாள் நிகழ்வின் போதே இந்தப் பொருள்கள் கையளிக்கப்பட்டன.
தெல்லிப்பழை பிரதேசசெயலர்பிரிவின் சமுர்த்தி சமூக அபிவிருத்திப் பிரிவினரால் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் நிதியுதவியில் இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன.
பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகளில் மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் முதல் மூன்று இடங்களையும் பெற்று சாதனை படைத்த மாணவர்களுக்கு வசதியளித்தல் - 2019 திட்டத்தில் இவை வழங்கப்பட்டன.
அந்தப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 25 விளையாட்டு வீர ர்களுக்கு தேவையான சீருடைகள்.
பாதணிகள், மற்றும் விளையாட்டு உபகரணங்களே இவ்வாறு வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.
நிகழ்வில், தெல்லிப்பழைப் பிரதேச செயலர் எஸ்.சிவசிறி, சமுர்த்தி வங்கி சங்க (மகா சங்கம்) முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி ஆனந்தகௌரி ஜெயக்குமார், சமுர்த்தி வங்கிகளின் முகாமையாளர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

****

யாழ்ப்பாணம், ஜன.7
மருதங்கேணி பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்கள் மற்றும் பொது அமைப்புக்களுக்கான உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை மருதங்கேணி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.
பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உபகரணங்கள், விளையாட்டுக் கழக மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதி களிடம் கையளிக்கப்பட்டன. பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் இணைப்பாளர் க.சூரியகாந், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர் கி.வீரவாகு தேவர், அதிகாரிகள், விளையாட்டுக் கழக உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.
நாடாளுமன்றஉறுப்பினர்சி.சிறீதரனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் ஊடாக இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.
(ஜ-222)



# கடலுணவு உற்பத்தியில் நெருங்க முடியாத '1983'

**யாழ்ப்பாணம், ஜன. 7**

**யாழ்ப்பாணக் குடாநாட்டின் கடல்வள உற்பத்தி கடந்த 10 ஆண்டுகளாக உயர்வடைகின்றபோதும் 1983ஆம் ஆண்டின் உற்பத்தியை இன்னமும் எட்டிப் பிடிக்கமுடியவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.**

போர்க் காலத்தில் மிகப் பின்தங்கிய நிலையிலிருந்த கடற்றொழில், போரின் பின்னர் முன்னேற்றம் கண்டபோதும் கடந்த அரசில் அது மேலும் வளர்ச்சியை எட்டியது. இவ்வாறு வளர்ச்சிப் போக்கை எட்டிய போதும் 1983ஆம் ஆண்டில் அதாவது போர் உச்சம்பெற்ற ஆண்டில் பெற்றிருந்த உற்பத்தியை 37 ஆண்டுகள் கடந்தும் இன்றுவரை ஈட்ட முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை அலுவலக புள்ளி விவரம் இதை உறுதிப்படுத்துகின்றது.

அதாவது 1983ஆம் ஆண்டு 48 ஆயிரத்து 677 மெற்றிக் தொன் கடலுணவு உற்பத்தி பெறப்பட்டுள்ளது.

போர்க்காலத்தில் அதாவது 1991 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் அண்டு வரையில் ஆயிரம் மெற்றிக் தொன்னில் இருந்து 5 ஆயிரம் மெற்றிக் தொன்னைத் தாண்டியதே கிடையாது.

இதேநேரம் 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளிலும் மூவாயிரம் மெற்றிக் தொனுக்கும் குறைவான உற்பத்தியே பெறப்பட்டுள்ளது.

இருப்பினும் போர் முடிவுற்ற நிலையில் 2010ஆம் ஆண்டில் 20 ஆயிரத்து 739 மெற்றிக் தொன், 2011இல் 24 ஆயிரத்து 230 மெற்றிக் தொன், 2012ஆம் ஆண்டில் 28 ஆயிரத்து 395 மெற்றிக் தொன், 2013ஆம் ஆண்டில் 28 ஆயிரத்து 637 மெற்றிக் தொன் கடல் உற்பத்தி பெறப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டில் 31 ஆயிரத்து 767 மெற்றிக் தொன் உற்பத்தி பெறப்பட்டு 2015இல் 31 ஆயிரத்து 448 மெற்றிக் தொன் உற்பத்தி பெறப்பட்டுள்ளது.

இதேநேரம், 2016ஆம் ஆண்டில் 31 ஆயிரத்து 476 மெற்றிக் தொன் பெறப்பட்ட நிலையில் இந்த அளவு 2017 ஆம் ஆண்டில் வளர்ச்சி கண்டு 43 ஆயிரத்து 683 மெற்றிக் தொன் உற்பத்தி பெறப்பட்ட நிலையில் 2018ஆம் ஆண்டில் 40 ஆயிரத்து 401 மெற்றிக் தொன் மட்டுமே பெற முடிந்துள்ளது.

இதேபோன்று 2019ஆம் ஆண்டில் மீண்டும் வளர்ச்சி கண்டு 43 ஆயிரத்தைத் தாண்டிய உற்பத்தி பெறப்பட்டுள்ளது.

எனினும், 1983ஆம் ஆண்டு பெறப்பட்ட உற்பத்தியை இன்னும் நெருக்க முடியாமலேயே குடாநாட்டின் மீன்பிடி உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-105)

## கால்கோள் விழா

சாவகச்சேரி, ஜன. 7

பாடசாலைகளில் முதலாம் தரத்தில் இணைந்த மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறும். இந்த நிகழ்வில் வலயம் சார்பில் ஓர் அதிகாரி கால்கோள் விழா நடைபெறும் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என்று கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் கால்கோள் விழா மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்தில் நடைபெறும். வித்தியாலய அதிபர் க.எழிலழகன் தலைமையில் நடைபெறும் விழாவில் பிரதம விருந்தினராக வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் கலந்து கொள்வார். (க-9)



## சிறுமியை தாக்கியோர் மறியலில்!

*கொழும்பு, ஜன. 7*

குருணாகல் - நிக்கவரெட்டிப் பகுதியில் பாடசாலை மாணவி மீது தாக்குதல் நடத்தினார் எனச் சந்தேகிக்கப்படும் பெண் கிராம சேவகர் உள்ளிட்ட மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த சந்தேகநபர்கள் மூவரையும் நிக்கவரெட்டி நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் மாலை முன்னிலைப்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய அவர்களை இம்மாதம் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கொட்டவெஹர பிரதேசத்தில் 13 வயதான சிறுமி ஒருவரை அந்தச் சிறுமியின் இரண்டாவது தாய் மற்றும் அவரின் சகோதரி ஆகியோர் மனிதாபிமானமற்ற வகையில் தாக்கிய காணொலியை அயலவர் ஒருவர் தனது கையடக்கத் தொலைபேசியில் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

குறித்த ஒளிப்பதிவு ஊடகங்களின் ஊடாக ஒளிபரப்பானது.

இந்தச் சம்பவம் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுத்த பொலிஸார், சிறுமியின் தந்தை உள்ளிட்ட மேலும் இரு பெண்களையும் கைது செய்தனர்.

பின்னர் காயமடைந்த சிறுமி நிக்கவரெட்டி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், ஸ்கேன் பரிசோதனைக்காக அவர் தற்போது குருணாகல் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக கொட்டவெஹர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

*யாழ்ப்பாணம் ஜன.7*

யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவையின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாண பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

பிரதேச செயலர் எஸ். சுதர்சன் தலைமையில் இடம்பெறவுள்ள கூட்டத்தில் வடமாகாண திருத்தியமைக்கப்பட்ட யாப்புக் கிணங்க புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம்பெறவுள்ளது.

அத்துடன் புதிய ஆண்டுக்கான செயற்றிட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளன. யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவினை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட சகல துறைசார்ந்த கலைஞர்களையும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ந -6)

## அதிநவீனமான இயந்திரத்துடன் புதையல் தேடியவர்கள் கைது

முல்லைத்தீவு,ஜன.7

சொகுசுக் காரில் வந்து அதிநவீன இயந்திரத்துடன் புதையல் தோண்டிய தென்பகுதியைச் சேர்ந்த நால்வர் நேற்றுக் காலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

முல்லைத்தீவு மாங்குளம் ஏ9 வீதியில் பொலிஸார் நடத்திய சோதனை நடவடிக்கையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

மாங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுசிந்த தொட்டக்கொட, உதவிப் பொலிஸ் அதிகாரி ஏ.லக்சிறி விக்கிரமகே ஆகியோருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து சோதனை இடம்பெற்றது.

சந்தேகத்துக்கு இடமான சொகுசுக் காரை மறித்த போது, அதில் இருந்த நால்வரும் தெற்கைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்தது. வாகனத்தைச் சோதனையிட்ட போது, அதில் புதையல் தோண்டப் பயன்படுத்தப்படும் அதி நவீன இயந்திரம் மீட்கப்பட்டது.

அதனையடுத்து நால்வரும் மாங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். விசாரணைகளின் போது அவர்களிடம் இருந்த மடிக்கணினி மற்றும் 25 இலட்சம் பெறுமதியான ஸ்கானர் இயந்திரம், 5 இலட்சம் பெறுமதியான இரத்தினக்கல் என்பன மீட்கப்பட்டன.

பதுளையைச் சேர்ந்த மூவரும், பேருவளையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற சிப்பாய் ஒருவருமாக நால்வர் கைது செய்யப்பட்டனர். முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (க-ரி3)

## பிரதிப்பொலிஸ்மா அதிபருடன் பொது அமைப்புக்கள் சந்திப்பு

*வவுனியா,ஜன.7*

வன்னி மாவட்டத்துக்கான புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபரை பொது அமைப்புக்கள் சில சந்தித்து கலந்துரையாடின.


வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பு உட்பட பல பொது அமைப்புக்கள் இணைந்து மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடின எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



## தீவகத்தில் 150 ஏக்கரில்
# இறால் பண்ணை அமைக்க முயற்சி

**யாழ்ப்பாணம், ஜன. 7**

**வேலணை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 150 ஏக்கரில் இறால் பண்ணை அமைப்பதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது. தனியார் நிறுவனம் ஒன்று அனுமதிக்கு விண்ணப்பித்துள்ளது. நிறுவனம் கோரிய இடத்தை வழங்குவதால், நன்னீருக்குப் பாதிப்பு ஏற்படும் என்று தெரிவித்து அனுமதி வழங்கக் கூடாது என உள்ளூர் அமைப்புக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. பண்ணை அமைப்பதால் எந்தச் சுற்றுச் சூழல் பாதிப்பும் இல்லை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்**



**அமைவிடம்**

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அராலி வெளிப் பகுதியில் 150 ஏக்கரில் இறால் பண்ணை அமைக்க நீண்ட காலத்துக்கு முன்னர் தனியார் நிறுவனம் அனுமதி கோரியுள்ளது.

அராலி உவர்நீர் தடுப்பணைக்கு வெளியே உள்ள 150 ஏக்கர் அரச காணியே இதற்காக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

அடையாளப்படுத்தப்பட்ட இடத்தை சுற்றுச்சூழல் அனுமதியுடன் தொடர்புடைய திணைக்கள தலைவர் நேரடியாக கடந்த 26ஆம்திகதிசென்றுபார்வையிட்டுள்ளார். வேலணை பிரதேச செயலகம் இதற்கான ஒழுங்குகளைச் செய்து கொடுத்திருந்தது.

**பரிந்துரை**

கடற்கரையோர பாதுகாப்புத் திணைக்களம், யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம், இலங்கை தேசிய நீர்உயிரின வளர்ப்பு அதிகார சபை ஆகியன இறால் பண்ணை அமைப்பதால் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு இல்லை என்று பரிந்துரை வழங்கியுள்ளன.

வேலணை பிரதேச சபை தனது பரிந்துரையை வழங்கவில்லை. பிரதேச சபை உறுப்பினர்களுக்கு இந்தத் திட்டம் தொடர்பில் இலங்கை தேசிய நீர்உயிரின வளர்ப்பு அதிகார சபை ஊடாக தெளிவுபடுத்தல் கூட்டம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இதேபோன்றதொரு பண்ணை மன்னாரில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அதனை நேரில் சென்று பார்வையிடுவதற்கும் தீர்மா னிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னரே தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்க முடியும் என்று வேலணைப் பிரதேச சபை தெரிவித்துள்ளது.

**நன்னீர்வளம்**

இறால் பண்ணை அமைக்கப்படுவதன் ஊடாக தமது நன்னீருக்குப் பாதிப்பு ஏற்படும் என்று உள்ளூர் அமைப்புக்கள் தெரிவிக்கின்றன. சாட்டிக் கடலுக்கு எதிர்ப் பக்கத்திலேயே இந்தத் திட்டம் செயற்படுத்தப் படவுள்ளது.

தீவகத்துக்கான நன்னீர் வளம் சாட்டியிலேயே இருக்கின்றது. எனவே தமது நன்னீர் வளம் பாதிக்கும் என்று உள்ளூர் அமைப்புக்கள் குறிப்பிடு கின்றன. இதே போன்றதொரு திட்டம் புத்தளத்தில் செயற்படுத்தப்பட்டது. அங்கு நோய்த் தொற்றுகள் பரவியிருந்தன. எனவே இதனை அனுமதிக்க முடியாது என்று உள்ளூர் அமைப்புக்கள் குறிப்பிடுகின்றன.

**பாதிப்பில்லை**

'150 ஏக்கரை கோரியுள்ளபோதும் தற்போது முதல் கட்டமாக 75 ஏக்கரே வழங்குவதற்காக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அராலி உவர் நீர்த் தடுப்பணைக்கு வெளியேதான் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. எனவே நன்னீருக்குப் பாதிப்பு ஏற்படாது. பண்ணை அமைக்கும் பகுதியில் வேலணைப் பிரதேசத்தைச் சேர்ந்த எவரும் கடற்றொழிலில் ஈடுபடவில்லை. கடல் நீரை பண்ணைக்குக் கொண்டு வந்தாலும், மிகத் தடிப்பான விரிப்புக்கு மேலேயே அந்த நீர் தேக்கப்படவுள்ளது. கடல் நீர் நிலத்துக்குள் செல்வதற்கான வாய்ப்புக் குறைவு. இதேபோன்ற திட்டம் மன்னாரில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இலங்கை தேசிய நீர்உயிரின வளர்ப்பு அதிகார சபை, மன்னார், பூநகரி, ஊர்காவற்றுறை, வேலணை ஆகிய பகுதிகளை கடலட்டை, இறால், நண்டு வளர்ப்புக்கு உகந்த இடம் என்று தெரிவு செய்துள்ளது.

இதேவேளை, மேற்படி திட்டத்துக்கு இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை. பிரதேச செயலக காணி பயன்பாட்டுக் குழுக் கூட்டத்தில் அனுமதி பெற்று அதன் பின்னர் மாவட்ட காணி பயன்பாட்டுக் குழுக் கூட்டத்தில் அனுமதி பெறப்பட்டு, மாகாண காணி ஆணையாளரின் அனுமதி பெறப்பட்டு, கொழும்பு அரசின் காணி ஆணையாளரின் அனுமதி பெறப்பட்ட பின்னரே, காணி வழங்கப்படும்' என்று வேலணை பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

**பாதிப்பு**

'யாழ்ப்பாணக் குடாநாடு கடல் நீரில் மிதக்கின்ற குட்டித் தீவாகவே இருக்கின்றது. இதனுள் கடல் நீரை உள்ளே கொண்டு வரும் எந்தத் திட்டமும் எமது மாவட்டத்துக்குப் பாதிப்பானதே.

புத்தளம்மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட இந்தத் திட்டத்தால் பெரும் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டது' என்று தனது பெயரை வெளிப்படுத்த விரும்பாத, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரபல சுற்றுச்சூழலியலாளர் ஒருவர் 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார். (ஒ.5)



## பட்டப்பகலில் அபகரிப்பு

கொடிகாமம், ஜன. 7

ஆசிரியர் ஒருவரின் வீட்டில் பட்டப்பகலில் 3 பவுண் நகை மற்றும் 30 ஆயிரம் ரூபா பணமும் இனந்தெரியாதவர்களால் அபகரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொள்ளைச் சம்பவம் கொடிகாமம் மடத்தடி வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

ஆசிரியர்கள் இருவரும் கடமைக்குச் சென்ற வேளையில், மதிலால் ஏறி உட்சென்ற திருடர்கள் விறந்தைக் கதவை உடைத்து உள்நுழைந்து, இரண்டு பவுண் சங்கிலி, ஒரு பவுண் காப்பு ஆகியவற்றுடன் கோவிலுக்குக் கொடுப்பதற்காக சேர்த்து வைத்திருந்த 30 ஆயிரம் ரூபா பணத்தையும் சூறையாடிச் சென்றுள்ளனர்.

கடமை முடிந்து வீடு திரும்பிய ஆசிரியர் வீடு திறந்திருப்பதைக் கண்டு திருட்டு இடம்பெற்றதை அறிந்தார். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-159)

## வீதி விபத்தில் இருவர் காயம்

கொடிகாமம், ஜன. 7

இ.போ.ச பேருந்தும், மினிபஸ்ஸும் விபத்துக்குள்ளாகியதில் சாரதிகள் இருவரும் காயமடைந்தனர்.

இந்த சம்பவம் நுணாவில் தென்னிந்திய திருச்சபைக்கு அருகாமையில் ஏ9 வீதியில் நேற்று மதியம் 12.30 மணியளவில் இடம் பெற்றது கண்டியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்ற இ.போ.ச பேருந்தும், யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் நோக்கி சென்ற மினிபஸ்ஸும் மோதியதில் விபத்து இடம்பெற்றது.

இதன்போது சாரதிகள் இருவரும் சிறு காயங்களுக்குள்ளான நிலையில் சமாதானமாகி சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-159)

## எழுத்தூர் - பெரியகமம் வீதியை சீரமைப்பதற்கு திட்டம் தயார்

மன்னார், ஜன. 7

மக்கள் பயணிக்க முடியாது மோசமாகக் காணப்படும் மன்னார் எழுத்தூர் - பெரியகமம் வீதியைச் சீரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மன்னார் நகர சபையின் உப தவிசாளர் மைக்கல் கொலின்ஸ் தெரிவித்தார்.

தலைமன்னார் எழுத்தூர் பிரதான வீதியில் இருந்து மன்னார் பெரியகமம் செல்லும் பிரதான வீதி சீரமைக்கப்படவில்லை என்று சுட்டிக்கப்பட்டது.

அந்த வீதியில் காணப்படும் பள்ளத்தில் கடந்த மாதம் பெய்த மழையின் காரணமாக மழை நீர் நிறைந்து மக்களுடைய போக்குவரத்துக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள், முதியவர்கள் எனப் பலர் துவிச்சக்கர வண்டிகளில் செல்லும் போது வீதியில் வீழ்ந்த சம்பவங்களும் இடம்பெற்றன. வீதியில் நீர் வழிந்தோடாது தேங்கி நிற்பதால் சுகாதாரச் சீர்கேடுகளும் ஏற்படுகின்றன என்று மக்கள்



குற்றஞ்சாட்டியிருந்தனர். உரிய தரப்பினர் அந்த வீதியை விரைந்து சீரமைத்து தருமாறும் கோரிக்கை விடுத்திருந்தனர். மக்களுடைய கோரிக்கை தொடர்பாக மன்னார் நகர சபையின் உப தவிசாளர் மைக்கல் கொலின்ஸை தொடர்பு கொண்ட போது;

"வீதியின் நிலமை எம்மால் நேரில் சென்று பார்வையிடப்பட்டது. அந்த வீதியான அக்ஸஸ் நிறுவனத்தால் அபிவிருத்திசெய்வதற்கு உள்ளீர்க்கப்பட்டுள்ளது. அவை தாமதமாவதால் மன்னார் கோட்டையின் அருகில் தொல்பொருள் திணைக்களத்தால் கோட்டைப் புறங்களில் தோண்டி குவிக்கப்பட்டுள்ள மண்ணைப் பெற்று குறித்த வீதியின் பள்ளத்தை மூடுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

அந்த பள்ளத்தில் உள்ள நீர் வற்றிய பிறகு அவை சீர் செய்து கொடுக்கப்படும்" என்றார். (ஜ-213)

# தோல்விக்குக் காரணம் ரணிலே!

## பொன்சேகாவும் விரல் நீட்டினார்

கொழும்பு, ஜன. 7
ஜனாதிபதித் தேர்தலில் பெற்றுக்கொண்ட பெறுபேறுகளுக்கும் நல்லாட்சி அரசின் மீதான மக்களின் அதிருப்திக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கதான் காரணம் என அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கிரிபத்கொடயில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:


'மக்களின் எதிர்பார்ப்பை முழுமையாக நிறைவேற்ற எம்மால் முடியாது போய்விட்டது.

நல்லாட்சி என்ற அரசாங்கத்தை நிறுவி, மக்களுக்கான சேவைகளை மேற்கொள்ள நாம் மறந்து விட்டோம். இதற்கு முன்னாள் அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும். விசேடமாக, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்தான் இந்த பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படவில்லை. சுயநலமாகத்தான் சில விடயங்கள் செய்யப்பட்டன. எமது அரசு பெரிய தவறிழைத்து விட்டது.

இறுதியில் இதன் பிரதி பலனாகத்தான் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் அமைந்தன.

இதனால், எமது ஜனாதிபதி வேட்பாளர்தான் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்' என்றார். (ம)



## மதிப்பளிப்பு நிகழ்வு

முல்லைத்தீவு,ஜன.7
பாடசாலைக்குச் செல்லவுள்ள முல்லைத்தீவு கோம்பாவில் தளிர் முன்பள்ளிச்சிறார்களுக்கான மதிப்பளிப்புநிகழ்வு கடந்த சனிக்கிழமை முன்பள்ளியில் இடம்பெற்றது.

முன்பள்ளியின்முதன்மை ஆசிரியர்தலைமையில் புதுக்குடியிருப்பு சிறிதுர்க்கை அம்மன் ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகளுடன் நிகழ்வு ஆரம்பமானது.

தொடர்ந்து விருந்தினர் வரவேற்பு, இறை வணக்கம், மங்கல விளக்கேற்றல், விருந்தினர்களது உரை, சிறார்களது கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன.

அதனையடுத்து இவ்வாண்டு பாடசாலைக்குச் செல்லும் முன்பள்ளிச் சிறார்கள் மதிப்பளிக்கப்பட்டனர்.

நிகழ்வில் விருந்தினர்களாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா, வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், புதுக்குடியிருப்புப் பிரதேசசபையின உபதவிசாளர் க.சனமேசயந் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-222)

## அலங்கார உற்சவம்

வட்டுக்கோட்டை,ஜன.7
சங்கரத்தை குளத்தடி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய அலங்கார உற்சவப் பெருவிழா எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை வரை பத்துத் தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறும்.

நிறைவுநாளன்று காலை 7மணிமுதல்சங்கரத்தை பிட்டியம்பதி வீரபத்திர சமேத பத்திரகாளி அம்பாள் ஆலயத்திலிருந்து பாற்குடப்பவனி இடம்பெறும்.

இந்த உற்சவ காலங்களில் "சைவத்தமிழ் மக்கள் பேண வேண்டிய விழுமியங்கள்" எனும் பொருளில் ஆசிரியர் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தனின் தெய்வீகப் பேருரை இடம்பெறும். (க)

## உயிர்த் தியாகங்களுடன் பணியாற்றியது செஞ்சிலுவை

### அதன் முன்னாள் தலைவர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜன.7
போர்க்காலத்தில், பல தொண்டர்களுடைய உயிர்கள் போனபோதும், களத்தில் நின்று மக்களுக்குப் பணியாற்றியது கிளிநொச்சியில் உள்ள செஞ்சிலுவைச் சங்கமே என்று அதன் முன்னாள் தலைவர் வேழமாலிகிதன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் உள்ள இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வு நேற்று முன்தினம் தலைவர் த.சேதுபதி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது;

செஞ்சிலுவைச் சங்கத்தின் நோக்கங்களை நிறைவுசெய்வதற்குசெயற்திட்டங்களை நிறைவு செய்வதற்கும், போர் எங்களுக்கு ஒரு காரணமாக இருந்தது.

உண்மையில் கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கமானது வரலாற்றில் இடம் பிடித்த சங்கமாகத் திகழ்ந்தது.

போர்க் காலத்தில் பல தொண்டர்கள் இந்த மண்ணில் சேவைகளை மேற்கொண்டு உயிர்த் தியாகங்களைச் செய்திருந்தனர்.

அவ்வாறன மனிதநேய பணிகளை மேற்கொண்ட கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கம் பல திறமையான ஆளுநர் சபைத் தலைவர்களின் சிறப்பான வழித்தடத்தில் தனது மனித நேயப் பணிகளை மேற்கொண்டது.

இவ்வாறான மனித நேயப் பணிகளை மேற்கொள்ளும் இந்த இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிக் கிளை தொடர்ந்தும் மகத்தான பணிகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும்-என்றார். (ஐ-6)



சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழைய மாணவர்களால் கடந்த வருடம் இரணைமடுக்குளத்தில் தவறி வீழ்ந்து உயிரிழந்த நேசதுரை நிலக்ஷனின் பிறந்த நாள் நினைவாக கல்லூரியின் ஒன்றுகூடல் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை குருதிக் கொடை வழங்கப்பட்டது. (க-ரி1)

## தசாப்த விழா

வவுனியா,ஜன.7
வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயத்தின் தசாப்த விழா நேற்று முன்தினம் பாடசாலையில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாணவர்களின் நிகழ்வுகள் இடம்பெற்றன.


நிகழ்வில்நாடாளுமன்ற உறுப்பினர்களும் மற்றுபலரும் கலந்து கொண்டனர். (க-222)

## ஏறுகிறது தேங்காய்

சாவகச்சேரி,ஜன.7
தென்மராட்சிப் பிரதேச சந்தைகளில் தேங்காயின் விலை திடீரென அதிகரித்துள்ளது. ஒரு தேங்காய் அதிகரித்த விலையாக 70 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த வருட இறுதிப் பகுதியில் பெய்த கடும் மழையின் பின்னர் தேங்காயின் விலை வீழ்ச்சியடைந்திருந்தது. இந்தப் புதுவருடத்தின் பின்னர் திடீரென விலை அதிகரித்துள்ளது என்று பாவனையாளர்கள் தெரிவித்தனர். அண்மையில். 10 ரூபா தொடக்கம் 22 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட தேங்காய், தற்போது 30 ரூபா தொடக்கம் 70 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

தென்பகுதிக்கு வாகனங்களில் தேங்காய் கொண்டு செல்வோர் தென்னந்தோட்டங்களுக்குச் சென்று கொள்வனவு செய்வதால், சந்தைகளுக்குத் தேங்காயின் வருகை குறைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (க-9)



நல்லூர் கல்வியங்காடு வீரபத்திர தேவஸ்தான சபரீச ஐயப்ப மகரஜோதி மண்டலப் பெருவிழாவின் இறுதி நாளான நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சுவாமி தெரு வீதியுலா வந்த வேளை... (க)

## ரயில் பயணிகளுக்கு நிவாரணப் பொதிகள்

கொழும்பு, ஜன. 7
ரயில் பயணிகளுக்கு 500 ரூபா நிவாரண விலையிலான பொருள்கள் அடங்கிய பொதியொன்றை வழங்குவதற்கான விசேட வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக லங்கா சதொச தலைமை நிறைவேற்று அதிகாரி துஷ்மந்த தொடவத்த தெரிவித்திருந்த நிலையில் அடுத்த வாரம் முதல் மேற்படி நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று தகவல் வெளியாகியுள்ளது. சிவப்பு அரிசி, பருப்பு, சீனி, ரின்மீன் என்பன குறித்த பொதியில் அடங்கியுள்ளன.

பொதுமக்களின் கோரிக்கைக்கு அமைய இந்த பொருள்கள் அடங்கிய பொதியை மாற்றிக் கொள்வதற்கு லக்சதொச நிறுவனம் தயாராக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# பாடசாலைகள் மூடப்பட பெற்றோர்களே காரணம்

## இனியாவது கவனமெடுங்கள் என்று சாள்ஸ் எம்.பி. தெரிவிக்கின்றார்



**வவுனியா, ஜன. 7**

**கிராமங்களிலுள்ள பல பாடசாலைகளில் பெற்றோர்கள் மாணவர்களைச் சேர்க்காமையாலும் பெற்றோரின் ஒத்துழைப்பு இல்லாமையாலும் அத்தகைய பாடசாலைகள் மூடப்படுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு அந்தந்தக் கிராமங்களிலுள்ள பெற்றோர்களே காரணகர்த்தாக்கள்.**

இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மல நாதன்.

வவுனியா புதுக்குளம் கனிஷ்ட வித்தியாலயத்தின் தசாப்த விழா மற்றும் சாதனை மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. அதில் உரை யாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

35க்கும் உட்பட்ட மாணவர்கள் இருந்தால் பாடசாலைகள் மூடப்படு கின்ற நிலை வடக்கு மாகாணத்தில் உள்ளது. இந்தநிலை வடக்கில் பல இடங்களிலும் நீடிக்கின்றது. பல பாடசாலைகளை, அருகிலுள்ள பாடசாலைகளுடன் இணைத்து இயக்குகின்ற நிலைமையும் காணப்படுகின்றது.

எமது மாணவர்களின் சாதனை களே எங்களுக்கு ஓரளவு நிம்மதி கொடுக்கின்றது.

மாணவர்களின் வெற்றிகளும் சாத னைகளுமே அரசியல் ரீதியான இருப்புக்குப் பக்கபலமாக அமை யும் என்பதே உண்மை.

பாடசாலையில் சிறுபராயத்தில் சாதனை படைத்துவிட்டு பல்கலைக் கழகம் சென்று பட்டங்கள் பெற்ற பின்னர் பலர் தமது ஆரம்பப் பாட சாலைகளையும் ஆசிரியர்களை யும் மறந்துவிடுகிறார்கள்.

வடக்கு மாகாணத்தில் பெயர் சொல் லக்கூடியவர்களாகவும் கல்விமான் களாகவும் இருக்கின்றவர்கள், தமது ஆரம்பக் கல்வியை ஒரு பாடசாலையில் சாதாரண ஆசிரியர் களிடம்தான் கற்றிருப்பார்கள். அந்த ஆசிரியர்களே ஒரு மாண வன் எதிர்காலத்தில் எவ்வாறு வரப் போகின்றான் என்று அவனை முழு மைப்படுத்துவதில் மிகப்பெரிய பங்கு வகிக்கின்றனர் -என்றார். (த-110)





## பொறியியல் பீடத்தில் கண்காட்சி

**கிளிநொச்சி, ஜன. 7**

யாழ் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்தக் கண்காட்சி, கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ் பல்கலைக்கழ கப் பொறியியல் பீடத்தில் நேற்று ஆரம்பமானது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

இலவச மருத்துவ முகாம், குருதித்தானம், பாடசாலை மாணவர்களுக்காக விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்ட பல்கலைக்கழக வெட்டுப்புள்ளி பற்றி விளக்கம், தனி யார் கற்கை நெறிகள் பற்றிய விளக்கம், பாடசாலை மாணவர்களின் தொழிநுட்ப அறிவாற்றலை மேம்படுத் தும் வகையில் பயிற்சிப் பட்டறை, பொழுதுபோக்கு களுக்காக புகைப்பட நிகழ்வு, இசை நிகழ்ச்சி உள்ளிட் டவை கண்காட்சியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் குறைந்த செலவிலான மனைகள் அமைத் தல், நீர் முகாமைத்துவத்தைப் பேணல், நவீன நகர திட்டம், நவீன போக்குவரத்து முறைமைகள், ரோபோக் கள், நவீன கட்டுமானத் துறை உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு விளக்கங்களும் வழங்கப்படும்.

வவுனியா, திருகோணமலை உள்ளிட்ட பல்வேறு பிர தேசங்களிலிருந்தும் மாணவர்கள் வருகை தந்து கண் காட்சியைப் பார்வையிட்டனர். கண்காட்சி நாளை காலை 8 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை இடம் பெறும். (க-6.35)

## வாசிப்பு மாத பரிசளிப்பு நிகழ்வு

**கொடிகாமம், ஜன. 7**

சாவகச்சேரி பிரதேச சபையின் மிருசுவில் பொது நூலகத்தின் வாசிப்பு மாத பரிசளிப்பு நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை நூலக மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

"வாசிக்கும் சமூகத்தை உருவாக்க சிறுவர்க ளிடமிருந்து ஆரம்பிப் போம்" எனும் தொனிப் பொருளில் சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசா ளர் க.வாமதேவன் தலை மையில் நடைபெறவுள் ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் ஏ.எஸ்.ஏ அலெக்சாண்டர், சிறப்பு விருந்தினராக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவ லக சனசமூக அபிவி ருத்தி உத்தியோகத்தர் திருமதி செ ஜெகதீசன், கௌரவ விருந்தினர்க ளாக மிருசுவில் அபிவி ருத்தி உத்தியோகத்தர் து.பாலஈஸ்வரன், கிராம அலுவலர் செல்வி த.வாகினி, சாவகச்சேரி லயன்ஸ் கழக மாவட்ட இணைப்பாளர் த.இரவீந் திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்க வுள்ளனர். (ஐ-159)

## வைகுண்ட ஏகாதசி தேர்த்திருவிழா



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய மார்கழி மாத வைகுண்ட ஏகாதசி மகோற்சவத்தின் தேர்த்திரு விழா நேற்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெற்றது.

திருவிழா கடந்த 29ஆம் திகதி கொடியேற்றத்து டன் ஆரம்பமானது. நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை 3.30 மணிக்கு 108 சங்காபிசேகம் இடம்பெற்று, விசேட பூசையும் இடம்பெற்றது.

தொடர்ந்து சுவர்க்கவாயில் தரிசனம் இடம்பெற்றது. முற்பகல் 10 மணிக்கு வசந்தமண்டபப்பூசை ஆரம் பமாகி 11 மணிக்கு தேர்த்திருவிழா இடம்பெற்றது.

இன்று செவ்வாய்க்கிழமை திருவடிநிலையில் தீர்த்தத்திருவிழா இடம்பெறும். (க-21)



## பி.எஸ்.எம்.சாள்ஸ் பொருத்தமானவர்

**வவுனியா, ஜன. 7**

வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்ட திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ், அந்தப் பதவிக்கு மிகப் பொருத்த மானவர். அதனால்தான் ஜனாதிபதியும் பிரதமரும் அவரை நியமித்துள்ளனர் என்று முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் எஸ்.கனகரட் ணம் தெரிவித்துள்ளார்.

ஆளுநர் ஊடாகப் பல வேலைத்திட்டங்களை ஜனாதி பதியும் பிரதமரும் செய்யவுள்ளனர். தமிழ், முஸ்லிம், சிங்களம் என்ற வேறுபாடு இல்லாமல்

வன்னிப் பகுதியில் செய்யக் கூடிய பல வேலைகளை ஆளுநர் ஊடாக அவர்கள் செய்வார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-ரி4)

## நடமாடும் சிறுநீரக பரிசோதனை

**வவுனியா, ஜன. 7**

வவுனியா மாவட்ட சிறுநீரக நோய் தடுப்புப் பிரிவினரால் வவு னியா நகரப்பகுதியில் நடமாடும் சிறுநீரகப் பரிசோதனை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

'ஆரோக்கியமான வாழ்க்கைக்கு சிறுநீரகங்களைப்பாதுகாப் போம்' எனும் தொனிப்பொரு ளில், சிறுநீரக நோய் மருத்துவர் பிரசன்னா மற்றும் வவுனியா பிராந்திய சிறுநீரக நோய் தடுப் புப்பிரிவுமருத்துவ அதிகாரி குசான் ராஜகருண தலைமையில் பரி சோதனைகள் இடம்பெற்றன.

சிறுநீரக நோயுள்ளவர்களை ஆரம்பத்திலேயே அடையாளம் காணும் நோக்குடன், வவுனியா நகரத்தில் அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்கள், அரச திணைக்களங்கள், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களி டம் குருதி மாதிரி பெற்று சிறு நீரகப் பரிசோதனை மேற் கொள்ளப்பட்டது.

நீண்டகால சிறுநீரக நோய்க ளின் தாக்கம் அதிகமாக உள்ள பிரதேசத்தில் வாழ்கின் றவர்கள், குடும்பத்தில் யாருக்கா வது சிறுநீரக நோய்கள் இருந்தால், குடும்பத்தில் யாரா வது சிறுநீரக நோயால் இறந்தி



ருப்பின் அவர்களை அடையா ளம் காணும் நடவடிக்கையா கவே இந்தப் பரிசோதனை நடவ டிக்கை முன்னெடுக்கப்பட்டது. (க-110)

## பொருளாதாரத் தடைக்கு
# எதிராகப் போராடியோரும் நினைவு கூரப்படவேண்டும்

**யாழ்ப்பாணம், ஜன. 7**

**எமது மண்ணில் விடுதலைக்காகப் போராளிகள் போராடியவர்கள் மட்டுமன்றி அதேநேரம் எமது பொருளாதாரத் தடைக்கு எதிராகப் போராடியவர்களும் கொல்லப்பட்டனர். அவர்களையும் நினைவுர வேண்டும் என்று நெடுங்கேணி பண்ணையாளர் சங்கத் தலைவர் வை.பூபாலசிங்கம் தெரிவித்தார்.**

2007ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 05ஆம் திகதி இராணுவ ஆழ ஊடுருவும் படையினரின் கிளைமோர்த் தாக்குதலில் உயிரிழந்த இரு விவசாயத் திணைக்கள ஊழியர்களின் நினைவுதினம் நெடுங்கேணி கமநல சேவைத் திணைக்கள அலுவலகத்தில் நெடுங்கேணி பண்ணையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் வருடாந்தம் இடம்பெறுவது வழமை. இதன்பிரகாரம் இந்த ஆண்டும் மேற்கொள்ளப்படும்.

2007ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதி நெடுங்கேணி ஐயங்கோவில் ஏற்றப் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட கிளைமோர்த் தாக்குதலில் இரு அரச அலுவலர்களும் அநியாயமாக உயிரிழந்தனர். விவசாய மக்களின் வாழ்வியலோடு தொடர்புபட்டு உழைத்த இந்த விவசாயப் போதனாசிரியர்களை நாம் அன்றைய தினத்தில் இழந்தோம். கனகலிங்கம் மற்றும் மகேந்திரன் ஆகியோரே உயிரிழந்தனர்.

எமது மண்ணில் அன்று போராட்டம் இடம்பெற்ற காலத்தில் பொருளாதாரத் தடையும் மிக இறுக்கமாக இருந்தது. இந்த நேரத்திலேயே பொருளாதாரத் தடைக்கு எதிராகவும் போராடவேண்டிய தேவை இருந்தது. அந்தப் போராட்டத்தில் இந்தப் போதனாசிரியர்களின் பங்கு மிகமுக்கியமானதாகக் காணப்பட்டது.

அவ்வாறான நெருக்கடியான நேரத்திலேயே இவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அவர்கள் இருவரையும் ஆண்டுதோறும் நினைவு கூரவேண்டியது விவசாயிகளான எமது கடமை - என்றார். (த-105)



கணினிப் பயிற்சிகளை நிறைவு செய்த வலி. மேற்கு பிரதேச செயலக அலுவலர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. (ஜ-121)

# அநீதியான கைதுகளா?
## சட்டநடவடிக்கை எடுங்கள் என கெஹலிய சீண்டல்

**கொழும்பு, ஜன. 7**



நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அல்லது ஏனையோரில் எவராவது அநீதியான முறையில் கைது செய்யப்பட்டிருப்பாராயின் மனித உரிமை மீறல் அல்லது ஏனைய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்று முதலீட்டு இராஜாங்க அமைச்சரும் அரச பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

வத்தேகமவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க முடியாது என்று சர்வதேசம் தெரிவித்திருந்த நிலையில் 30 வருட பயங்கரவாதத்தில் இருந்து நாட்டை மீட்டெடுத்து பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கு பயங்கரவாத தடுப்புச் சட்டம் உதவியது. இதில் எந்தவித தவறையும் நாம் காணவில்லை. கடந்த நல்லாட்சி அரசால் உறுப்பினர்களை பழிவாங்குவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களை நீதிமன்றத்துக்கு அழைத்து சென்றமையைப் போன்று தற்போதைய அரசு எந்த வகையிலும் செயற்படாது - என்றார். (ம)




## ஐவர் கைது

**கொழும்பு, ஜன. 7**

ஹிக்கடுவ, தெஹிவளை மற்றும் கல்கிஸ்ஸ பிரதேசத்தில் விசா இன்றி தங்கியிருந்த 5 வெளிநாட்டவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சுவிற்சர்லாந்து, கட்டார், நைஜீரியா, தாய்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ம)



# வீதியை மறித்து ஆர்ப்பாட்டம்

*வவுனியா, ஜன.7*

செட்டிகுளம் துடரிக்குளம் வீதியால் கிரவல் கொண்டு செல்வதை நிறுத்துமாறு கோரி, வீதி மறியல் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

அநுராதபுரம் மாவட்டத்துக்குட்பட்ட பூனாவைப் பகுதியில் அமைந்துள்ள கிரவல்குவாரி மற்றும் வவுனியா செட்டிகுளத்தில் புதிதாக அனுமதி வழங்கப்பட்டுள்ள கிரவல் குவாரிகளில் அகழப்படும் கிரவல் மண் டிப்பர்களில் ஏற்றப்பட்டு துடரிக்குளம் வீதியால் கொண்டு செல்லப்படுகின்றது.

இதனால் வீதி சேதமடைகிறது. எனவே வீதியால் கிரவல் கொண்டு செல்வதை உடனடியாக நிறுத்துமாறு கோரி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் துடரிக்குளம் வீதியில் வீதித்தடைகளை ஏற்படுத்தி, கிரவல் ஏற்றிச் செல்லும் டிப்பர்களை வழி மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

"பூனாவைப் பகுதியில் அகழப்படும் கிரவல் மண் வேறு பாதைகள் இருந்தும் துடரிக்குளம் வீதியூடாகவே வெளி மாவட்டங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றது. இதனால் ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான டிப்பர்கள் இந்த வீதியூடாக பயணம் செய்கின்றன. இதனால் வீதி குண்டும் குழியுமாக மாறும் நிலை ஏற்பட்டுள்ளது.

செட்டிகுளத்திலிருந்து வவுனியாவுக்குச் செல்வதற்கு தற்போது இந்தவீதி மாத்திரமே சீரான முறையில் இருக்கிறது. ஏனைய வீதிகளான பூவரசங்குளம் மற்றும் வீரபுரம் ஊடாகச் செல்லும் வீதிகள் மிக மோசமாகச் சேதமடைந்துள்ளன" என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

அந்தப் பகுதிக்கு வருகை தந்த செட்டிகுளம் பிரதேச செயலர் க. சிவகரன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினார். இந்த வீதியினூடாக கிரவல் கொண்டு செல்லப்படுவதற்கான வீதி அனுமதியைத் தடை செய்யுமாறு வவுனியா மாவட்டச் செயலர் ஊடாக அநுராதபுரம் மாவட்டச் செயலருக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்துவதாக மக்களிடம் தெரிவித்தார்.

செட்டிகுளம் உதவி பொலிஸ் அத்தியட்சகர், வீதியில் அதி வேகமாகச் செல்லும் வாகனங்கள் மற்றும் வீதி ஒழுங்கை பின்பற்றாத வாகனங்கள் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். கிரவல் இன்றி வெற்று டிப்பர்கள் மாத்திரம் வீதியைப் பயன்படுத்த அனுமதிக்கப்படும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் தெரிவித்தார்.

அதனையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர். எனினும் ஆர்ப்பாட்டத்தின் முடிவில் அங்கு பிரசன்னமாகிய இளைஞர்களுக்கும், ஆர்ப்பாட்டத்தை ஒழுங்குபடுத்திய செட்டிகுளம் பிரதேச சபையின் ஆளும் கட்சி உறுப்பினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. (சு-110)



# சேமமடுவில் 6 பேர் பல்கலைக்கு தகுதி

*வவுனியா, ஜன.7*

கடந்த வருடம் இடம்பெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் படி வவுனியா சேமமடு மகாவித்தியாலயத்தில் 6 மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

வவுனியா நெடுங்கேணி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சேமமடு மகாவித்தியாலயத்தில் கலைப்பிரிவில் சி.அஸ்வினி என்ற மாணவி 2ஏ,பி பெறுபேற்றை பெற்று மாவட்ட மட்டத்தில் ஏழாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இதேவேளை இந்த மாணவியுடன் வி.வினோதினி-2ஏ, பி செ.கம்சினா -2ஏ.பி, ச.தனுசன் -2ஏ, சி, இ.இளங்கீரன் -ஏ, 2பி, ச.விந்துசன்-ஏ,பி,சி ஆகியோர் பாடசாலை மட்டத்தில் மிகச்சிறந்த பெறுபேற்றைப் பெற்று பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியுள்ளனர்.

முப்பது வருடகால பாடசாலை வரலாற்றில் இந்த மாணவர்களின் சாதனை எல்லோராலும் பாராட்டத்தக்கது என்று பாடசாலை அதிபர் பொ.கணேசலிங்கம் தெரிவித்தார்.

பின்தங்கிய கிராமத்தில் உள்ள எமது பாடசாலை மாணவர்களின் சாதனைக்கு சி.சிறிசங்கர சர்மா, திருமதி.வி.சந்திரிக்கா, இ.எஸ்.வரதன், மற்றும் பிரத்தியேக வகுப்புக்களை மேற்கொண்ட ஆர்.ரதிக்குமார் ஆகிய ஆசிரியர்களின் கடுமையான உழைப்பு காரணமாக இருந்துள்ளதாக அதிபர் மேலும் குறிப்பிட்டார். (ஜ-110)

# அரசியல் இலாபங்களுக்காக ஊழலெனக் குற்றச்சாட்டுக்கள்

## தவிசாளர் நிரோஷ் அறிக்கை

கோப்பாய்,ஜன.7

அபிவிருத்தித் திட்டங்களில் ஊழல்கள் இடம்பெற்றதாக, அரசியல் இலாபங்களுக்காகக் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் அரசியல்வாதிகள், சமூக இணையத்தளங்களில் விசமப் பிரசாரங்களில் ஈடுபடுகின்றனர் என்று வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பிரதேச சபை நடைமுறைப்படுத்திய வீதி அமைப்பு, மின்குமிழ்களைப் பொருத்தும் திட்டங்களில் ஊழல்கள் நடந்துள்ளன என தெரிவித்து முகப்புத்தகத்திலும், வேறு சமூக வலைத்தளங்களிலும் கட்சி நிலைப்பாடுகளுடன் சில கட்சிகளைச் சார்ந்தோர் விசமப் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

உள்ளூராட்சி மன்றங்கள் அரச தாபனங்கள் ஆகும். எந்த அரசின் நிதி தொடர்பிலும் கணக்காய்வுகள் உண்டு. மாகாண மற்றும் மத்திய அரசின் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கு மேலாக இலங்கையில் இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றி புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு முறைப்பாடுகளை இலகுவாகப் பதிவளிக்கத்தக்க வகையில் இயங்குகின்றது. 1954 என்னும் தொலைபேசிக்கு அழைப்பு எடுத்துக்கூட முறையிட முடியும். இவைகள் ஒன்றும் இரகசியமானவை அல்ல. தகவல் அறியும் சட்டத்தின் வாயிலாகக் கூட தகவல்களை கோரிப்பெற்று உண்மைகளை எவரும் அறிந்து கொள்ள முடியும்.

உண்மை நிலைமைகள் இவ்வாறு இருக்கையில், அரசியல் இலாபங்களுக்காக அமைச்சர்கள் முதல் பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச அமைப்பாளர்கள் வரையில் சிலர் பிரதேச சபைகளின் திட்டங்களின் வாயிலாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்காட்டி ஊழல்கள் இடம்பெற்றுள்ளன எனக் கூறுவது மக்களை பொய்யாக வழி நடத்தும் முயற்சியேயாகும்.

எனவே மக்களை முட்டாள்கள் ஆக்கும் அரசியல் கலாசாரத்தைத் தொடர்ந்தும் மேற்கொள்ளாதீர்கள்.

மக்களை நாட்டின் அரச நிறுவனங்கள் மீது நம்பிக்கையற்றவர்களாக அரசியல் இலாபங்களுக்காக வழிநடத்தாதீர்கள். எவராவது எமது மன்றங்களின் செயற்பாடுகளில் ஊழல் என சந்தேகம் நிலவுமாயின் அதுபற்றி நடவடிக்கை எடுங்கள். வேண்டுமாயின் நானே உங்களுக்கு உதவத்தயார். ஊழல்கள் இருந்தால் நிரூபியுங்கள் என்பதை பகிரங்க சவலாக விடுகின்றேன் - என்றுள்ளது. (க)

## புத்தாண்டை முன்னிட்டு வெகுமதிகள்

மன்னார், ஜன.7

மன்னார் மாவட்ட மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு புத்தாண்டை முன்னிட்டு மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தின் ஏற்பாட்டில் சிறு வெகுமதிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு கடந்த 31 ஆம்திகதி நடைபெற்றது.

மருத்துவ அதிகாரியின் ஒத்துழைப்புடன் நடந்த இந்த நிகழ்வில், சத்திர சிகிச்சைப் பிரிவு, மகப்பேற்று நிலையம் ஆகிய விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெற்று வந்தவர்களுக்கு சிறு வெகுமதிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தின் தலைவர் வண. பிதா சேவியர் குருஸ், சங்கத்தின் உறுப்பினர்கள், மருத்துவமனை தாதியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.7

யாழ்.வேம்படி பெண்கள் உயர் தரப் பாடசாலையில் தரம் 6 இல் புதிதாக அனுமதி பெறவுள்ள மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அதிபர் திருமதி சுனித்ரா சூரிய ராஜா தலைமையில் தம்பையா மண்டபத்தில் நடைபெறும்.

அதேவேளை 2019 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் 162 க்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் பெயர் பட்டியல் கிடைக்கப் பெற்றுள்ளது. பெயர்ப்பட்டியலை பாடசாலை விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் என்று அதிபர் அறிவித்துள்ளார். (க)

## கூட்டமும் கௌரவிப்பும்

சாவகச்சேரி,ஜன.7

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், பிரிவு சாதனையாளர்கள் கௌரவிப்பும் எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

நிலையத் தலைவர் க.தர்சன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகரசபையின் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சனசமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி சு.பிரதீபன், பிரிவு கிராம அலுவலர் க.கார்த்திகேயன், கோயிற்குடியிருப்பு சுந்தனுமுதலிச்சிபுலம் முருகமூர்த்தி கோவில் பரிபாலனசபைத் தலைவர் ப.குகன் ஆகியோர் கலந்து கொள்வர். (க-9)

## சுதந்திர தின ஊர்வலத்தில் ஆள்குறைப்பு

கொழும்பு, ஜன. 7

நாட்டின் 72ஆவது தேசிய சுதந்திரத் தின நிகழ்வில் இடம்பெறும் ஊர்வலத்தில் கலந்துகொள்பவர்களை 30 வீதத்தினால் குறைக்க அரசு தீர்மானித்துள்ளது.

அத்துடன், இம்முறை தேசிய சுதந்திர தின கருப்பொருளுக்கு ஏற்ற கலாசார நிகழ்ச்சிகளை மாத்திரம் நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்வதற்கும் அரசு கவனம் செலுத்தியுள்ளது. பாதுகாப்பான நாடு - வளமான தேசம் எனும் மகுட வாசகத்தின் கீழ் இம்முறை தேசிய சுதந்திர தினத்தை நடத்துவதற்கு அமைச்சரவை உப குழு தீர்மானித்துள்ளது. (ம)




யாழ்ப்பாணம் நீர்வேலி பாலர் பகல் முன்பள்ளியில் கல்வி பயிலும் சிறார்கள்,ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் உட்பட 113 பேர் பலாலி விமான நிலையத்தை கடந்த வெள்ளிக்கிழமை பார்வையிட்டனர். (ஐ)



பசுமையான சூழலை உருவாக்கும் நோக்கில் பயன் தரு மரக்கன்றுகள் 'விலேச் ரூ சிற்றி' கிராமத்தில் இருந்து நகரத்துக்கு கழகத்தின் இசைக்கல்லூரி மாணவச் சிறார்களால் அண்மையில் நடுகை செய்யப்பட்டன.

# பொதுநோக்கு மண்டபம் அமைக்கக் கோரிக்கை

வவுனியா, ஜன. 7

வவுனியா, கள்ளிக்குளம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள சிதம்பரம் கிராமத்தில் பொதுநோக்கு மண்டபம் இன்மையால் அந்தக் கிராம மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இக் கிராமத்தின் சனசமூக நிலையம் 1983 ஆம் ஆண்டு இடப்பெயர்வில் கைவிடப்பட்டது. 2010 ஆம் ஆண்டு மக்கள் மீளக் குடியமர்த்தப் பட்டனர். ஆனால் 10 ஆண்டுகள் ஆகியும் குறித்த சனசமூக நிலை யைச் சீரமைத்துத் தரப்படவில்லை. இதைச் சீரமைத்துத் தருமாறு பல்வேறு தரப்பினரிடம் கோரியும் இன்றுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அடிப்படை வசதிகள், வீதி, போக்குவரத்து வசதிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

கிராம நிகழ்வுகள் நடத்தவேண்டுமாயின் சேதமடைந்த சனசமூக நிலையத்தையே தற்போதும் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்தக் கிராமத்தில் 160க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. சேதமடைந்து காணப்படும் சனசமூக நிலையத்தைச் சீரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (த-222)



சீரமைக்கப்படாத சனசமூக நிலையம்

# தரம் ஒன்று அனுமதியில் யாழில் முறைகேடா?

## நடவடிக்கை எடுக்குமாறு கடிதம்

*யாழ்ப்பாணம், ஜன. 7*

யாழ்ப்பாணத்தில் சில பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்க்க அனுமதி கிடைத்து பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டநிலையில், இரண்டாவது பட்டியலில் பலருடைய பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. ஏதோ ஒரு காரணத்துக்காக மேலும் சில மாணவர்களை சேர்ப்பதாக இருந்தால் முன்னர் சேர்க்கப்பட்ட மாணவர்களின் பெயர்களை நீக்குவது பொருத்தமல்ல. எனவே இந்த விடயத்தில் உரிய நடவடிக்கை எடுங்கள்

இவ்வாறு வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலருக்குக் கடிதம் மூலமாக அறிவித்துள்ளார்.

அதன் பிரதிகள் வடக்கு மாகாண ஆளுநர், மாகாணக் கல்வித் திணைக்களப் பணிப்பாளர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

2020ஆம் ஆண்டுக்கான தரம் ஒன்றுக்கானஅனுமதி தொடர்பாக கடந்த மூன்று தினங்களாக பலர் எமக்கு முறைப்பாடுகளைத் தெரிவித்துள்ளனர். கல்வித் திணைக்களம், 2019 டிசெம்பர் மாத ஆரம்பத்தில் வெளியிட்ட அனுமதிப் பட்டியலில் தமது பிள்ளைகளின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன என்று இதுவரை 10 அல்லது 11 பேர் வரை முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

டிசெம்பர் மாத இறுதிநாளான 31ஆம் திகதி இரண்டாவது பட்டியல் வெளியிடப்பட்டபோது தங்கள் பிள்ளைகளின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தனர். மேலும் மாத ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட பட்டியலின்படி தாங்கள் தங்களுக்கு ஒதுக்கிய பாடசாலைக்குச் சென்று அனுமதியை உறுதிசெய்திருந்தோம் என்று தெரிவிக்கின்றனர்.

சிலர் தமது விண்ணப்பத்தில் தெரிவு செய்த இரண்டு பாடசாலைகளின் பட்டியல்களிலும் தமது பிள்ளையின் பெயர் காணப்பட்டது என்றும் அவற்றில் ஒன்றைக் கைவிடுகின்றோம் என்றும் அறிவித்துள்ளனர். அப்படியானவர்கள் இரண்டுபாடசாலைகளையும் இழந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

முதலாவது பட்டியலில் அனுமதி வழங்கப்பட்டபோதுஅந்தந்தவிண்ணப்பங்கள் முறையானவை என்று ஏற்றுக்கொண்டு அனுமதியளித்த கல்வித் திணைக்களம், வருடக் கடைசியில் ஏதோ காரணத்துக்காக அந்தப் பெயர்களை நீக்குவதானது எங்கேயோ தவறு நடந்துள்ளமையைக் காட்டுகின்றது. ஏற்கனவே பட்டியலில் உள்ளவர்களின் பெயர்களை நீக்காமல் நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். அவர்கள் கோராத பாடசாலைக்குச் சேர்க்கிறோம் என்றால் விண்ணப்ப முறைமையே கேள்விக்குறியாகிவிடுகின்றது.

குறித்த பாடசாலைக்கு அனுமதி கிடைத்துள்ளதாக தமது பிள்ளைகளுக்குத் தெரிவித்து அதற்கான ஏற்பாடுகள் செய்து முடித்த பின்பு அதனை நிராகரிப்பது பிஞ்சு உள்ளங்களில் ஆழமான ஏமாற்றத்தைப் பதிவுசெய்வதாகவும், அவர்களது மனோநிலையைப் பாதிப்பதாகவும் அமையும். இவை எமது சமூக வளர்ச்சிக்குக் குந்தகமாகவே காணப்படும்.

தற்போதைய சூழ்நிலையில் எவரையும் பாதிக்காத வகையில் தீர்மானம் அவசியமாகின்றது. அந்தவகையில் முதலாவது பட்டியலில் அனுமதி வழங்கப்பட்டவர்களை அப்படியே தொடரவிட்டு, புதிதாக உள்ளடக்கப்பட்டவர்களை ஒரு விசேட காரணியாக மேலதிக அனுமதியாக வழங்கி பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்.

எவ்வாறாயினும் பாதிக்கப்பட்டவர்களின் மிகவும் வலுவான குறைபாடு உடனடியாக நிவர்த்திசெய்யப்படுதல் வலியுறுத்தப்படுகின்றது. என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(து)


## தவறிவிட்டது

இல.15, கள்ளிவீதி, வட்டு. கிழக்கு, வட்டுக்கோட்டையில் வசிக்கும் **சரவணமுத்து பஞ்சாட்சரம்** ஆகிய எனது அடையாள அட்டை உள்ளடங்கிய Purse கடந்த வியாழக்கிழமை 02.01.2020 மாலை 6.30 மணியளவில் ஆனைக்கோட்டைச் சந்திக்கும் K.K.S. வீதிக்கும் இடையேயுள்ள குளப்பிட்டி வீதியில் தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர் இதனை என்னிடம் சேர்ப்பிக்கவும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல**

**077 937 2357**

**என்னிடம் சமர்ப்பிப்பவருக்கு நன்றியுணர்வுடன் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.**

(CS/30450)(11,17)

## அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம் (வ-து)

**புடைவைப் பொருள்கள் கூறுவிலை மூலம் விற்பனை செய்தல்**

எமது சங்கத்தின் புடைவை நிலையம் அளவெட்டியிலுள்ள புடைவைப் பொருள்கள் கூறுவிலை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. எனவே கூறுவிலை சமர்ப்பிக்க விரும்புபவர்கள் இதனை எமது சங்க காரியாலய நாள்களில் காரியாலய நேரத்தில் பார்வையிட்டு கூறுவிலை சமர்ப்பிக்க முடியும். கூறுவிலைக்குரிய முடிவு திகதி 31.01.2020 ஆம் திகதியாகும்.

(IN 12222)(11,17)

**பொதுமுகாமையாளர்,**
05.01.2020 **அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்.**


## கைது!

காஸ்ரீ நீர்த்தேக்கத்திற்கு நீர் ஏந்திச்செல்லும் பொகவந்தலாவ தெரேசியா தோட்ட கெஸ்க முவ ஓயாவில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டு வந்த 5 பேரை பொகவந்தலாவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தக் கைது நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பொகவந்தலாவ பொலிஸாரினால் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது இந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் எனவும் சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்விற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் கைபற்றியுள்ளதோடு, கைது செய்யபட்டவர்கள் பொகவந்தலாவ மற்றும் பலாங்கொடபகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)


## மரண அறிவித்தல்

பிறப்பு 16 - 03 - 1954



இறப்பு 03 - 01 - 2020

### திருமதி பரமேஸ்வரன் இரஞ்சிதமலர்

மூத்தவிநாயகர் வீதி, முதலாம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரன் இரஞ்சிதமலர் 03.01.2020 வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை - மங்கையர்க்கரசி தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான குருநாதப்பிள்ளை சரஸ்வதி தம்பதிகளின் மருமகளும் பரமேஸ்வரனின் அன்பு மனைவியும் சலூஜா, துவாகர், மோஜிதா ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரவீந்திரன், சோபனா, கிருஸ்ணரூபன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கோபாலப்பிள்ளை, பத்மாவதி, புவனேஸ்வரி, ஜெகதீஸ்வரன் ஆகியோரின் சகோதரியும் நாகேந்திரம் காலஞ்சென்ற தனேந்திரம் மற்றும் கமலாதேவி (கமலா) காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி (ராணி), யோகராணி (கௌரி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் கீர்த்திகா, சஷ்விகன், சகான், தனியா, கிருஷா, மீட்ஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2020) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மூத்தவிநாயகர் வீதி,**
**முதலாம் ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.** (CS 30448)(14,17)

**தகவல்: குடும்பத்தினர்.**

**021 221 9335 / 075 278 2910**

## பணி வாய்ப்பு

1. **தொடர்பாடல் அலுவலர் (*Communication Officer*)**
   விவரங்களுக்கு : http://bit.ly/37tx5eX
2. **ஒலிநூற் செயற்திட்ட ஒருங்கிணைப்பாளர் (*Audio Book Project Coordinator*)**
   விவரங்களுக்கு : http://bit.ly/37vuOzS

NOOLAHAM FOUNDATION நூலக நிறுவனம்

**விண்ணப்ப முடிவுத் திகதி: 19.01.2020**

## U.S.Hotel நிறுவனத்துக்கு பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு ஆள்கள் தேவை

**01) அலுவலக உதவியாளர் - பெண்**
**( Office Assistant Female)**
- கணினி, ஆங்கில அறிவு அவசியம்
- மோட்டார் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவராக இருத்தல் வேண்டும்.
- யாழ்.மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது

**02) விடுதி பராமரிப்பாளர் - ஆண்**
**( Room Boy - male )**
- சிங்களம் அல்லது ஆங்கில அறிவு அவசியம்
- அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**03) உணவு பரிமாறுபவர் ( Waiters )**

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் இன்று (07.01.2020) செவ்வாய்க்கிழமை நேரில் சமுகம் தரவும்.


**077 008 3000**


# மணல் மாபியாக்கள் மீது நடவடிக்கை எடுப்பது யார்?

## கேள்வியெழுப்புகின்றனர் மன்னார் மக்கள்

*மன்னார், ஜன. 7*

**ஆட்சிமாற்றத்தின் பின் எங்கு பார்த்தாலும் மணல் ஏற்றிய டிப்பர்கள்தான் சுதந்திரமாகப் பயணிக்கின்றன. மணல் கொள்ளை தாராளமாக இடம் பெறுகின்றது. மன்னாரிலுள்ள அருவியாறு, கூராய், பாலியாறு ஆகிய பகுதிகளில் எண்ணுக்கணக்கற்ற டிப்பர் மற்றும் உழவு இயந்திரங்களில் மணல் அகழ்வு இடம்பெறுகின்றது. இந்த மணல் மாபியாக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது யார்? மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்துவது எப்போது? என்று இந்தப் பகுதி மக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.**





நானாட்டான் அருவியாற்றங்கரையில் மீன் வளர்ப்புக்கு என்று அனுமதி எடுத்து நிலத்தை அகழ்ந்து மணல் வியாபாரமே நடைபெறுகின்றது என்று மக்கள் தெரிவிக்கின்றார்கள். தண்ணீர் ஊற்றெடுக்கும்வரை 'பெக்கோ' இயந்திரங்கள் மூலமாக நிலத்தைத் தோண்டி மணல் ஏற்றிச் செல்கின்றார்கள். இதனைக்கண்டு கொள்ளாத நிலையில் பொலிஸார் உள்ளனர் என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கனரக வாகனங்களின் போக்குவரத்துக்களால் வீதிகள் சேதமடைந்துள்ளன. அதனால் போக்குவரத்துப் பாதிக்கப்படுகின்றது.

ஓடைகளைக்கூட விட்டுவைக்காது மணல் அகழ்ந்து செல்கின்றனர். இதனால் சாதாரண வெள்ளம் வந்தாலும் குடிமனைகள் பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பகுதியை கடந்த வருடம் மாவட்டச் செயலக அதிகாரிகள் வந்து பார்வையிட்டு, இந்தப் பகுதியில் மணல் ஏற்றத் தடை செய்யப்படுகின்றது என்று தெரிவித்திருந்தும்கூட மணல் அகழ்வு தாராளமாக இடம்பெறுகின்றது.

இதனை அதிகாரிகளும் பொலிஸாரும் கண்டுகொள்வதில்லை, கேட்பதுமில்லை. பொதுமக்கள் யாரேனும் இது பற்றிக் கதைக்க முற்பட்டால் அவர்களுக்குச் சமுர்த்தி கொடுப்பனவு நிறுத்தப்படும் என்று அச்சுறுத்தல் விடுக்கின்றார்கள். முக்கிய அரசியல்வாதி ஒருவரின் இந்தப் பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபடுகிறார்கள் என்று இந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தனி மனிதர்களின் லாபம் கருதி எமது இயற்கை வளங்கள் பாழாக்கப்படுகின்றன. இதை இலங்கை கனிய வளத்தினர், சுற்றாடல் அதிகார சபையினர், பொலிஸார் மற்றும் அதிகாரிகள் கண்டுகொள்வதில்லை. இந்த மணல் மாபியாக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது யார்? தடுத்து நிறுத்துவது எப்போது என்று மக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

(த-213)

# விமான விபத்து

# அறிக்கை அவசியம்

*கொழும்பு, ஜன. 7*

ஹப்புத்தளையில் இடம்பெற்ற விமான விபத்து சம்பவத்துக்கான காரணங்கள் குறித்த அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு அரச பகுப்பாய்வாளர்கள், சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை மற்றும் வளிமண்டலவியல் திணைக்களத்துக்கு பண்டாரவளை நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான சீன தயாரிப்பு இலகு போக்குவரத்து விமானம் வீரவில விமானப் படைத் தளத்திலிருந்து கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையில் தம்பிப்பிள்ளை மாவத்தையிலுள்ள மலைப் பிரதேசத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த சம்பவத்தில் மேற்படி விமானத்தில் பயணித்த நால்வரும் உயிரிழந்தனர்.

விபத்து இடம்பெற்ற பகுதிக்கு அரச இரசாயன பகுப்பாய்வாளர்கள், புவிச்சரிதவியல் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பண்டாரவளை பொலிஸ்பிரிவின் பொலிஸ் குற்ற தடயவியல் அதிகாரிகள் ஆகியோர் விரைந்து அது தொடர்பான விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர்.

குறித்த விமானம் விபத்துக்குள்ளான நேரத்தில் இடம்பெற்ற தகவல் பரிமாற்றம் தொடர்பான பதிவுகளும் மேலதிக விசாரணைகளுக்காக எடுத்துக்கொள்ளப்படும் என ஹப்புத்தளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.தயாரத்ன தெரிவித்துள்ளார்.

விமானம் விபத்திற்குள்ளான இடத்திற்கு அருகிலிருந்த பெண் ஒருவர் காயமடைந்த நிலையில் ஹப்புத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்து நடைபெற்ற பிரதேசத்திற்கு விஜயம் செய்து தடயங்களை நேரில் பார்வையிட்ட பதுளை மற்றும் மொனராகலை பிரிவுகளுக்கான பிரதிப் பொலிஸ் மா அதிபர், அசங்க கரவிட்ட இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த நிலையில் ஹப்புத்தளையில் இடம்பெற்ற விமான விபத்து சம்பவத்துக்கான காரணங்கள் குறித்த அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு அரச பகுப்பாய்வாளர்கள், சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை மற்றும் வளிமண்டலவியல் திணைக்களத்துக்கு பண்டாரவளை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (ம)



# முழுநிலா கலைவிழா

*சாவகச்சேரி, ஜன. 7*

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மாகாண நிலை முழுநிலா கலைவிழா எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தென்மராட்சிக் கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

மாகாண கல்வித் திணைக்களத்தில் 12 கல்வி வலயங்கள் உள்ளன. ஒவ்வொரு வலயமும் ஒரு மாத முழு நிலாநாளில் பிரதேச பாரம்பரிய கலைகளை மாணவர்களின் ஊடாக நடத்த வேண்டும்.

இவற்றில் தெரிவு செய்யப்படும் கலை நிகழ்வுகள் மாகாண முழுநிலா கலைவிழாவில் ஆற்றுகைப்படுத்தும் நிகழ்வுகளாக அமைந்திருக்கும்.

அதன்பிரகாரம் மாகாண முழுநிலா நாள் எதிர்வரும் 10 திகதி நடத்தப்படவுள்ளது. (க-9)

# கோத்தாவின் பழிவாங்கலுக்கு நீதித்துறைதான் முடிவு கட்டும்

## கைதாகி விடுவிக்கப்பட்ட ரஞ்சன் எம்.பி. தெரிவிப்பு

'ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசின் பழிவாங்கல் நடவடிக்கைகளுக்கு நீதித்துறைதான் முற்றுப்புள்ளி வைக்கும்' இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கைதுசெய்து சிறையில் அடைத்து தமது சர்வாதிகார ஆட்சியை முன்னெடுக்கலாம் என்ற நப்பாசையுடன்தான் கோத்தாபய அரசு ஆட்சிப்பீடம் ஏறியது. ஆனால், இதற்கெல்லாம் நீதித்துறை இடமளிக்கவே மாட்டாது.

கோத்தாபய அரசின் பழிவாங்கல் பட்டியலில் சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரத்னவுக்கு அடுத்தபடியாக மூன்றாவது நபராக நான் கைதுசெய்யப்பட்டேன். ஆனால், நாங்கள் மூவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளோம். இந்தப் பழிவாங்கல் நடவடிக்கைகளை கோத்தாபய அரசு உடனடியாக நிறுத்த வேண்டும். இல்லையேல் இதற்கு நீதித்துறைதான் முற்றுப்புள்ளி வைக்கும்' என்றார்.

அனுமதிப் பத்திரம் புதுப்பிக்காத கைத்துப்பாக்கியையும், 127 ரவைகளையும் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கடந்த சனிக்கிழமை இரவு கைதுசெய்யப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை பிணையில் விடுவிக்கப்பட்டார். இரண்டு சரீரப் பிணைகளிலும் 5 இலட்சம் ரூபா காசுப் பிணையிலும் அவர் விடுவிக்கப்பட்டார். அத்துடன், அவருக்கு வெளிநாட்டுப் பிரயாணத் தடையும் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-22)

## பொதுக்கூட்டம்

சங்கானை,ஜன.7

வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலக பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளைமறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு தலைவர் ந.சிவரஞ்சன் தலைமையில் கூட்டம் நடைபெறவுள்ளது. கூட்டத்தில் பிரதம விருந்தினராக சங்கானை பிரதேச செயலர் திருமதி கி.பிரேமினி பொன்னம்பலம், சிறப்பு விருந்தினர்களாக சங்கானை உதவிப் பிரதேச செயலர் திருமதி கி. செந்தூரன்,பிரதேச செயலக கணக்காளர் எம்.சிவகுமாரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)



## ஒரு காயுடன் வாழை மரம்

ஓட்டமாவடி,ஜன.7

ஓட்டமாவடி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தியாவட்டவான் கிராமத்தில், முகைதீன் அப்துல் காதர் வீட்டுத் திட்டத்தில் உள்ள வாழை மரமொன்றில் அதிசயமாக ஒரு வாழைக்காய் மட்டும் காய்த்துள்ளது.

இரண்டு வாரத்துக்கு முன்னர் சிறிய வாழைப்பூ வெளிப்பட்டிருந்தது. அது தற்போது பெரிய வடிவில் ஒரு வாழைக்காயுடன் காய்த்துள்ளது என்று வீட்டின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இந்த அதிசய வாழைக் காயைப் பார்வையிட முகைதீன் அப்துல் காதர் வீட்டுத் திட்டத்துக்கு மக்கள் பலர் வந்து செல்கின்றனர். (க)

## யாழ். இந்து முன்மாதிரி

யாழ்ப்பாணம், ஜன. 7

கடந்த ஆண்டு ஓ.எல். பரீட்சை எழுதிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு திசைமுகப்படுத்தல் செயலமர்வு ஆரம்பிக்கப் படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு இந்தச் செயலமர்வு ஆரம்பமாகவுள்ளது. முதல் நாள் அமர்வில், மாணவர்களின் பெற்றோர்கள் கட்டாயம் கலந்து கொள்ளவேண்டும்.

இந்தச் செயலமர்வு கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்படும் வரையில் தொடர்ந்து நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ.5)

## ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம்.ஜன.7

யாழ்ப்பாணம் மயிலிட்டித்துறை வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்றது.

மயிலிட்டித்துறை வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் அண்ணாத்துரை கமலினி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி வடக்கு பிரதேச செயலர் சண்முகராஜா சிவஸ்ரீ கலந்து கொண்டார். (ஐ)





# அன்று புளித்தது இன்று இனிக்குதா?



### சஜித் பதிலடி!

**கொழும்பு, ஜன. 7**

**தேசத்துரோக உடன்படிக்கை என அப்போது கூறப்பட்ட அமெரிக்காவுடனான எம்.சீ.சீ. உடன்படிக்கை உட்பட சகல உடன்படிக்கைகளையும் கைவிடும் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு அரசிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.**

பத்தேகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த உடன்படிக்கையை செய்யக்கூடாது என கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்த மக்களுக்கு அவர்களது எதிர்பார்ப்பை நிறைவேற்றிக் கொடுப்பது எதிர்க்கட்சியின் பொறுப்பாகும். இந்த உடன்படிக்கையை ரத்துச் செய்ய வேண்டும் என்பது கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 69 லட்சம் மக்களின் எதிர்பார்ப்பாக அமைந்திருந்தது. இந்த நாட்டில் 69 லட்சம் பேர் நாம் நாட்டைப் பிரிப்பதாகவும், நாட்டை அழிப்பதாகவும் தேசத்துரோகிகள் எனவும் கூறினர். ஆனால், தேர்தலின் பின்னர் இவர்கள் மௌனமாக இருக்கின்றனர். தேர்தல் முடிவு வந்ததன் பின்னர் எம்.சீ.சீ. உடன்படிக்கை 70 வீதம் சிறந்ததாக அரசுக்கு மாறியுள்ளது. எந்த முகத்தை வைத்துக் கொண்டு இவர்கள் இப்படிக் கூறுகின்றார்களோ தெரியாது.

சுதந்திர தினத்துக்கு முன்னர் அரசு இந்த உடன்படிக்கையை நீக்கிக் கொள்ளும் என எதிர்பார்க்கின்றோம். அடுத்த வாரம் இந்த பிரேரணையை நாடாளுமன்றத்துக்கு கொண்டு வாருங்கள். நாம் நீக்குவதற்கு ஆதரவு வழங்குவோம்- என்றார். (ம)

## புத்தாண்டு ஒன்றுகூடல்

கொழும்புத்துறை,ஜன.7

யாழ்ப்பாணம் சின்னக்கடை ஜே.72 பிரிவு மூத்தோர் சங்க ஒளியேற்றல் நிகழ்வும், புத்தாண்டு ஒன்றுகூடலும் கடந்த சனிக்கிழமை கிராம அலுவலக மண்டபத்தில் இடம்பெற்றன.

மூத்தோர் சங்கத் தலைவி திருமதி மே.பே.பிலிப் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக அருட்பணி ஜெயசீலன் அடிகளாரும், கௌரவ விருந்தினராக நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர் சி.லக்ஷ்மி காந்தனும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவில் வலிந்துதவு செயற்பாட்டாளராகத் தெரிவு செய்யப்பட்டவர்களில் ஒருவரான மூத்தோர் சங்க உறுப்பினர் திருமதி போமினஸ் அஞ்சலா பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

அனைத்து மூத்தோர்களுக்கும் அன்பளிப்புக்கள் வழங்கப்பட்டன. (க-135)

## ஈழத்து தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை

### ஆளுநர் புரோகித் பரிந்துரை

சென்னை, ஜன. 7

இலங்கைத் தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்தும் என தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் 15ஆவது சட்டப்பேரவையின் எட்டாவது கூட்டத்தொடர் நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ளது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்தும். தமிழக மக்கள் எந்த ஒரு மதம், சமயத்தைப் பின்பற்றினாலும், அவர்களை தமிழக அரசு பாதுகாக்கும். தமிழக மீனவர்கள் பிரச்சினையில் மத்திய அரசு தலையிட்டு சுமுக தீர்வுகாண வேண்டும்.

முல்லைப் பெரியாறு அணையை வலுப்படுத்தத் தேவையான அனுமதியை கேரள, மத்திய அரசுகள் தர வேண்டும்.

மேகதாது திட்ட அறிக்கையை மத்திய அரசு நிராகரிக்க வேண்டும். காவிரிகுண்டாறு நதிகள் இணைக்கும் பணியை தமிழக அரசு செயல்படுத்தும். கோதாவரி ஆற்றிலிருந்து குறைந்தபட்சம் 200 டிஎம்சி தண்ணீரை வழங்க மத்திய அரசை வலியுறுத்துவோம்.



ஜெயலலிதாவுக்கு 50.80 ரூபா கோடி (இந்திய ரூபா) மதிப்பில் விரைவில் மணிமண்டபம் கட்டிமுடிக்கப்படும்.

ஒவ்வொரு மாதமும் நவம்பர் முதலாம் திகதியை தமிழ்நாடு நாள் என அறிவித்ததற்காக முதல்வருக்கு பாராட்டுக்கள்- என்றார். (ம)

# 2020ல் ஆட்டிப் படைக்கப்போகும் சனி, ராகு, கேது பெயர்ச்சி!

## எந்தெந்த ராசிக்கு ராஜயோகம்?



2020ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் சனிப்பெயர்ச்சி நிகழப்போகிறது. தனுசு ராசியில் இருந்து மகரம் ராசிக்கு சனி நகர்கிறார். அதே போல ராகு கேது பெயர்ச்சியும் நடைபெறுகிறது. தனுசு ராசியில் இருந்து குரு பகவான் மகரம் ராசியைச் சென்றடைகிறார்.

இந்த கிரகங்களின் இடப்பெயர்ச்சியால் தனுசு முதல் மீனம் வரை உள்ள ராசிக்காரர்களுக்கும் 2020ஆம் ஆண்டு எப்படி இருக்கும் என்று பார்க்கலாம்.

இது பொதுவான பலன்கள்தான் ஒருவரின் ஜாதகத்தில் உள்ள கிரகங்கள், நட்சத்திரங்கள் தசாபுத்தியின்படியே நன்மை தீமைகள் நடைபெறும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

2020 ஆம் ஆண்டில் ஒன்பது கிரகங்களின் பெயர்ச்சிகளும் நடைபெற உள்ளன. முக்கியமாக சனி, ராகு கேது, குரு ஆகிய கிரகங்களின் நகர்வை வைத்து பலன்கள் கணிக்கப்படுகின்றன.

2020ஆம் ஆண்டில் முக்கிய கிரகங்களின் சஞ்சாரத்தைப் பார்த்தால் சனிபகவான் தனுசு ராசியில் இருந்து ஆண்டின் முதலில் ஜனவரி 24ஆம் திகதி மகரம் ராசிக்கு நகர்கிறார்.

மிதுனத்தில் உள்ள ராகு 18.09.2020 அன்று இரவு 8.45 மணிக்கு ரிஷப ராசிக்கு நகர்கிறார். தனுசு ராசியில் உள்ள கேது விருச்சிக ராசிக்கு இடப்பெயர்ச்சி அடைகிறார்.

குருபகவான் தனுசு ராசியில் இருக்கிறார். 2020 மார்ச் 30ஆம் தேதியன்று அதிசாரமாக மகரம் ராசிக்கு செல்கிறார்.

ஜூன் 30ஆம் திகதிவரை மகர ராசியில் சஞ்சரிப்பார். பின்னர் வக்ரமடைந்து தனுசு ராசிக்கு வரும் குருபகவான் நவம்பர் வரை தனுசு ராசியில் சஞ்சரிப்பார். நவம்பர் 20ஆம் திகதியன்று நேர்கதியில் மகரம் ராசிக்குச் செல்கிறார்.

இதுநாள்வரை சனியால் சங்கடப்பட்டவர்கள், குருவால் குதூகலம் அடைந்தவர்கள், ராகு கேதுவினால் ரணப்பட்டவர்கள் 2020 ஆம் ஆண்டில் என்னென்ன பலன்களை அடையலாம் என்று படித்து பாதகம் இருந்தால் அதற்கேற்ப பரிகாரங்களைச் செய்து கொள்ளுங்கள்.




### மகரம்

2020ஆம் ஆண்டு மகர ராசிக்காரர்களுக்கு மகத்துவமான ஆண்டாக அமையப்போகிறது. ஏழரைச் சனியில் விரய சனி முடிந்து ஜென்மச் சனியாக ஆரம்பிக்கிறார். குரு விரையக் குருவாக நீடிக்கிறார். ஜனவரி முதல் மார்ச் வரையிலான கால கட்டத்தில் குடும்பத்தில் கணவன் மனைவி விட்டுக்கொடுத்துப் போங்கள். உங்கள் தொழிலை கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். பெரிதாக எதையும் முதலீடு செய்ய வேண்டாம்.

ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரை கால கட்டத்தில் புதிய மாற்றங்கள் வரும். காரணம் விரய ஸ்தானத்தில் உள்ள குரு உங்களின் ஜென்ம ராசிக்கு அதிசாரத்தில் வருவார். அத்தோடு சுக்கிரன் இந்த கால கட்டத்தில் ஐந்தாம் வீட்டில் ஆட்சி பெற்று சஞ்சரிப்பார்.

குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். காதல் மலரும் சிலருக்கு கல்யாணம் நடக்கும். பெண்களுக்கு நகை சேரும், வீட்டுக்குத் தேவையான ஆடம்பரப் பொருள்களை வாங்குவீர்கள். சிலர் வீடு வாங்குவீர்கள். நம்பிக்கை நீரூற்று கண்ணில் தென்படும்.

ஜூலை முதல் செப்ரெம்பர் வரையிலான கால கட்டத்தில் பண விடயத்தில் கவனமாக இருங்கள். யாருக்கும் பணம் கடன் கொடுக்காதீர்கள். எவ்வளவு சம்பாதித்தாலும் செலவு நெருக்கடியைத் தரும். மன அழுத்தம் ஏற்படும். ஒக்ரோபர் முதல் டிசெம்பர் வரை நல்லது நடக்கும். உங்கள் முயற்சி வெற்றியடையும். நிதி நிலைமையில் இருந்த நெருக்கடி மாறும்.

பணம் பல விதமாக வரும். காரணம் இந்தக் கால கட்டத்தில்தான் குரு பெயர்ச்சியாக உங்கள் ராசிக்கு வந்து சனியோடு சேர்ந்து அமர்கிறார். குரு நீசமடைந்தாலும் ஆட்சி பெற்ற சனியோடு சேர்ந்து நீச பங்க ராஜயோக அமைப்போடு இருப்பது சிறப்பு. நிறைய நல்லது நடக்கும். மொத்தத்தில் மகர ராசிக்காரர்களுக்கு 2020ஆம் ஆண்டு நிம்மதியான ஆண்டாக இருக்கும்.

### தனுசு




ஜென்ம சனி, விரைய குரு என பல அடிகளைத் தாங்கி வந்த நீங்கள் இனி 2020ஆம் ஆண்டை சந்திக்கப் போகிறீர்கள்.

ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை தனுசு ராசிக்கு ஜென்ம சனி விலகப்போகிறது. ஏழரை சனியில் ஐந்து ஆண்டுகள் கடந்து விட்டீர்கள். இனி பாத சனிதான். வேலை, கல்வி, குடும்பம் என பல பிரச்சினைகள் இருந்தன. இந்த ஆண்டு முதல் உங்களுக்கு பல நன்மைகள் நடக்கப் போகின்றன.

சோதனைகளைக் கடந்து விட்டீர்கள் இனி சாதனைகள்தான். வேலைகளை இழந்து தவித்தவர்களுக்கு புதிய நல்ல வேலை கிடைக்கும். குறிப்பாக பிப்ரவரி மாதத்தில் நல்ல சம்பளத்தில் வேலை கிடைக்கும்.

இருளில் தவித்தவர்களுக்கு புதிய வெளிச்ச கீற்று தென்படும். உங்கள் முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் நிம்மதியில்லாமல் தவித்த நீங்கள் இனி நிம்மதிப் பெருமூச்சு விடுவீர்கள். திருமணத்துக்காக காத்திருப்பவர்களுக்கு பேச்சு நடக்கும். ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான கால கட்டத்தில் உங்களுக்கு நல்ல சம்பளத்தில் வேலை நிச்சயம் கிடைக்கும். சிலருக்கு வெளிநாட்டுயோகம் அமையும். திருமணம் கைகூடிவரும், திருமணமாகி குழந்தைகளுக்காக காத்திருப்பவர்களுக்கு புத்திர பாக்கியம் கிடைக்கும். குருபகவான் அதிசாரத்தில் உங்கள் குடும்ப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ஜூலை முதல் செப்ரெம்பர் வரையிலான கால கட்டத்தில் உங்களுக்கு நல்ல விடயங்கள் நிறைய நடக்கும் என்றாலும் பதற்றத்துடனேயே இருப்பீர்கள். ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுங்கள். மனதளவில் தைரியமாக இருங்கள். இனி உங்களுக்கு எல்லாம் நல்லதாகவே நடக்கும். தடைப்பட்ட சுபகாரியங்கள் நடக்கும் ஒக்ரோபர் முதல் டிசம்பர் வரை நிறைய முன்னேற்றங்கள் ஏற்படும். இனி உங்களை தவிர யாராலும் ஜெயிக்க முடியாது உலகம் உங்களுக்கானது என்று உறுதியாக நம்புவீர்கள். மாணவர்களுக்குக் கல்வியில் இருந்த தடைகள் நீங்கும். 2020ஆம் ஆண்டு உங்கள் வாழ்க்கையின் வெற்றிப் படிக்கட்டுகளில் ஏறப்போகிறீர்கள்.

(தொடரும்)




## வாழ்க்கை ஒரு கொண்டாட்டம்

வருடப்பிறப்பு, பண்டிகைக் காலங்கள் யாவும் பசுமைகளாய் உங்களின் நெஞ்சில் நிறைந்திருக்கும். அந்த தித்திப்பான நாள்களைப் பேசப்போனால் பல இனிமையான சம்பவங்கள் கூட, நினைவுக்கு வரும். சரி எதற்காக இவ்விழாக்கள்? இதை எதற்காகக் கொண்டாட வேண்டும்? உங்களின் பலவித அசௌகரியங்களை சந்தோசங்களில் எரிய வைத்தப் பல மாற்றங்களைப் புகுத்தும் மன மருத்துவம்தான் இந்த விழாக்கள். விழாக்களின் காரணங்களைப் புரட்டிப் பார்த்தால்



அதன் ஒவ்வொரு விளிம்பிலும் மனமகிழ்ச்சிகள் விதைக்கப்பட்டிருக்கும். சோகங்களை ஒழித்துவிட்டோம் என்ற கொண்டாட்டம் நிறைந்திருக்கும். இந்த விழா நாள்களில் நம்மிடம் ஏதோ ஒன்று கிடைத்தவிட்டதா? இல்லை. இத்தனை நாள்கள் தேடியது இந்த வருடப் பிறப்பில் வந்து குதித்துவிட்டதா?

எதுவும் கிடைக்கவும் இல்லை. எந்தச் சங்கடமும் போகவும் இல்லை. இருந்தாலும் எல்லாமே அடைந்து விட்டதைப்போல ஒரு சந்தோசம் மட்டும் எப்படி வந்தது?

இன்னும் புரியவில்லையா? சங்கடங்கள் தீர்ந்துவிடும். இனி ஆனந்தம் ஆரம்பமாகும் என்ற அனுமான உணர்வுகள்தான் உங்களைச் சந்தோசப்படுத்துகிறது. ஆழ்மனதில் நிறைந்திருக்கும் இந்த மகிழ்ச்சிகளின் விளைவுகளால் எத்தனை இன்பங்கள்?

யாராவது தவறு செய்துவிட்டால் "இன்றைக்கு நல்ல நாள். அதனால் மன்னித்துவிடுகிறேன்" என்று சொல்கிறீர்கள்.

அதைக் கேட்பவனும் "ஐயா நல்லநாள் அதுவுமா, உங்களைப் புண்படுத்திவிட்டேன். மன்னியுங்கள்" என்று சொல்கிறான்.

நல்வழி பிறக்கும், துன்பங்கள் தீர்ந்துபோகும் என்ற நம்பிக்கையில் ஒரு வருடப்பிறப்பை கொண்டாடுவதுபோல் ஒவ்வொரு நாளையும் கொண்டாடுங்கள். எல்லா நாளையும் ஒரு திருவிழாவாய் நினைத்தால் பிறக்கும் ஒவ்வொரு நாளும் நல்லநாள் தான். நல்ல நாளில் கோபம் வராது. அழுகை வராது. தர்ம சிந்தனை மேலோங்கும். இப்படி வாழ்ந்தால் உங்களின் வாழ்வு மட்டுமல்ல சுற்றியுள்ள சகலமும் பூந்தோட்டமாய்க் குலுங்கும்.

இதேகருத்தை உங்களைச் சுற்றியுள்ள வர்களிடமும் சொல்லுங்கள். மனதில் விருப்பம் நிறைவேறினால் தான் திருப்தி தோன்றும் என்ற உணர்வு மாயை. எதுவுமே சாத்தியமாகாமல் போனாலும் மனம் நினைத்தால் மார்க்கம் உண்டு.

நன்னாளில் மட்டும் மனம் துன்பங்களைச் சுரண்டாமல் அதன் நினைவற்று கிடக்கிறதே அதுபோலவே ஒவ்வொரு நாளும் மனத்தால் துன்பத்தைச் சுரண்ட வேண்டாம். இன்று திருவிழா. அதனால் மகிழ்ச்சியாக இருப்போம் என்று தினமும் சிந்தியுங்கள். உங்களின் தேடல் மட்டுமல்ல தேடல்களையும் தாண்டிய சக்திகள் உங்களிடம் தானாய் வந்து சேரும்.

## 13...

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தூதுக் குழுவினருக்கும் இடையே நேற்று சந்திப்பொன்று நடந்துள்ளது. இந்தச் சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நடந்துள்ளது.

அந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

அபிவிருத்தி மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பாக அறிந்து கொள்வதில் தூதுக் குழுவினர் ஆர்வமாக இருந்தனர். அரசியல் தீர்வுகள் மக்களுக்கான பொருளாதார அபிவிருத்தியுடன் இணைந்து செல்ல வேண்டும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

உதாரணத்துக்கு 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை எடுத்துக் கொண்டால் அதில் உள்ள சில ஏற்பாடுகள் நடைமுறைமுறைச் சாத்தியமற்றவை என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். அவற்றுக்குப் பதிலாக அரசியல்வாதிகள் மாற்றுத்தீர்வுகள் தொடர்பாகச் சிந்திக்க வேண்டும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளிடம் ஒப்படைக்கப்பட்டால் அது பொலிஸ் பணிகளை அரசியல் மயமாக்குவதற்கு வழிவகுக்கும் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வரையான பதவிகளுக்கு மாகாணத்தின் மாவட்டங்களைச் சேர்ந்த மக்களில் இருந்து நியமிப்பது மிகவும் நடைமுறைச் சாத்தியமானது என்றும், இது மொழித்திறன் மற்றும் கலாசார வேறுபாடுகளால் எழும் சிக்கல்களைத் தீர்க்கும் என்றும் குறிப்பிட்டார். என்றுள்ளது.

நெதர்லாந்தின் தூதுவர் தஞ்சா கோங்க்ரிஜ்ப், இத்தாலி தூதரகத்தின் பிரதித் தலைவர் அலெக்ரா பைஸ்ட்ரோச்சி, ருமேனியாவின் தூதுவர் கலாநிதி விக்டர் சியுஜ்தியா, பிரான்சின் தூதுவர் எரிக் லாவெர்டு மற்றும் ஜெர்மனியின் தூதுவர் ஜோன் ரோட் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டு, கோத்தாபய ராஜபக்சவின் அண்மைக்காலச் செயற்பாடுகளையும் பாராட்டியிருந்தனர். (எ)

## பதவியை...

தற்காலிகமாக பதவி நிலையில் கீழிறக்க தேசிய பொலிஸ் ஆணைக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போது களுத்துறை மூத்த பொலிஸ் அத்தியட்சராக கடமையாற்றும் சஞ்ஜீவ பண்டாரவை பொலிஸ் அத்தியட்சராக பதவி இறக்கம் செய்ய தேசிய பொலிஸ் ஆணைக் குழு நடவடிக்கை எடுத்துள்ள நிலையில், அவரது சீருடையில் உள்ள ஒரு நட்சத்திரத்திர அந்தஸ்து அகற்றப்படவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடபெற்றபோது, சஞ்ஜீவ பண்டார கொழும்பு வடக்கு பொலிஸ் அத்தியட்சராக கடமையாற்றியிருந்தார். இதன்போது முன் கூட்டியே உளவுத் துறை வழங்கிய தகவல்களை அவர் கணக்கில் கொள்ளாது செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டுக்கு அமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது. (எ)

## கொட்டத்தை...

டும் வன்முறைக்குத் தூபமிடுபவர்களின் வாய்களுக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பூட்டுப்போட வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தினார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

நாட்டைப் பாதுகாக்கும் ஒற்றையாட்சியை எதிர்த்தும், நாட்டைப் பிளவுபடுத்தும் சமஷ்டியை வலியுறுத்தியும் கருத்துக்களைத் தெரிவித்துவரும் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு உடனடியாகக் கைதுசெய்து சிறையில் அடைக்க வேண்டும் என்று நவ சிங்கள ராவய அமைப்பின் பொதுச்செயலாளர் மாகல் கந்தே சுதந்த தேரர் வலியுறுத்தியிருந்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாட்டைப் பிளவுபடுத்தும் வகையில் தீர்வு கேட்கவில்லை. பிளவுபடாத ஒருமித்த நாட்டுக்குள் அதியுச்ச அதிகாரப் பகிர்வுடன் மூவின மக்களும் ஏற்கும் தீர்வையே அவர்கள் கேட்கின்றார்கள். நாட்டைப் பிரிப்பதோ அல்லது 'தனி ஈழம்' காண்பதோ அவர்களின் குறிக்கோள் அல்ல. இதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

எமது ஆட்சியில் புதிய அரசமைப்பின் ஊடாக அரசியல் தீர்வைக் காண்பதற்கான பணிகளை முன்னெடுத்திருந்தோம். ஆனால் துரதிஷ்டவசமாக புதிய அரசமைப்புக் கைகூடவில்லை. அதனால் அரசியல் தீர்வு முயற்சியும் தோற்றது. தேசிய அரசின் கட்சிகளுக்கிடையில் இருந்த முரண்பாடுகளும் எதிரணியினரின் சதி நடவடிக்கைகளுமே இவற்றுக்குக் காரணமாக அமைந்தன. நாம் இடைநடுவில் விட்ட அரசியல் தீர்வு முயற்சிக்கான பணிகளை இந்த அரசு தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்- என்றார். (எ-22)

## ரயிலுடன்...

வவுனியா கூமாங்கு ளத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான ராஜன் (வயது -35) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்த ரயிலுடன் மோதியே இவர் உயிரிழந்துள்ளார். ஆலடி ரயில் கடவைக்கு 100 மீற்றர் தூரத்தில் இந்த விபத்து நடந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-110,ரி4,222)

## புரிந்துணர்வு...

சிங்கள மற்றும் தமிழ் இனவாத அரசியல்வாதிகள் தங்களின் அரசியலுக்காக வடக்கு, கிழக்கு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை மறைத்து அதனைத் தங்களின் அரசியலுக்காகப் பயன்படுத்தி வருகின்றனர்" எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

சோசலிச மக்கள் முன்னணி நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கில் சமூக பொருளாதார அபிவிருத்தியைத் துரிதமாக மேற்கொள்வதன் மூலம் அந்த மக்களின் பிரச்சினையில் அரைவாசிக்குத் தீர்வைக் காணலாம். இதன் மூலம் ஏனைய பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள சாதகமான சூழல் தானாக ஏற்படும். அத்துடன், அந்தப் பிரதேச மக்கள் எதிர்நோக்கும் ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குத் தேவையான சிறந்த சூழல் இதன் மூலம் ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது.

சிங்கள, தமிழ் ஆகிய இரு தரப்பினருக்கும் இடையில் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வு ஏற்படுவதன் மூலம் இலகுவில் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளலாம். ஆனால், சிங்கள மற்றும் தமிழ் இனவாத அரசியல்வாதிகள் தங்களின் அரசியலுக்காக வடக்கு-கிழக்கு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை மறைத்து அதனைத் தங்களின் அரசியலுக்காகப் பயன்படுத்தி வருகின்றனர்- என்றார். (எ-22)

## விசா...

ஸ்மா அதிபரின் உத்தரவுக்கு அமைய 5ஆம் திகதி இரவு 10 மணி தொடக்கம் நேற்று அதிகாலை 6 மணி வரையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்திய நாட்டவர்கள் 82 பேரும், பாகிஸ்தானைச் சேர்ந்த 12 பேரும், மாலைதீவைச் சேர்ந்த 10 பேரும், நைஜீரியா நாட்டவர் 8 பேரும், பங்களாதேஷ் நாட்டவர் 6 பேரும், சீனாவைச் சேர்ந்த 4 பேரும், கனடாவை சேர்ந்த 4 பேரும் அடங்கலாக மொத்தம் 136 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## எவராலும்...

யுள்ளோம்.

இவ்வாறு தகவல் மற்றும் தொடர்பாடல் இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் கொழும்பு அலுவலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

தேசிய பாதுகாப்பு, பொருளாதாரம், இறைமை ஆகிய பிரதான விடயங்களையே ஜனாதிபதி தேர்தல் பெரும்பான்மை மக்களிடம் எடுத்துரைத்தோம். அதன்படியே ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. இனங்களுக்கும், மதங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும்போது மாறுப்பட்ட முரண்பாடுகளே தோற்றம் பெறும். ஜனாதிபதியின் அக்கிராசன உரை யதார்த்த விடயங்களுக்குப் பொருத்தமானதாக அமைந்துள்ளது. ஜனாதிபதியின் கருத்துக்களை எவரும் கேள்விக்குட்படுத்த முடியாது.

சர்வதேச அமைப்புக்களின் கோரிக்கைளுக்கும், ஒரு தரப்பினரது சுயநல அரசியல் தேவைகளையும் கருத்தில் கொண்டு பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்து, பயங்கரவாத எதிர்ப்பு தடைச்சட்டத்தை கொண்டு வர கடந்த அரசு பெரும் முயற்சிகளை முன்னெடுத்தது.

அதற்கான யோசனையும் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதியும் அப்போது பெறப்பட்டிருந்தது. இந்த உத்தேச பயங்கரவாதத் தடுப்புத் திருத்த சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்ய தற்போதைய அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. நாட்டுக்கும், மக்களுக்கும் தேவையான விடயங்கள் மாத்திரமே இனிச் செயற்படுத்தப்படும்- என்றார். (எ)

## அபிவிருத்திக்கு...

எடுத்துள்ளது என்று திறைசேரி அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டிக் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மருத்துவமனைகள், பெருந்தெருக்கள், பாடசாலைகள், அரச கட்டடங்கள் உட்பட்ப் பெரும் அபிவிருத்திப் பணிகளே இடைநிறுத்தப்படவுள்ளன என்று கூறப்படுகின்றது.

புதிய அரசு பதவிக்கு வந்தவுடன் பெறுமதி சேர் வரி, வருமான வரி ஆகியவற்றை அதிரடியாகக் குறைத்தது. அதனாலேயே இந்த நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் வரை மேற்படி அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப் படாது என்று கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன. (எ)

ராசி அதிர்ஷ்டம்
திகதி 06.01.2020 வெற்றி வாரம் 2730 வர்ணம் மஞ்சள்
மிதுனம் வெற்றி இலக்கங்கள் 04 14 46 56
செவ்வாய் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,525,820/=
07.01.2020ம் திகதி செவ்வாய் கிழமை சிகப்பு நிற டிக்கட்டுக்களாகும்

கொவிஜன வாசனா
D 15 22 51 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 84,344,820/-
சீட்டிழுப்பு வாரம் 542 திகதி 2020 ஜனவரி 05
வர்ணம் மஞ்சள் ஞாயிறு

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1104
சீட்டிழுப்பு திகதி 2020.01.05 ஞாயிற்றுக்கிழமை
R 09 10 66 72

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 844
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.01.06
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 54,422,655/-
வெற்றி இலக்கங்கள் 05 56 69 72 Z

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல: 3284 திகதி: 2020.01.06
நீலம் திங்கட்கிழமை
சுப்பர் தனலஸ் 6602
வெற்றி இலக்கங்கள் 22 35 41 63 W
35,998,605/-



## இன்றைய நாள்

**மேடம்:** நண்பர் மகிழ்ச்சிகரமான தகவல் தருவார். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி பெற, கூடுதல் மூலதனம் செய்விர்கள். சமூகத்தில், நல்ல மதிப்பு வளரும். பெண்களுக்கு தாய்வீட்டு உதவி கிடைக்கும்.

**இடபம்:** மனதில் சஞ்சலம் உருவாகலாம். அனுபவத்தால் நம்பிக்கை வளரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிபெற சீர்திருத்தம் தேவை. சிக்கனம் அவசியம்.

**மிதுனம்:** பேச்சில் சாதுரியம் நிறைந்திருக்கும். நண்பர், உறவினர் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெறும். கூடுதல் வருமானம் கிடைக்கும்.

**கடகம்:** உறவினரின் உதவியால் பெருமை கொள்வீர்கள். மனதில் உற்சாகமும், செயல்களில் சுறுசுறுப்பும் ஏற்படும். தொழிலில் உற்பத்தி, விற்பனை வளர்ச்சி பெறும். பணவரவு அதிகரிக்கும். எதிரிகள் விலகுவர்.

**சிம்மம்:** சிலர்கூறும் அறிவுரை சங்கடத்தை உருவாக்கும். தொழில், வியாபாரத்தில் உள்ள பணி தாமதமாகலாம். வரவை விட செலவு அதிகரிக்கும். ஒவ்வாத உணவை உண்ண வேண்டாம்.

**கன்னி:** முக்கிய செயல் நிறைவேற தாமதமாகலாம். தகுந்த திட்டமிடுதல் வெற்றி பெற உதவும். சக தொழில், வியாபாரம் சார்ந்தவர்களிடம் சச்சரவு பேசக்கூடாது. பணத்தேவை அதிகரிக்கும். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்.

**துலாம்:** செயலில் வசீகர மாற்றம் உருவாகும். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். கூடுதல் பண வருமானம் உண்டு.

**விருச்சிகம்:** புதிய விஷயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் வளர்ச்சி ஏற்படும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** தொடர்பில்லாத பணி குறுக்கீடு தரும். குடும்பத்தினரால் சிரமம் சரியாகும். தொழிலில் கூடுதல் உழைப்பு தேவை. சீரான பணவரவு கிடைக்கும். வாகன பாதுகாப்பில் கவனம் வேண்டும்.

**மகரம்:** செயல்களில் தாமதம் ஏற்படலாம். நல்லோரின் ஆலோசனை நம்பிக்கை தரும். தொழில், வியாபாரத்தில் பணிகளை நிதானமுடன் நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** உற்சாக மனதுடன் செயல்படுவீர்கள். திட்டமிட்ட காரியம் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறையும். நிலுவைப் பணம் வசூலாகும்.

**மீனம்:** வீண்பேச்சு பேசுபவரிடம் விலகுவது நல்லது. நிலுவைப் பணியை நிறைவேற்றுவதால் பதற்றம் குறையும். தொழில், வியாபாரம் சுமாராக இருக்கும்.

# ட்ரம்பின் தலைக்கு 1,750 கோடி!

## ஈரான் அதிரடி அறிவிப்பு



தெஹ்ரான், ஜன. 7
அமெரிக்க அதிபர் ட்ரம்பின் தலையைக் கொண்டு வருபவருக்கு ஆயிரத்து 750 கோடி அமெரிக்க டொலர்கள் வழங்கப்படும் என்று ஈரானின் மூத்த மதகுரு ஒருவர் அறிவித்தார்.

ஈரானின் குவாட்ஸ் படையின் தளபதிதான் சுலைமான். ஈரானின் மிகப்பெரிய இராணுவச் சக்தியாக அவர் கருதப்படுகின்றார். ஈராக் மீதான ஈரானின் படையெடுப்பின் போதும், அதன் பின்னரான ஈரானின் சில இராணுவத் திட்டங்களின்போதும் சுலைமான் ஈரான் இராணுவத்தின் முதுகெலும்பாக இருந்துள்ளார். மட்டுமல்லாமல் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புக்கு எதிரான போரின் சூத்திரதாரியாக அவர் செயற்பட்டிருந்தார். இவர் அமெரிக்காவால் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

சுலைமான் அமெரிக்காவை இலக்குவைத்தார். அதனால்தான் அவரைக் கொன்றோம் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்தார். சுலைமானின் ஜனாஸா நேற்றுமுன்தினம் அடக்கம் செய்யப்பட்டது. அதில் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு மத்தியில் உரையாற்றுகையிலேயே ஈரானின் மூத்த மதகுரு இவ்வாறு தெரிவித்தார். (ம)




# சொந்த மண்ணில் ட்ரம்புக்கு எதிர்ப்பு

வொஷிங்டன், ஜன. 7
"மனிதனுக்கு இன்றைய தேவை வேலைகள், சுகாதாரம், கல்விதானே தவிர முடிவற்ற போர் அல்ல" எனநியூயோர்க்கில்நூற்றுக்கணக்கான போர் எதிர்ப்பாளர்கள் திரண்டு கோஷங்களை எழுப்பினர்.

ஈரான் புரட்சிகரப் பாதுகாப்புப் படையின் தளபதி குவாசிம் சுலைமான் கொல்லப்பட்டமையைத் தொடர்ந்து அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் எந்நேரமும் போர்வெடிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. இந்தப் பின்னணியிலேயே மேற்படி ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது. (ம)

# அமெரிக்கத் தளத்தில் ஈரான் குழு பேயாட்டம்

தெஹ்ரான், ஜன. 7
அமெரிக்காவின் அரச இணையத் தளமொன்றுக்குள் புகுந்த ஈரானிய ஹேக்கர்கள் குழு, அதில் அமெரிக்க எதிர்ப்புசார் கருத்துக்களையும், ஒளிப்படங்களையும் பதிவிட்டுள்ளனர்.

ஈரான் இராணுவத் தளபதியின் மீதான தாக்குதலுக்கு பழிவாங்கலாக இந்த நடவடிக்கையை முன்னெடுத்ததாக அக்குழு தெரிவித்துள்ளது என சர்வதேச செய்திகள் குறிப்பிட்டுள்ளன.

"அமெரிக்க பெடரல் டெபோசிட்டரி லைப்ரரி புரோகிராம்' எனும் இணையதளத்தில் நுழைந்து தளத்தின் பெயரை 'ஈரானிய ஹேக்கர்கள்' என்று இக்குழு மாற்றியுள்ளது.




இந்த தளம் அமெரிக்க குடிமக்களுக்கு அரசாங்க வெளியீடுகளை எந்தச் செலவுமின்றி அணுக வடிவமைக்கப்பட்டுள்ளது. தளத்தின் பெயரை மாற்றிய பின்னர், அவர்கள் ஈரானின் உயர் தலைவரான அயதுல்லா அலி கொமேனி மற்றும் ஈரானின் கொடியின் படங்கள் என்பவற்றையும் அத்தளத்தில் வெளியிட்டுள்ளனர். 'சுலைமானின் பல ஆண்டுகால இணையற்ற அர்ப்பணிப்புக்கு ஒரு வெகுமதி' என்பதை எடுத்துக் காட்டும் படங்களையும் அப்பக்கத்தில் ஹேக்கர்கள் குழு வெளியிட்டுள்ளது. அமெரிக்க ஜனாதிபதிக்கு கன்னத்தில் ஓர் அடியும், அதனுடன் அப்படத்தில் ஈரானிய ஏவுகணைகளும் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



அமெரிக்காவின் தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவத் தளபதி சுலைமானின் ஜனாஸா நேற்றுமுன்தினம் அடக்கம் செய்யப்பட்டது. லட்சக்கணக்கான மக்கள் இறுதி ஊர்வலத்தில் பங்கெடுத்தனர். (ம)

# முத்தமிட அழைத்தாராம் ட்ரம்ப்



வொஷிங்டன், ஜன. 7

ட்ரம்ப் என்னை முத்தமிட அழைத்தார் என்று பொக்ஸ் நியூஸ் செய்திச் சேவையின் முன்னாள் நிருபர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது பல்வேறு பெண்கள் பாலியல் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். 2016ஆம் ஆண்டு அவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டபோது, ஆபாசப்பட நடிகை ஸ்டார்மி டேனியல்ஸ் தொடங்கி பல தரப்பிலான பெண்கள் அவர் மீது அடுக்கடுக்கான பாலியல் முறைப்பாடுகளைத் தெரிவித்துள்ளனர். இந்த வரிசையில் மேற்படி நிருபரும் ட்ரம்புக்கு எதிராக முறைப்பாடு தெரிவித்துள்ளார். (ம)

# உலகின் மிகப் பெரிய பூ!




ஜகார்த்தா, ஜன. 7

இந்தோனேசியாவில் மலர்ந்துள்ள மிகப்பெரிய பூவான ரப்லேசியா அர்னால்டி பூ உலகிலேயே மிகப்பெரியது என்று தாவரவியல் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். இந்தோனேசியாவின் மேற்கு சுமத்ரா தீவில் உலகிலேயே மிகப்பெரிய பூ மலர்ந்துள்ளது. 4 அடி அகலத்திற்கு பிரமாண்ட தோற்றத்தில் உள்ள இந்த பூவுக்கு ரப்லேசியா அர்னால்டி என்று பெயர்.

உலகில் இதுவரை பூத்த மலர்களில் இதுவே மிகப்பெரியது என்று தாவரவியல் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். ரப்லேசியா அர்னால்டி பூக்கும் செடிகள் ஒட்டுண்ணி தாவர வகையை சேர்ந்தவை ஆகும். இந்த செடிகளுக்கு வேர்கள், இலைகள் எதுவும் கிடையா. மற்றொரு தாவரத்தில் வளரும் இந்த செடிகளில் மலர்கள் மலர்ந்து வெளியே வரும் போதுதான், அவை மற்றொரு தாவரத்தில் ஒட்டுண்ணியாக இருப்பதே தெரியவரும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ரப்லேசியா அர்னால்டி உருவத்தில் பெரிதாக இருந்தாலும், அந்தப் பூவில் இருந்து அழுகிய இறைச்சியின் துர்நாற்றம் வீசும். எனவே இந்த மலர் பிணமலர் என்றும் அழைக்கப்படுகிறது.

அதேபோல் உலகிலேயே மிகப் பெரிய பூ என்ற பெருமையை கொண்டிருந்தாலும் இந்த பூவின் ஆயுள்காலம் ஒருவாரம் தான் என்று விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர். (ம)




## வரலாறு பாடபெறுபேறு

க.பொ.த உயர்தரம் 2019 இல் கலைத்துறையில் வரலாற்றுப்பாடத்தை என்னிடம் கற்று உயர்தரச்சித்தி பெற்ற மாணவர்களையும் ஏனைய மாணவர்களையும் வாழ்த்துகின்றேன்.



நிலக்ஷன்
தேசியமட்டம் - 02
மாவட்ட மட்டம் 01 (Old) - 2AB
CCA
வரலாறு - A



பிரசாந்தினி
மாவட்டமட்டம் - 01 (New)
3A
HAC
வரலாறு - A



ரஜீஸ் — மாவட்டமட்டம் - 43 (New) — 3A — DCM வரலாறு - A
றிபேக்கா — மாவட்டமட்டம் - 177 (New) — 2A B — CCA வரலாறு - A
ஜென்சிகா — மாவட்டமட்டம் - 93 (New) — 2A B — CCA வரலாறு - A
மதனபிரியா — (Old) — ABC — CCA வரலாறு - A
நிந்துஜா — மாவட்டமட்டம் - 179 (New) — 2A B — CCA வரலாறு - A
விஜயலாயன் — மாவட்டமட்டம் - 85 (New) — 2A B — HAC வரலாறு - A



பிரகாஷ் — மாவட்டமட்டம் - 56 (New) — 3A — HAC வரலாறு - A
கபில்தாஸ் — மாவட்டமட்டம் - 36 (New) — 3A — CCA வரலாறு - A
சயிதா — மாவட்டமட்டம் - 194 (New) — A 2B — HAC வரலாறு - A
சர்மிகா — மாவட்டமட்டம் - 20 (New) — 3A — HAC வரலாறு - A
தர்சிகா — மாவட்டமட்டம் - 127 (New) — 2A B — HAC வரலாறு - A
மனுசா — மாவட்டமட்டம் - 80 (New) — 2A B — HAC வரலாறு - A
ஜஸ்மினா — மாவட்டமட்டம் - 09 (New) — 3A — HAC வரலாறு - A
லம்சிகா — மாவட்டமட்டம் - 17 (New) — 3A — HAC வரலாறு - A
கீர்த்தனா — (New) — A B C — CCA வரலாறு - A



தட்சாயினி — மாவட்டமட்டம் - 61 (New) — 2A C — VN வரலாறு - A
சானுகா — (New) — A B C — VN வரலாறு - A
கிறிஸ்ரியா — மாவட்டமட்டம் - 50 (New) — 3A — VN வரலாறு - A
சேகயன் — மாவட்டமட்டம் - 06 (New) — 3A — CCA வரலாறு - A
தர்மிகா — (OLD) — 2A S — HAC வரலாறு - A
நிலாயினி — மாவட்டமட்டம் - 13 (New) — 3A — CCA வரலாறு - A
தனுயன் — (New) — ABC — DCM வரலாறு - A
பிரசித் — மாவட்டமட்டம் - 04 (Old) — A 2B — CCA வரலாறு - A
சிந்துஜா — (NEW) — A B C — CCA வரலாறு - A



திவிசனா — மாவட்டமட்டம் - 107 (New) — 2A B — CCA வரலாறு - A
மோகனகீதன் — (New) — 2A S — CCA வரலாறு - A
திலக்ஷன் — மாவட்டமட்டம் - 54 (New) — 3 A — CCA வரலாறு - A
சஜிகரன் — மாவட்டமட்டம் - 180 (New) — A 2B — CCA வரலாறு - A

### B எடுத்தோர் விபரம்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| யதுசா | HAC | B | S.தர்மிலி | HAC | B | டிலோஜ் | CCA | B | S.ராகவி | HAC | B |
| நிவோதினி | CCA | B | A.சிவதர்சி | HAC | B | துவாரகா | DCM | B | பிரியந்தி | HAC | B |
| தர்சன் | DCM | B | தைஜா | HAC | B | S.சலெக்சினி | HAC | B | சனுசியா | CCA | B |
| டினோஜா | CCA | B | K. பிறேமதைா | HAC | B | V.வினோஜா | DCM | B | சைனா | CCA | B |
| கில்டா | CCA | B | எழிலரசி | HAC | B | தெ.தனுசியா | HAC | B | தேனுகா | CCA | B |
| ஜானுசன் | HAC | B | தர்மிகா | DCM | B | S.மேரிஜமேனா | CCA | B | திவ்யா | CCA | B |
| வினுசியா | HAC | B | கீர்த்தனா | HAC | B | க.பிரியங்கா | HAC | B | டிசானி | CCA | B |
| தர்சனா | HAC | B | லக்சனா | HAC | B | மதிரதன் | CCA | B | தயாலினி | CCA | B |
| நிஸாலினி | HAC | B | பிரியா | CCA | B | ஜானு | DCM | B | மேதினி | CCA | B |
| கம்சாயினி | CCA | B | சுபா | HAC | B | அனஸ்ரீனா | CCA | B | கஜானன் | VN | B |
| பிரவிசன் | HAC | B | V.அருணன் | DCM | B | கஜேந்தினி | HAC | B | ஜனுசன் | VN | B |
| விதுசாயினி | HAC | B | பதூசனன் | CCA | B | ஜீவிதா | HAC | B | சங்கீதா | HAC | B |

வாழ்த்துபவர் : வரலாறு கற்பித்த ஆசிரியர்
S.S.Y. பிரதீபன் B.A (Hons)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.7
வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் விக்கி னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.
இதில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குப்பிளான் அறிவொளி விளையாட்டுக்கழக அணி மோத வுள்ளது.
மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை சென் லூட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழக மோதவுள்ளது. (23)

யாழ்ப்பாணம்,ஜன.7
யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியோடு கோண்டாவில் வடக்கு மத்திய சனசமூக நிலையத்தின் வைரவிழாவை முன்னிட்டு கோண்டாவில் வடக்கு மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்கு பற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இதில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழக அணி மோத வுள்ளது. (23)

யாழ்ப்பாணம்,ஜன.7
யாழ்.கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் ஏ.சி பிரிவு அணிகளுக்கிடையிலான லீக் சுற்றுக் கிண்ணத்துக்கான 2020 கால்பந்தாட்ட சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.
இதில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதவுள்ளது. மாலை 5மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மணியந் தோட்டம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மகாத்மாஜி விளையாட்டுக் கழக அணி மோத வுள்ளது. (23)

யாழ்ப்பாணம், ஜன.7
சூரியமஹால் அனுசரணையுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7பேர் பற்றும் வைத்தியர் மயில்லேறும் பெருமாள் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டச் சுற்றுப் தொடரின் அரையிறுதியாட்டம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4மணிக்கு இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)




# சாதித்தது சென்றலைட்ஸ்

யாழ்ப்பாணம், ஜன.7
பா.மயூரதன் ஞாபகார்த்தமாக நடைபெற்ற கே.எி.எி.எி. கிண்ணத்துக்கான கூடைப் பந்தாட்டத் தொடரில் ஆண்களுக்கான ஆட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.
நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் மாலை 5 மணிக்கு இடம் பெற்ற ஆண்களுக்கான இறுயாட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி 66 : 62 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது.
இதில் சிறந்த வீராங்கனையாக சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் கிசாந் தெரிவானார். தொடராட்ட நாயகனாக பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரர் நிசாந்தன் தெரிவானார்.
இறுதி நாள் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவனும், மதிப்புறு விருந்தினராக முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன், நல்லூர் பிரதேச செயலக இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் யுவராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். (23)

# அரையிறுதிக்குள் நவஜீவன்ஸ்



யாழ்ப்பாணம்,ஜன.7
சூரியமகால் ஆதரவுடன் வைத்தியர் மயிலேறும் பெருமாள் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்ட தொடரில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.
இதன் காலிறுதியாட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்றது.
காலிறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன் அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி மோதியது. முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் பல நிமிடங்கள் பலப் பரீட்சை நடத்தினர். 13ஆவது நிமிடத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி வீரர் ரவீசாந் முதலாவது கோலைப் பதிவு செய்ய முதல் பாதியாட்டத்தில் நவஜீவன்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றனர்.
இரண்டாவது பாதியாட்டத்தில் இரு அணிகளும் ஒன்றுக் கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் முகமாக ஆடினர். இதனால் இரு அணிகளாலும் மேலதிக கோல்களை எதனையும் பதிவு செய்ய முடியவில்லை. இதனால் ஆட்ட நேர முடிவில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதி யாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (422-23)

# பமிலியன்ஸ் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஜன.7
அமரர் பா.மயூரதன் ஞாபகார்த்தமாக நடைபெறும் கே.எி.எி.எி கிண்ணத்துக்கான கூடைப் பந்தாட்டத் தொடரில் பெண்களுக்கான ஆட்டத்தில் பமிலியன்ஸ் விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.
நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற பெண்களுக்கான இறுயாட்டத்தில் கே. எி. எி.எி. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பமிலியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 74:53 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனானது.
இதில் சிறந்த வீராங்கனையாக பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணியின் வீராங்கனை சபானா தெரிவானார். தொடராட்ட நாயகியாக கே.எி.எி.எி விளையாட்டுக் கழக அணியின் வீராங்கனை தமிழரசி தெரிவானார். (23)




# ஆண்டு நிறைவும் பொங்கல் விழாவும்

யாழ்ப்பாணம்,ஜன.7
புங்குடுதீவு இறுப்பிட்டி சனசமூக நிலையத்தின் 70ஆவது ஆண்டு நிறைவு மற்றும் பொங்கல் விழாவை முன்னிட்டு நெடுந்தீவு இறுப்பிட்டி சனசமூக நிலையம் இறுப்பிட்டி விளையாட்டுக் கழகம் இணைந்து நடத்தும் விளையாட்டுப் போட்டியும்,பொங்கல் விழாவும் இன்று தொடக்கம் எதிர்வரும் 14ஆம்திகதி வரை இறுப்பிட்டி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.
இதில் உள்ளூர் அணிகளுக்கான கால்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்து, சிறுவர் சிறுமியர் மற்றும் பார்வையாளருக்கான மைதான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் வடக்கு மாகாண ரீதியிலான ஆண், பெண் இரு பாலாருக்குமான சைக்கிள் ஓட்டப் போட்டியும் இடம் பெறவுள்ளன. (23)

# யூனியன் வி.க. வாகை

யாழ்ப்பாணம்,ஜன.7
யாழ்.கால்பந்தாட்ட லீக்கினால் ஏ.சி பிரிவு அணிகளுக்கிடையில் நடத்தி வரும் லீக் சுற்றுக் கிண்ணத்துக்கான 2020 கால்பந்தாட்ட சுற்றுத் தொடரில் ஏ பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.
இதில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)



# மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜன.7

கடந்த ஆண்டு நடைபெற்ற தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுப் பிரிவு பெண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் கிண்ணம் வென்ற தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி கால்பந்தாட்ட பெண்கள் அணி கல்லூரி சமூகத்தால் மதிப்பளிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு கல்லூரி முதல்வர் மணிசேகரம் தலைமையில் நேற்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு இடம் பெற்றது. முன்னதாக கால்பந்தாட்ட வீராங்கனைகள் மாலை அணிவித்து கல்லூரி பான்ட் வாத்திய இசையுடன் பிரதான மண்டபம் வரை அழைத்து வரப்பட்டு மதிப்பளிக்கப்பட்டனர்.

நிகழ்வில் வடக்கு மாகாண உடற்கல்வி உதவி பணிப்பாளர் இராஜசீலன், வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் சுந்தரசிவம்,வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்வி பணிப்பாளர் பார்த்தீபன்,வலிகாமம் கல்வி வலய் உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் கஜேந்திரன் மற்றும் சசிக்குமார், மற்றும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விருப்பிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (23)






## கரப்பந்தாட்டத்தில்

# மகுடம் சூடியது மோகனதாஸ்

தென்மராட்சி,ஜன.7

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் மட்டுவில் மோகனதாஸ் அணி கிண்ணம் வென்றது.

தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடர் நேற்று முன்தினம் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்றது.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் அணியை எதிர்த்து கச்சாய் டைமன்ஸ் அணி மோதியது. ஐந்து செற்கள் கொண்ட போட்டியில் முதல் இரண்டு செற்களிலும் மட்டுவில் மோகனதாஸ் அணி 25:10, 25:9 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மூன்றாவது செற்றில் கச்சாய் டைமன்ஸ் அணி பலத்த போராட்டத்தில் 25:20 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. நான்காவது செற்றில் மீண்டும் ஆதிக்கம் செலுத்திய மட்டுவில் மோகனதாஸ் அணி 25:16 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைச் சுவீகரித்தது. (422-23)

# வீதி ஓட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.7

யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்கமும் யாழ்.மாவட்ட விளையாட்டு பிரிவினரும் இணைந்து யாழ். மாவட்ட ஆண், பெண்களுக்கான வீதி ஓட்டம் எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை கரவெட்டி பிரதேசத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆண்களுக்கு 15 கிலோ மீற்றர், பெண்களுக்கு 10 கிலோ மீற்றர் தூரமும் இடம்பெறவுள்ளன.

பங்கு பற்றவிரும்பும் மாணவர்கள் தமது அதிபர் ஊடாகவும், கழக வீரர்கள் தத்தமது விளையாட்டு உத்தியோகத்தர் ஊடாகவும் விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னதாக யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் விஜிதரன் அவர்களுக்கோ அல்லது தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆசிரியர் சி.சுபாஸ்கரன் அவர்களுக்கோ அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவங்களை அனுப்பியோர் 11ஆம் திகதி காலை 6 மணி தொடக்கம் 7 மணி வரை அடையாள அட்டை மற்றும் மருத்துவச் சான்றிதழுடன் சமூகமளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (422)

# இலங்கை – இந்தியா 2ஆவது ரி– 20 இன்று

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ரி-20 போட்டி இன்று இடம்பெறவுள்ளது. இலங்கை நேரப்படி இரவு 7 மணிக்கு இந்தப் போட்டி ஆரம்பமாகும்.

நடப்பு ஆண்டின் முதலாவது ரி -20 போட்டி நேற்று முன்தினம் இரு அணிகளுக்குமிடையில் நடைபெற இருந்தது. எனினும் மழை காரணமாகக் கைவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. எனவே இரு அணிகளும் எஞ்சியுள்ள இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்றால் தான் தொடரைக் கைப்பற்ற முடியும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

## பெண்களுக்கான கரப்பந்தாட்டத்தில்

# வரணி ஔிர் அணி கிண்ணம் வென்றது

தென்மராட்சி,ஜன.7

தென்மராட்சி பிரதேச செயலக பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் வரணி ஔிர் அணி சம்பியனானது. நேற்றுமுன்தினம் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் வரணி ஔிர் அணியை எதிர்த்து நாவற்குழி விவேகானந்தா அணி மோதியது. இதில் வரணி ஔிர் அணி 25:17, 25:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றுக் கிண்ணத்தைச் சுவீகரித்தனர். (422-23)



# இந்தியாவுக்கு எதிரான போட்டியில் சீனியர் வீரர்களின் பங்களிப்பு தேவை

## குசல் பெரேரா வெளிப்படை

ரி-20 கிரிக்கெட் தொடரில் இந்தியாவை வீழ்த்த வேண்டும் என்றால் சீனியர் வீரர்களின் பங்களிப்பு அதிக அளவில் தேவை என இலங்கை வீரர் குசல் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையில் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. முதலாவது ரி-20 போட்டி மழையால் கைவிடப்பட்டது.

மீதமுள்ள இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்றால் மட்டுமே தொடரை வெல்ல முடியும். இந்த நிலையில் இந்தியாவை வீழ்த்த சீனியர் வீரர்களின் பங்களிப்பு அதிக அளவில் தேவை என இலங்கை வீரர் குசால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

நான் டெஸ்ட் போட்டியில் தொடர்ச்சியாக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. ஆனால் ஒயிட்பால் கிரிக்கெட்டில் இறுதியாக ஆஸ்திரேலியாவில் விளையாடினேன். அதில் சிறப்பாக விளையாடினாலும், என்னுடைய சிறந்த ஆட்டம் வெளிப்படவில்லை. ஆகவே, இந்த தொடரில் எனது சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த முயற்சிப்பேன்.

ஒரு அணியாக இணைந்து விளையாடுவது அவசியம். சீனியர் வீரர்கள் சிறப்பாக செயற்பட வேண்டும். அதேவேளையில், அணியில் சில இளம் பேட்ஸ்மேன்களும், பந்து வீச்சாளர்களும் இருப்பது சிறப்பானது. எங்களுடைய திறமை மீது நம்பிக்கை வைத்து களம் இறங்குவோம்-என்றார்.

# நியூசியை ஒயிட் வாஷ் செய்தது ஆஸி.

சிட்னியில் நடைபெற்ற டெஸ்டில் நாதன் லயனின் அபாரமான பந்து வீச்சு கைகொடுக்க, நியூசிலாந்து அணியை 3:0 என்ற கணக்கில் ஒயிட் வாஷ் செய்தது ஆஸி. அணி. நியூசிலாந்து அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட் போட்டிகள் , 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடி வருகின்றது. இதில் ஆஸ்திரேலியா அணி ஏற்கனவே இரண்டு டெஸ்ட் போட்டிகளையும் கைப்பற்றியுள்ள நிலையில் இறுதி டெஸ்ட் போட்டியில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தீர்மானித்தது. லாபஸ்சாக்னே இரட்டைச் சதமடித்து அசத்த ஆஸ்திரேலியா அணி தனது முதல் இன்னிங்ஸில் 454 ரன்களில் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

தனது முதல் இன்னிங்ஸை ஆடிய நியூசி. 251 ரன்னில் ஆல் அவுட்டானது. அதிகபட்சமாக கிளென் பிலிப்ஸ் 52 ரன்கள் அடித்தார்.

ஆஸ்திரேலியா அணி சார்பில் நாதன் லயன் 5 விக்கெட்டும், பாட் கம்மின்ஸ் 3 விக்கெட்டுக்களையும் சரித்தனர். 173 ரன்கள் முன்னிலையுடன் ஆஸ்திரேலியா அணி தனது 2ஆவது இன்னிங்ஸை தொடர்ந்தது. டேவிட் வோர்னர் சதமடித்து அணியை வலுப்படுத்தினார். பதிலுக்கு லாபஸ்சாக்னே அரைச் சதமடித்து அசத்த அணி ஓர் விக்கெட்டை இழந்து 217 ரன்கள் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. டேவிட் வோர்னர் 111 ரன்னுடனும், லாபஸ்சாக்னே 59 ரன்னுடனும் களத்திலிருந்தனர்.

416 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காக் களமிறங்கியது. நியூசிலாந்து அணியின் கிராண்ட் ஹோம் மட்டும் தாக்குப்பிடித்து அரைச் சதம் அடித்தார். அவர் 52 ரன்னில் அவுட்டானார். இறுதியில், நியூசிலாந்து அணி 136 ரன்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 279 ரன்களால் தோல்வியைத் தழுவியது.

ஆஸ்திரேலியா சார்பில் நாதன் லயன் 5 விக்கெட்டும், ஸ்டார்க் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இந்த வெற்றியின் மூலம் ஆஸ்திரேலியா அணி 3:0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியுள்ளது. இரட்டை சதமடித்த லாபஸ்சாக்னே ஆட்ட நாயகன் மற்றும் தொடராட்ட நாயகன் விருதை வென்றார்.

உச்சிப்பிள்ளையார் துணை

## தென்னிந்திய யாத்திரை

ஆரம்பம் :- 03.02.2020 நாள்கள் :-16

தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி ஊடான யாத்திரை. உச்சிப்பிள்ளையார் 9 நவக்கிரக ஆலயங்கள், பஞ்சபூதத் திருத்தலங்கள், ஆறுபடைமுருகன், குருவாரூர், திருப்பதி, மதுரைமீனாட்சி, இராமேஸ்வரம் உட்பட 60 இற்கு குறையாத ஆலயங்களை தரிசிக்கலாம். விவரங்களை கேட்டறிந்து பதிவு செய்க.

**ஸ்ரீரங்கநாதன் - 077 768 0102, ராஜன் - 077 736 2154**

### சிங்கப்பூர், மலேசியா சுற்றுலா

மலேசியா, சிங்கப்பூர் சுற்றுலா ஆரம்பம் 23.02.2020. 5 இரவு 6 நாள்கள். அனைத்து செலவுகள் உட்பட விவரங்களை கேட்டறிந்து பதிவு செய்க. உணவு பொபே. சைவம், அசைவம், தங்குமிடங்கள் 4ஸ்ரார் அறைகள். விவரங்களைக் கேட்டறிந்து பதிவு செய்க. **077 768 0102, 077 736 2154**

### காசி சீரடி யாத்திரை

ஆரம்பம் :- 03.03.2020 நாள்கள் :-15 யாத்திரீகர் - 15

டெல்லி நாராயணர் உட்பட சுற்றிப்பார்த்தல். ஆக்ரா தாஜமகால் மதுரா கிருஸ்ணஜென்மபூமி பிரேம்மந்திர் அலகாபாத் திருவேணிசங்கமம், கயா சிரார்த்தம் செய்யுமிடம் காசியில் 15 இடங்கள் புத்தகாயா, இராமேஸ்வரம், சீரடிபாபா, சனிதிங்கனாப்பூர் திரியம்பகேஸ்வரர் ஜோதிலிங்கம், நாசிக் பஞ்சவடி உத்திர கோசமங்கை, காளபைரவர் உட்பட விவரங்களை கேட்டறிந்து பதிவு செய்க. உணவு சுத்தமான சைவ உணவு, அனைத்து செலவுகளும் உட்பட

### யாத்திரையில் எமது சேவை

இருவழி விமான ரிக்கட் மூன்றுவேளை சுத்தமான சைவ உணவு காப்பி, ரீ, குடிநீர், தரமான தங்குமிடம் 2பேருக்கு வெஸ்ரன் கொமட் குளியலறை, கட்டில் மெத்தை, இணைந்த அறைகள் AC வாகன வசதி. யாழ், கொழும்பு வாகன வசதி செய்து தரப்படும். (C/1149)01.17)

கலாநிதி.T.ஸ்ரீரெங்கநாதன் மகன் - ராஜன்
59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு - 11
Email:- sriranganathan2601@gmail.com
Face book:- sridevisriranganathanthuraiappa
077 736 2154, 077 768 0102

## A/L PHYSICS

ஆசிரியர் திரு. M.ஸ்பெல்மன் Bsc,PGDE

**A/L - 2022**

ஆரம்பம் - 8/1/2020 புதன் 3.00 pm
திங்கள், புதன், வெள்ளி 3 - 5 pm

**A/L - 2021**

அலைகளும் அதிர்வுகளும்
ஆரம்பம் - 9/1/2020 வியாழன் 6.00 pm

**A/L - 2020**

A/L DAY CLASS, வினாவிடை வகுப்பு
ஆரம்பம் - 8/1/2020 புதன் 5.00 pm

PERSONAL CLASS, GROUP CLASS ஆகவும் கற்கவிரும்பும் மாணவர்களும் தொடர்பு கொள்ளவும்

இடம்
M.S.I வெலிங்டன் திரையரங்கு சந்தி அருகாமை மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு
077 611 6724

## விற்பனைக்கு

மல்லாகத்தில் 7ம் கட்டை ஒழுங்கையில் K.K.S. வீதிக்கு அருகாமையில் நிலபரப்பு 4 குளி 3.23 உடன் விற்பனைக்குண்டு

தொடர்பு: **077 331 1137**

## சீரடி பாபா யாத்திரை

ஆரம்பம் 25.01.2020 சீரடி பாபா தரிசனம் 2 நாட்கள் பாபா சார்பான 7 பல இடங்கள் சனி சிங்கனாப்பூர் திரியம்பகேஸ்வரீர், ஜோதிலிங்கம் பஞ்சவடி, நாசிக் 6 இடங்கள் தமிழ்நாட்டில் பிரசித்திபெற்ற 6 பாபா ஆலயங்கள், தரிசிப்பதுடன் மேல் மருவத்தூரும் தரிசிக்கலாம் 1 நாள் சென்னையில் சொப்பிங் 4 வழி விமான ரிக்கட், 3 வேளை சுத்தமான சைவஉணவு, தங்குமிடம் காப்பி, ரீ, A/C. வாகனவசதி, குடிநீர் உட்பட நாட்கள் 7 விபரங்களை கேட்டறிந்து பதிவு செய்க.

கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
077 768 0102, 077 736 2154

## மரண அறிவித்தல்



### பொன்னுச்சாமி விவேகானந்தராசா

உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுச்சாமி விவேகானந்தராசா கடந்த (04.01.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவகுமாரி அவர்களின் அன்பு கணவரும் ஆதுரன் (பிரான்ஸ்), தவதுரன், சிவதுரன், ஆதுரி, தவதுரி (உடுப்பிட்டி) ஆகியோரின் அன்பு தந்தையும் மகேந்திரராசா (கனடா), பரராஜசிங்கம் (கனடா), சோதீஸ்வரன் (உடுப்பிட்டி), சிவனேஸ்வரன் (கனடா), வசந்தராணி (லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரனும் கிருஷ்ணகுமாரி, இந்திரகுமாரி, இந்திரகுமார், நந்தகுமாரி, அம்பிகா, (கனடா), சந்திரவதனா (கனடா), பங்கையச்செல்வி (உடுப்பிட்டி), காலஞ்சென்ற மகேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வீரபத்திரர் கோயிலடி தெற்கு, உடுப்பிட்டி**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 706 3527 (தவதுரன்)**

## NEW SCIENCE HALL

Kannathiddy Road , Jaffna 0777917611

### CHEMISTRY 2020 DAY CLASS

### K.SIVATHIRAN B.Sc(Hons)

| | | | |
|---|---|---|---|
| Mon | - Inorganic | (1979 - 2019) M.C.Q | 9.30 – 11.30 a.m |
| Tue | - Organic | | |
| Wed | - Physical | | |
| Thu | - Part II ( 2011 - 2019 ) | | 9.30 – 11.30 a.m |
| Fri | - Weekly Exam | | 9.30 – 11.30 a.m |
| Tuesday | - Part – II Questions (2000 – 2010) | | 2.00 – 3.30 p.m |
| Monday | Calculations & Energetics | | 2.00 – 03.30 p.m |
| | General & Gases | | 3.30 – 05.00 p.m |

| | | |
|---|---|---|
| Sat / Sun | - Physical Chemistry Theory ( 2020 Batch ) | 11.45 – 01.30 p.m |
| Sat / Sun | - Inorganic & Energetics Theory ( 2021 Batch ) | 9.30 – 11.30 a.m |
| Sat / Sun | - General Chemistry Theory ( 2022 Batch ) | 7.30 – 09.30 a.m |

### K. MYURRAN 2020 Day Class

| | | |
|---|---|---|
| Inorganic Theory | Saturday | 6.15 a.m – 7.45 a.m |
| Organic Theory | Sunday | 6.15 a.m – 7.45 a.m |

*Weekly Exam Paper Discussion*

Saturday & Sunday 1.30 p.m - 3.00 p.m

ஒவ்வொரு பாட அலகும் ஆரம்பத்தில் இருந்து முழுமையாக கற்பிக்கப்படும்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.